
6.8

# நவராத்திரி
# நாயகியர்




துர்கா - லஷ்மி - சரஸ்வதி பாடல்கள்

கலைமாமணி
டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்




ஆசிரியர்

கலைமாமணி

டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்

நெய்தல் பதிப்பகம்

# நூல் விவரம்


❍ நூற்பெயர் :
**நவராத்திரி நாயகியர்**
**(துர்கா, லஷ்மி, சரஸ்வதி பாடல்கள்)**

❍ ஆசிரியர் :
**கலைமாமணி**
**டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்**

❍ உரிமை :
**எஸ். அம்சவள்ளி**
(W/o, Late. Dr. Ulunthurpettai Shanmugam)

❍ அச்சிட்டோர் :
**பிராசஸ் இந்தியா**
294, இராயப்பேட்டை நெடுஞ்சாலை,
இராயப்பேட்டை, சென்னை - 14.

❍ பதிப்பு : 2011

❍ பக்கம் : 268

❍ விலை : **165/-**

❍ நூலாக்கம் :
**டெலிபாய்ன்ட்**
16, சின்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை - 5.
Ph : 2848 3750


❍ For Sales &
Enquiries Contact : **S. AMSAVALLI**
14, Amirtham Avenue, Bharani Street,
Velacherry, Chennai - 600 042.
Mobile : 9380297675, 9566042884
email : ussankarram@gmail.com
ussankarram@yahoo.com



❍ காப்பிரைட் சட்டத்தின் கீழ் பதிவு பெற்றுள்ள இந்நூலில் இருந்து எப்பகுதியையும் முன் அனுமதியின்றிப் பிரசுரிக்கக்கூடாது. தவறினால் சிவில், கிரிமினல் சட்டங்களின்படி நடவடிக்கை எடுக்கப்படும்.


---


**வெளியீடு : நெய்தல் பதிப்பகம்**
எண் : 5, தங்கவேல் வைத்தியர் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை -5
Phone : 2848 3860
Mobile : 98415 37495
Email : neithalp@yahoo.in



# சண்முகனார் சாஸ்வதமாய் வாழ்கிறார்!

— வாலி —

ஓர்
ஒப்புராயர் இல்லாச்
சுப்புராயச் செட்டியாரும்; பாற்-
கடலில் விளையாது - நற்றாயின்
குடலில் விளைந்த
அமிர்தம்
அம்மையாரும்;

ஆற்றிய தவத்தால்
அரும்பிய பிள்ளை;
தொன்மைத் தமிழ்த்தாயின்
தோளில் தொத்திய கிள்ளை;

என்
உழுவலன்பர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்;
அருங்குண வதியாம்
அம்ச வல்லியாரின்
மஞ்சளில்;
மாங்கல்யத்தில்;
ஒளிவீசி நின்ற
ஒண்முகம்;

இதழ்களில்
இளம் புன்னகையை வைத்து
தன்வயம் எவரையும் ஈர்த்த
தண்முகம்;
நுவலும் பேச்சிலும்.
நோற்கும் பாட்டிலும்.
நுழைபுலம் துலங்க நிற்கும்
நுண்முகம்!

* * *

உருவம் குறில்;
உள்ளம் நெடில்; அவன்
உண்ணா
உயர்தமிழ் குடியிருக்கும் குடில்;
ஆறுமுகனையும்.
ஆனைமுகனையும்.
அதிகம் பாடியதாய்
ஆரைச் சொல்வது அவனை விடில்?

* * *

இவனால் தான்
இவன் பிறந்த
உளுந்தூர்ப்பேட்டை - தமிழ்
எழுந்தூர்ப்பேட்டை ஆனது;
இவன்
இயற்றிய
தனிப்பாடல்களாலும்;
திரைப்பாடல்களாலும்;
கானத்தமிழ்
கடல்கள் தாண்டி -
உலகத்தார்
உட்செவிக்குள் போனது!

* * *

வேங்கடவன்;

வேலவன்;

வேழமுகன்;

வாயு மகன்;

இன்னும்

இறையருள் பெற்ற.....

வேதாத்தரி;

விசிறி சாமியார்;

என

எந்த –

இறையும்;

இறையடியாரும் மிச்சமின்றி.....

இவனது –

பாடுபொருள் ஆயினர்; இவன்

பசுந்தமிழில் தோய்ந்து போயினர்!

* * *

கண்ணதாசன் போல் – இந்தக்

கவிப்பெருந் தகையும்....

பெரியாரிடமிருந்து

பெருமாளிடம் வந்தவன்;

தான்பெற்ற இன்பம் – இந்தத்

தரணிபெற வேண்டி –

ஆன்ம

அனுபூதியை –

வையம் உய்யுமாறு

வண்ணச் சிந்துகளில் தந்தவன்!

* * *

சுருங்கச்

சொன்னால்....

இருந்தமிழ்
இவனது
நாவகம் தன்னில்
சேவகம் செய்தது; இவன்
ஏந்திய
எழுதுகோல் வழி...
அது
அகிலமெங்கும்
அருட்பயிர் தழைக்க - இடை
அறாது ஞானமழை பெய்தது!

* * *

பக்திப்
பனுவல்களை மட்டுமல்ல; அவன்
பாடாத துறை
பாக்கியென்று எதைச் சொல்ல?

* * *

கோடம்பாக்கத்திலும் - அவன்
கோலோச்சிய மேதை;
'சீர்காழி' யும் -
'சிவாஜி' யும் -
அகத்தியனாயும்; சோழ -
அரசை ஆண்ட ராஜராஜனாயும் -
வெள்ளித்திரை
வீதியில்
உலா வர
உளுந்தூர்ப் பேட்டை தான்....
போட்டுக் கொடுத்தான்
பாட்டுப் பாதை!

* * *

அவன்
ககனம் ஏறினான் - தமிழ்
கானங்களை இங்குவிட்டு; அவன் -
இறந்தும்
இறவா திருப்பதை -
இசைக்கிறது
இசைத்தட்டு!

*  *  *

ஆம்;
உளுந்தூர்ப் பேட்டை சண்முகம் - எனும்
உயரிய கவிஞரேறு....
இசையொடு
இசையில் வாழ்கிறான்;
இசை தழுவும் - எண்
திசையில் வாழ்கிறான்!

*  *  *

ஏட்டிலும்
பாட்டிலும் - அவனது
ஏரார் புலமையினை
ஏந்தி நிற்கின்றன....

அவன்
அழகுற -
வடித்து வைத்த
வண்ணத்தமிழ்ச் சொற்கள்; அவற்றின்
வண்ணங்கெடாது காக்கின்றனர்
வாரிசாய் வந்த மக்கள்!

*  *  *

நல்ல மனைவி;
நல்ல மக்கள்;

நல்ல பெயரன்கள்;
நல்ல பெயர்த்திகள்;
இவர்களின்
இதயங்களில் மட்டுமல்ல -
எம்மனோர்
எண்ணங்களிலும்...

சண்முகனார் கீர்த்தி
சாஸ்வதமாய் நிற்கும்;
சமூகம் - அவனது
சிந்துகளிலிருந்து -
வாழ்வாங்கு
வாழ -
கருத்துகளைக்
கற்கும்!

*    *    *

வாலி

## கலைமாமணி
## டாக்டர். உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
## ஒரு சிறு குறிப்பு



கவிஞர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம், விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்ப்பேட்டையில் 10-04-1933 ஆம் ஆண்டு பிறந்தார். தொடக்கக் கல்வியைச் சொந்த ஊரில் கற்று, பின்னர் உயர்நிலை, கல்லூரிக் கல்வியை திருச்சி, அர்ச்.சூசையப்பர் கல்லூரியில் பயின்று, சென்னை பச்சையப்பனில், டாக்டர் மு.வ. அவர்களின் மாணவனாக எம்.ஏ. முதல் வகுப்பில் 1960-ல் தேர்வு பெற்றார். எம்.லிட் ஆய்வும், டாக்டர் பட்ட ஆய்வும் மேற்கொண்டு பட்டங்கள் பெற்றுள்ளார். 1972 வரை அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விரிவுரையாளராகவும், அதன்பின் 1974 வரை, சென்னை சேலையூர் எஸ்.ஐ.வி.இ.டி. கல்லூரியில் துறைத்தலைவராகவும், பேராசிரியராகவும் பணியாற்றினார். 1975 முதல் 1978 வரை தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகத்தில் மொழி பெயர்ப்புத்துறை உதவி இயக்குநராகப் பணியாற்றிய இவரை 1978-ல் அரசு தமிழ் பண்பாட்டு மைய இயக்குநராக நியமித்தது.

நாடறிந்த பாவலராகிய இவர் பெற்ற விருதுகள் பல. சென்னை ஆரோக்ய ஆசிரமம், இவரின் பக்திப் பாடல்களின் சிறப்பைப் பாராட்டி 'பக்த சிகாமணி' (1971) என அழைத்தது. தமிழ் சான்றோர்களின் அமைப்பான திருப்பனந்தாள் பாவலர் மன்றம், இவரின் சந்தக் கவிதைகளைப் பாராட்டி 'இசைக்கவியரசு' (1972) என்ற பட்டத்தை அளித்தது. 1975-ல் தமிழ்நாடு அரசு இயலிசை நாடக மன்றம் மிகச் சிறந்த விருதான 'கலைமாமணி' விருது தந்து தங்கப்பதக்கம் சூட்டி மரியாதை செய்தது. சென்னை உலகசமூதாய சேவா சங்கம் இவரின் தவப்பயிற்சிக்கு 'அருட்செல்வர்' (1983) என்ற பட்டம் சூட்டிற்று. சென்னை இலட்சுமி நாராயணா நிறுவனம், ஒலிப்பதிவுத்துறைப் பக்திப்

பாடல்களில் இவர் முன்னணி வகிப்பதைப்பாராட்டி 'தெய்வீகக் கவிஞர்' (1989) என்ற விருதினை உவந்தளித்தது. சென்னை திருவல்லிக்கேணி முருகனடியார்கள் சங்கம், இராஜா அண்ணாமலை மன்றத்தில் இறை இசை விழா நடத்தி இவருக்கு 'பெருங்கவிஞர்' (1994) எனும் பெருமையைத் தந்தது.

கவிஞர் உ.பே.ச. அவர்கள், அகவுணர்வுப் பாடல்கள், சமுதாயப் பாடல்கள், தேசிய உணர்வுப் பாடல்கள், மொழிப்பெயர்ப்பு பாடல்கள், பக்திப் பாடல்கள், தன் உணர்வுப்பாடல்கள், கவியரங்கப் பாடல்கள், நிகழ்ச்சிப் பாடல்கள் என பல்வேறு துறைகளில் இயற்றிய பாடல்கள் ஐயாயிரத்தை எட்டும் இவர் எழுதிய மகாகவி பாரதியாரின் வரலாற்றை யாழ்ப்பாணம் 'ஈழநாடு' இதழ் தொடர்கட்டுரையாக வெளியிட்டுள்ளது. இவரின் பக்திப் பாடல்கள் மூவாயிரத்திற்கும் மேல் இசைப்பதிவாகி முன்னணிப் பாடகர்களால் பாடப்பெற்று ஒலி நாடாக்களாகவும், குறுந்தகடுகளாகவும், உலகெங்கும் உலா வருகின்றன, மக்களை மகிழ்விக்கின்றன.

இவர் இருபதுக்கும் மேலான சிறந்த வடமொழி தோத்திரப்பாக் களை தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார். அவற்றுள் பம்பாய் சகோதரிகள் பாடிய T.Series தயாரிப்பில் வெளிவந்த ஸ்ரீ வேங்கேடச சுப்ரபாதம், வெளியிடப்பட்ட அன்றே ஒரு லட்சம் ஒலி நாடாக்கள் விற்றதனால் 'தங்கத்தகடு' (Golden Disk) விருதினைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

வானொலி, தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சி, இசைமேடைகளில் இவரது பாட்டும், பேச்சும், அவ்வப்போது இடம்பெறும், திரை உலகிலும் இவர் பல பாடல்களை இயற்றியுள்ளார்.

தமிழ்நாட்டின் பெருங்கவிஞரான இவர் தனது மனைவி திருமதி. அம்சவள்ளியுடன் 48 ஆண்டுகள் இல்லறம் நடத்தி மக்கட் செல்வம் பெற்று, தனது இறுதிக் காலங்களை ஆன்மீகத்தில் பெரும் ஈடுபாட்டுடன் கழித்தார். உலகத் தமிழர்களின் மனதில் குடிகொண்ட அவர் தனது 71 ஆம் வயதில் 24-08-2003ல் இறைவனடி சேர்ந்தார்.

புரத்தில் பிறந்தவர் மகாகவி - ஆம்
எட்டைய புரத்தில் பாரதியார்.
பட்டியில் பிறந்தவர் இரு கவிஞர்
சிறு கூடல்பட்டி கண்ணதாசன் - வடுகப்பட்டி வைரமுத்து
கோட்டையில் பிறந்தவர் சுந்தரம்
பாட்டுக்கோட்டை - யாம்
பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்
அரங்கத்தில் பிறந்தவர் வாலிப வாலி
ஸ்ரீரங்கம் என்னும் திருவரங்கத்தில்
குடியிலே பிறந்தவர் ஒரு கவிஞர்
ஆலங்குடி சோமு
பேட்டையில் பிறந்ததோ பன்முகம்
இசைப் பண் முகம் - அவர்தான் எங்கள்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
தந்தை சுப்புராயர் தாயார் அமிர்தம் - என்றும்
சிந்தை யெல்லாம் பாட்டு அமிர்தம்
எந்தை தமிழுக்கு சண்முகம் அம்சம் - துணைவி
வந்தார் அம்ச வள்ளியாம் அம்சம்.

இறைவனைத் துயில் எழுப்ப சுப்ர - பாதம்
இம்மக்கள் விழித்திட எழுப்பிட இசைப் - பாடல்
எழுப்புவது இவர்வேலை யானால்.

இவர் ஊரென்ன - உளுந்தூர்ப்பேட்டை
பேட்டை துள்ளி ஆடி எழ வைக்கும் பேட்டை

ராஜபாட்டை யாம் உளுந்தூர்ப்பேட்டை
தமிழகத்து பாட்டு தமிழ்ப்பேட்டை

மு.வ.வின் மாணவராம் சண்முகம்
முதன்மையான பேராசிரியராம் சண்முகம்
மொழி பெயர்ப்பு உதவி இயக்குநர் சண்முகம்
தமிழ் பண்பாட்டு மைய இயக்குநர் சண்முகம்
பதவிகளுக்கும் பட்டங்களுக்கும் பிடித்ததொரு சண்முகம்
எங்கள் உளுந்தூர்ப்பேட்டை டாக்டர் சண்முகம்

பெருங்கவிஞர் சண்முகம்
தெய்வீகக் கவிஞர் சண்முகம்
இசைக் கவியரசு சண்முகம்
பக்த சிகாமணி சண்முகம்
கலை மாமணி சண்முகம்
அருட் செல்வர் சண்முகம்

இவையெல்லாம் கவிதை அடைமொழிகள் அல்ல!
உளுந்தூர்ப்பேட்டை மைந்தனின் உன்னதப் பட்டங்கள்

தமிழுக்கு ஒரு உ.வே.சா. - இசை
மெட்டுக்கு ஒரு **உ.பே.ச.** - இவர்
உளுந்தூர்ப்பேட்டை சண்முகம் - மட்டுமல்ல
**உ**லகம் **பே**சும் **ச**ண்முகம் - உ.பே.ச.

சுப்ரபாதம் தந்தவிருது தங்கத்தகடு
எப்பவும் இசைக்கும் உந்தனது குறுந்தகடு
மக்களின் இதயம் மகிழ்ந்து தங்கும்தகடு.
திக்கெலாம் ஒலிக்கும் தேமதுர தமிழ்த்தகடு.

இத்தகைய மாபெரும் கவிஞரின் பாடல்கள்
சித்தமாய்ப் பதிப்பித்து வெளியிடும் நெய்தல்

செய்ததொரு மாபெரும் பாக்கியம், புண்ணியம்
செய்யவைத்த பெருமை **பிரீத்திகாவைச்** சாரும்.
வாய்ப்பளித்த **சாதகப்பறவை சங்கரைச்** சாரும்.
சேய்போல பாடல்களைச் சேமமுறக் காத்திட்ட
உ.பே.ச. குடும்பம் உன்னதமாய் வாழும்.
இனி பேச வேண்டியதிலை உ.பே.ச பண்பாடும்

இனிய மழலைப் பாட்டு
கனிய இயற்கைப் பாட்டு
பணிய பரமன் பாட்டு
துணிய எழுச்சிப் பாட்டு
உணர காதல் பாட்டு
உயர முன்னேற்றப் பாட்டு
மலர குடும்பப் பாட்டு
வளர அறிவுப் பாட்டு
பற்பல தெய்வப் பாட்டு
அற்புதத் தலைவர் பாட்டு
உருக உள்ளப் பாட்டு
மருகா தெளிவுப் பாட்டு
பன்மொழிப் பெயர்ப்பு பாட்டு
பண்டித வித்தகப் பாட்டு
நிப்பாட்டு - நிப்பாட்டு
என்ன பாட்டு இல்லை.
அனைத்தும் சண்முகம் பாட்டு
அத்தனை பாடலும் தந்ததைப்
பதிப்பித்துத் தந்தது நெய்தல்
தமிழுலகுக்கு உ.பே.ச. வின் தரமிகு பாடல்களை
அமிழ்தாய்ச் சுவைத்திட அன்புடன் வெளியிடுகிறோம்.

## பொருளடக்கம்


பட்டீஸ்வரம் ஸ்ரீ துர்கா
சகஸ்நாமம் .................................... 15

பட்டீஸ்வரம்
ஸ்ரீ துர்கா தேவி .................................... 70

துக்கம் நீங்கும் துர்கா .................................... 97

திருமகள் தரிசனம் .................................... 173

வாணி - வா நீ .................................... 225

# பட்டீஸ்வரம் ஸ்ரீ துர்கா சகஸ்நாமம்





# 1. ஸ்ரீ துர்கா சகஸ்வர நாமம்

ஓம் முப்பெரும் தேவி ஸ்ரீ துர்காவே போற்றி
ஓம் மூவுலகத்திற்கும் தாயே போற்றி
ஓம் இமயத்தில் வாழும் உமையவளே போற்றி
ஓம் இரத்தின மண்டபத்தில் எழுந்தருள்வாய் போற்றி
ஓம் மலைகளில் உலாவி மகிழ்பவளே போற்றி
ஓம் எழில்திரள் சந்தனம் மணக்கும் இன்கையாய் போற்றி
ஓம் கணங்கள் சூழ்ந்திருக்கும் கௌரியே போற்றி
ஓம் கற்பக வன மல்லிகை இல்லத்தோய் போற்றி
ஓம் அறமெனும் சிம்மம் அமர்ந்தோய் போற்றி
ஓம் ஏழு யோகினியர் தோழியே போற்றி
ஓம் சித்தர் வித்தியாதார் தேவியர் புகழ் செல்வியே போற்றி
ஓம் சிந்தாமணி ஒளிசிந்தும் கோட்டைத் திருவாயிலோய் போற்றி
ஓம் வான்மகளிர் தாமரைக் கண்கள் நின்கடைக்கண் நோக்கும் பூவிழி போற்றி
ஓம் வாணியின் இன்மொழியும் தோற்கும் தேன்மொழி போற்றி
ஓம் யாமளமந்திரம் ஓதும் கோமளக்கிளி உலாவும் தோளினோய் போற்றி
ஓம் அருகின் கரும் பச்சைத் திருமேனி அன்னையே போற்றி
ஓம் யாரும் நிகரிலாச் சீர்கொள்பெருமித மதர்ப்பினாய் போற்றி
ஓம் மொட்டுகள் அடர் கற்பகக் காடெனும் கட்டுடைகூந்தலோய் போற்றி
ஓம் மன்மதன் வாளெனத் தாழை மடல்செறி கோதையேயோய் போற்றி
ஓம் மாணிக்கச் சுட்டி அசைந்தாடும் நெற்றி நடு மணி விளக்கே போற்றி

ஓம் மாறனின் அம்புகளாம் மலர்கள் செறி கேசத்தோய் போற்றி
ஓம் எட்டாம் பிறைநெற்றி முத்துச்சரம் தவழ் வட்ட முகத்தோய் போற்றி
ஓம் இருள்மேகம் விலக்கும் ஒளி நிலா வதனத்தோய் போற்றி
ஓம் திங்களில் செவ்வாய் சேர்ந்ததெனத் திகழும் குங்குமப் பொட்டினோய் போற்றி
ஓம் வானவில் போலும் புருவ வடிவழகே போற்றி
ஓம் மாறனின் வில்போலும் புருவ நடுகஸ்தூரு மணக்கும் மானே போற்றி
ஓம் ஆம்பல் மலரணி, செவிகளைத் தொடும் அங்கயற் கண்ணியே போற்றி
ஓம் பாற்கடல் வெள்விழி நடுபூத்த கரு நீல அல்லி எனத்திகழ் கண்மணிபோற்றி
ஓம் பதும மலர் மகரந்தம் நாடும் கருவண்டுக் கருவிழியோய் போற்றி
ஓம் அலைதவழ்கரை ஓரம் நஞ்சென அஞ்சனம் கொஞ்சும் தடங்கண்ணாய் போற்றி
ஓம் காமனின் கூர்மலர் ஆயுதம்போல் கணவனைச்சாடும் நீள்விழி போற்றி
ஓம் சோமனின் ஒளி வழி முகத்தடாகம் நீந்தும் மீன்விழி போற்றி
ஓம் நல்முத்துச் செறி வட்டத் தாடங்கம் அசை செவியோய் போற்றி
ஓம் மகர மீன்வடிவ குண்டலங்கள் ஆடும் மனோன்மணி போற்றி
ஓம் மாணிக்கக் குழை ஒளி தாமரை முகம் மலரும் மாதங்கி போற்றி
ஓம் தேன் ஊறும் கன்னங்கள் குங்குமச் சாந்து திகழ் சிவாயை போற்றி
ஓம் கோவைப்பழம் உதடு கொத்தும் கிளி நாசி வாலையேபோற்றி
ஓம் எள்ளுப்பூ, சண்பகம் என்பதோ இருமருங்கும் எழில் மூக்குத்தியோய் போற்றி
ஓம் மலர்சிந்தும் தேன்சொட்டோ முத்துப் புல்லாக்கு மனங்கவர் மலை மகளே போற்றி

ஓம் ஆடும் புல்லாக்கு அது மேலுதடு மறைக்கின்ற அழகென்ன அம்பிகே போற்றி

ஓம் சரபேசருக்கு முத்தம் தரத் துடிக்கும் மெல்லிதழ் தயவுடைத் தாயே போற்றி

ஓம் அரங்கு முன்திரைபோலப் பற்களை மறைக்கின்ற உதடமை அம்மை போற்றி

ஓம் உள்ளொளி மறைப்பதுபோல் உள்ளதோ அத்திரை உத்தமியே போற்றி

ஓம் நிலவொடு கூடிய இளங்கதிர் போன்றது நின் பவளஇதழ் நகையோய் போற்றி

ஓம் விதையின் முளைபோன்ற பற்களோ மந்திர பீஜங்களோ போற்றி

ஓம் அழுத்தமும் நெருக்கமும் அமைந்த அவை வெளிப்படுமோ அரிது பேசுவோய் போற்றி

ஓம் மறைகள் மலர் திருவாயில் தாம்பூலமும் மணக்கும் மாலினியே போற்றி

ஓம் நவமணிக்காதணி கன்னக் கண்ணாடியில் சுடர்விடும் சோதி போற்றி

ஓம் ஆதிசங்கரர் அணிந்த தாடங்கமும் திகழும் அகிலாண்டேஸ்வரி போற்றி

ஓம் கமலமும் தூவும் மகரந்தமோ இல்லை மஞ்சளோ காமாட்சி போற்றி

ஓம் கமல மலராள் நாணும் கன்னங்கள் ஒளி வீசும் காசி விசாலாட்சி போற்றி

ஓம் பரமனின் ஆனந்தப் பெருக்கிணைத் தாங்கிடும் பேழையெனும் போற்றி

ஓம் மங்களக் மோவாயோய் போற்றி

ஓம் கழுத்தினில் சரபேஸர் கட்டிய மாங்கல்ய மங்கை போற்றி

ஓம் கஸ்தூரிக் குழம்பில் விளை கமலமலர்த்தண்டுக் கழுத்தின் மென்மை போற்றி

ஓம் சங்குக் கழுத்து சாய்ந்தாடும் அழகென்ன சங்கரி சாம்பவி போற்றி

ஓம் முத்துச்சரம் அங்கு முழுமதி ஒளிவட்டம் மோகனவல்லி போற்றி

ஓம் மென்மையும் வெண்மையும இருவாட்சி மல்லிகை மேன்மைக் கரங்கள் போற்றி

ஓம் தங்கத்தோள் வளை நவரத்ன அணிகலன் தாங்கிடும் தோள்கள் போற்றி

ஓம் கோள்களின் ஒளியும் நிறம் மங்கச் செய்திடும் வளையல்கள் வாழி போற்றி

ஓம் வைடூர்ய வளை ஒளி கவசமோ, நின்கைகள் கமலங்களோ போற்றி

ஓம் கொடிபோலும் கைகளும் துளிர்போலும் விரல்களும் அசைகின்ற அழகுபோற்றி

ஓம் தாமரைக் கரம் தேடி வந்ததோ சூரியன் கங்கண அணிகள் போற்றி

ஓம் பவளக்கொடியதன் கணுக்களோ மோதிரம் பரமேஸ்வரி போற்றி

ஓம் பாக்கியம் தரவல்ல சங்கு சக்ர ரேகை உள்ளங்கை வண்ணம் போற்றி

ஓம் பதுமத்தின் குருத்தென நகங்களும் விளங்கிடும் பட்டீஸ்வரத்தோய் போற்றி

ஓம் அட்டிகை மலர்மாலை அலங்கார மார்புநடு ஆகாயத்தோற்றம் போற்றி

ஓம் கௌஸ்துப மணி அதுவும் காந்தமாய்ச் கவர்ந்திடும் கற்பகவவல்லி போற்றி

ஓம் சரபேசர் வழி மணியோ மார்புநுனிக் காம்பழகு கன்னியாகுமரி போற்றி

ஓம் ரதிமாறன் மணமேடை பூரண கும்பமோ எழில் மார்பின் திரட்சி போற்றி

ஓம் ஒலியாலே உயிரூட்டும் மந்திரகும்பமோ ஓங்காரிஸ்தனங்கள் போற்றி

ஓம் இடைக்கொடியில் முளைத்த இருகனிகளோ உந்தன் தடமார்பு நகில்கள் போற்றி

ஓம் மலைபோன்ற மார்பிலே குங்குமப்பூக் குழம்பு மணம் வீசும் மாண்பு போற்றி

ஓம் தாமரை மொட்டினை வண்டுகள் மொய்ப்பனவோ தாயின் முலைக் காம்பு போற்றி

ஓம் சரபரின் ஆசையோ சிவப்பு நிறத்தாவணி தயாசாகரி போற்றி

ஓம் நீள்முதுகின் வனப்பிறகுட ஈடேதும் இல்லையே நீலாயதாட்சி போற்றி

ஓம் ஏழிலம் பாலையோ ரோமக்கொடியதன் கருநிறக்கோடு போற்றி

ஓம் நீர்ச்சுழலோ தொப்புள் ஆனந்தப் பெருவெள்ளம் நீந்தலாமே போற்றி

ஓம் கடலலைபோல் சுருள் மூன்று மடிப்புகள் தமிழ் மூன்றுமோ போற்றி

ஓம் புலர்காலை அருணனின் பொன்னிறக் கிரணங்கள் இடை ஆடையோ போற்றி

ஓம் ஏழுகொத்துச் சலங்கை தங்க ஒட்டியாணம் எத்தனை அழகு போற்றி

ஓம் மேகலையும் அரைஞாணும் சேருமிடம் சேலை செருகுமிடம் எக்கு போற்றி

ஓம் தங்கநூண் கோர்த்து ரத்தினங்கள் பதித்துச் சார்த்திய பட்டு போற்றி

ஓம் மலைவாழைத் தண்டுகள் தொடைகளென விளங்கிடும் மரகதவல்லி போற்றி

ஓம் இடை நடுவில் விசிறியென மடிப்பமை கொசுவங்கள் நடனமாடும் போற்றி

ஓம் மலைமுகடும் நாணும் முழங்காலின் பேரழகு கலையரசியே போற்றி

ஓம் மன்மதனின் அம்பறாத் தூணிபோல் கணுக்கால்கள் வளையவருமே போற்றி

ஓம் பனாங்குருத்தும் வந்து உவமையாய் முன் நிற்கும் பாதங்கள் தாங்கும் போற்றி

ஓம் தண்டை சலசலக்கச் சரண கமலங்கள் தனி ஆவர்த்தனம் போற்றி

ஓம் தங்க வளையல்கள் இரத்தினத் தொங்கலொடு சதிராட்டம் போற்றி

ஓம் காக்கின்ற கேடயம் உள்ளங்கால் என்பதோ பகைவரை மிதிக்கும் போற்றி

ஓம் கூர்மாவதாரக் கண்ணனின் முதுகுபோல் புறங்கால்களும் போற்றி

ஓம் கால்விரல்களின் ஒளி சூரியனையும் மிஞ்சுங்ம கண்கொளாக் காட்சி போற்றி

ஓம் சக்கரம், சாமரம், மத்ஸ ரேகை காட்டும் தளிர்ப்பாதங்கள் போற்றி

ஓம் கோடி அமரர் தலை கூடும் இடம் உன்பாதம் குளிர்நிலவே போற்றி

ஓம் கருணையே உருவமாய் அமைதியின் நிலையமாய்க் கனிந்திருப் போய் போற்றி

ஓம் புற அழகு எதற்கு இயற்கையாய் இருக்கிறாய் அழகோ அழகு போற்றி

ஓம் இன்பரசம் சிருங்காரம் இதுதான் என உணர்த்தும் அன்புருவே அம்மா போற்றி

ஓம் பெயராலும் வடிவாலும் செயலாலும் சிறப்பாலும் சிவமங்களா போற்றி

ஓம் நீராரும் சிவனுக்கு நேராகிப் படைத்தல் செயும் தேவி பவாணி போற்றி

ஓம் துக்கத்தைக் களைகின்ற உருத்திர சக்தியே துர்காவே போற்றி

ஓம் ஊழிக்காலத்தே உருவெலாம் ஒடுங்கச்செய் ஈசனின் சக்தி போற்றி

ஓம் மங்களப் பொருளுக்கு மங்களங்கள் நல்கும் சர்வமங்களா போற்றி

ஓம் ஞானியரின் தவநிலை உச்சத்தில் குருவாகும் மோனி உமா போற்றி

ஓம் மார்கழி நோன்பினில் பெண்களின் துணையாகும் காத்தியாயனி போற்றி

ஓம் நன்மையும் இன்பமும் நாள்தொறும் நல்கிடும் நல்லவள் 'பத்ரா' போற்றி

ஓம் மலையரசன் மகளாகப் பிறந்ததால் அவனுக்குப் புகழ்தந்தனை போற்றி

ஓம் தூய்மையே வடிவாக மாசெலாம் நீக்கிடும் தோன்றாத் துணையே போற்றி

ஓம் பேரின்பம் தருகின்ற சிவனாரின் சக்தி நீ பெரிய நாயகி போற்றி

ஓம் அரக்கரை அழித்திட சினத்தொடு எழுந்திட்ட ஆங்கார சண்டி போற்றி

ஓம் உயிர்க்குலம் வாழ வழிகாட்டி உய்விக்கும் உயர்ந்த தாயே போற்றி

ஓம் நீயும் ஒரு ரதிதேவி நிர்மல ஞானத்தைத் தூண்டுகிற சக்தி போற்றி

ஓம் விரும்பியதை வழங்க வரும் மங்கள தேவதா வேற்காட்டு நீலி போற்றி

ஓம் காலத்தை இயக்குகிறகாளி நீயே நீவிர கௌமாரி போற்றி

ஓம் தங்கமய அண்டத்தில் எல்லையிலா உயிரினங்கள் தந்த ஹேமா போற்றி

ஓம் வீரமிகு கணவனை மக்களைப் பெற்றதோர் வீராவே போற்றி

ஓம் கபாலமும் சூலமும் கையிலே ஏந்தியே களிக்கின்ற கௌரி போற்றி

ஓம் சரபரின் சக்தி நீ பத்தினி குறிதவறா சாமுண்டியே போற்றி

ஓம் நவராத்ரி எட்டாம் நாள் நலமெலாம் தரவரும் சாம்பவியே போற்றி

ஓம் வினையிலே மாட்டி விட்டு விளையாட்டுக் காட்டிடும் 'மாயாதந்த்ரா' போற்றி

ஓம் உட்பொருளை உணர்த்த ஓராயிரம் தந்திரம் உணர்த்துவாயே போற்றி

ஓம் என்றும் இளையவளே குண்டலினி சக்தியே இளந்தருணியே போற்றி

ஓம் அதனதன் இயல்பிலே அதை அதை இயக்கிடும் தர்மதாவே போற்றி

ஓம் அறங்கள் விளங்கவே கடுந்தவம் புரிகின்ற ஆதி சக்தியே போற்றி

ஓம் விண் மீன்கள் ஒளிபெறவும் வெட்டவெளி வழிதரவும் கண்ணசைப் பாய் போற்றி

ஓம் அரனின் ஆற்றல் நீ விளையெலாம் ஒரு நொடியில் அகற்றவல்லாய் போற்றி

ஓம் மறைப்பதும் அருள்வதும் மகத்தான் ஆளுமை மாஹேஸ் விரிபோற்றி

ஓம் கள்ளமில்லா மனம் கலப்பற்ற மகிழ்ச்சி பிள்ளைக் குணத்தோய் போற்றி

ஓம் முற்றத்துறத்தோடிான் மூச்சாகி ஒடுங்குவாய் மூகாம்பிகே போற்றி

ஓம் பாலைப்பிரித்தெடுத்து தூயதையே சுவைக்கும் அம்ஸவாஹினி போற்றி

ஓம் பாக்யா எனப்பெறும் பகலவன் பண்பெலாம் பாங்குற அமைந்தாய் போற்றி

ஓம் உடல் மனம் ஆன்மா பலம்பெறத் தைரியம் ஊட்டுவாயே போற்றி

ஓம் மாறாமல் மறையாமல் என்றும் இருப்பவளே மகமாயி நித்யை போற்றி

ஓம் பக்திசெய்தால் உந்தன் பக்கத்தில் வரலாமே பட்டீஸ்வரத்தோய் போற்றி

ஓம் எல்லாப் பயமும் எமபயமும் போக்கிடவே வல்லவளே செல்வி போற்றி

ஓம் வீணையை மீட்டிடும் மாதங்கி மந்த்ரிணி மதுரை மீனாட்சி போற்றி

ஓம் கலைகளின் காவல்நீ கலைகளைச் சுவைத்திடும் ரசிகையும் நீயே போற்றி

ஓம் உன்னிடமே ஆனந்தம் உள்ளதால் வெளிநாட்டம் ஒருசிறிதும் இல்லோய் போற்றி

ஓம் 'அ' முதல் 'க்ஷ' வரை ஐம்பத்தோரெழுத்தையும் மாலையாய் ஏற்றாய் போற்றி

ஓம் மோகத்தை உருவாக்கி அகற்றவும் செய்திடும் மோஹினியே போற்றி

ஓம் எல்லாமே நிறைவுற்று எப்போதும் மகிழ்ந்திருக்கும் எல்லையிலாய் போற்றி

ஓம் கரியவள் அரியவள் பெரியவள் கலிதீர்க்க உரியவளே போற்றி

ஓம் நானெனும் அகந்தையை நீக்கியே முக்தியை நாடச்செய்வாய் போற்றி

ஓம் பேரின்ப வெள்ளத்தில் கரைகாணாக் களிப்பிலே ஆடுவாயே போற்றி

ஓம் சிருங்காரச் சுவையின் சித்திரம் அத்திரம் செயலாக்குவாய் போற்றி

ஓம் செல்வத்தை வேண்டுவோர் அள்ளிக் கொள்க என்றே செப்புவாயே போற்றி

ஓம் சீரரையும் வெல்லும் சூரிநீ சுகந்திநீ கந்தனின் சக்தி போற்றி

ஓம் வெற்றிதரும் சாங்கிலியால் பகைவரை விரட்டுகிற கொற்றவையே போற்றி

ஓம் நன்றிகொன்றதனால் தந்தையை அழித்த பதிவிரதையே போற்றி

ஓம் தாரம் எனும் ஓங்காரம் நின்னிடத்தில் ரீங்காரம் 'தாராத் மிகா' போற்றி

ஓம் கொடிபோல மெல்லியலாய் இருந்தாலும் உலகையெலாம் மடி வளர்ப்பாய் போற்றி

ஓம் தாரைபோல் ஓங்கி வானெலாம் வளர்கின்ற பேரொலியாய் போற்றி

ஓம் யோகியர் உள்ளத்தில் ஒருகணம் மின்னலாய் ஞானம் அளிப்பாய் போற்றி

ஓம் இலைகூடப் புசியாமல் பெருந்தவம் புரிந்தாயே அபர்ணாவே போற்றி

ஓம் உன்னிடம் தோற்பவரும் பெரும்பேறு பெற்றவர்கள் விஜயாவே போற்றி

ஓம் நீலவண்ணம் உந்தன் கோல வண்ணம் அன்றோ 'நீலிரஞ்சித' போற்றி

ஓம் உன் அருகில் வந்தவுடன் உன்குணம் என்குணம் 'அபராஜிதா' போற்றி

ஓம் சங்கரீ என்றவுடன் மங்களம் அருள்கின்ற சத்தியமே போற்றி

ஓம் கற்புடை மாதர் கன்னியர் மகிழ்ந்திடக்கைகொடுப்பாய் போற்றி

ஓம் ஒன்பது துர்க்கையெனப் பிரிவதில் ஒருநாமம் 'சைலேந்திர தனயை' போற்றி

ஓம் பூமிபோல் செறிந்தவள் விரிந்தவள் பரந்தவள் தேவி 'மஹீ' போற்றி

ஓம் சிறுமிபோல் விளையாடும் திரிபுரசுந்தர பாலாவே போற்றி

ஓம் ஞானத்தின் அருவி நீ வாணி நீ வளர்கலை நீ சரஸ்வதியே போற்றி

ஓம் தாமரைச் செல்வி நீ லக்ஷ்மிநீ சௌபாக்யம் தருபவளே போற்றி

ஓம் பரம் பொருளை அறிவார் யார் பக்கத்தில் உள்ளாய் நீ அறிந்து கொண்டோம் போற்றி

ஓம் இருந்தாலும் புலப்படாய் என்பதுவும் உண்மையே பரதேவதையே போற்றி

ஓம் மூன்று வேதசாரம் காயத்ரி மந்திரம் அதன்சாரம் நீயே போற்றி

ஓம் பேரறிவைத் தருகின்ற பிரம்ம வித்யை நீயே மூதறிவு 'வித்யா' போற்றி

ஓம் வானதி நி கங்கையென வந்தவள் நீ பேரமுதம் தந்தவளே போற்றி

ஓம் ஆழம் காணோமே அற்புதம் நீ அதிசயம் நீ வேதவல்லியே போற்றி

ஓம் பேரொளி, பெருமிதம், பெரியதெல்லாம் நீயே பெருமை மிக்கோய் போற்றி

ஓம் தாட்சாயணீ, சஞுத, சார்ந்தவர் சஞ்சலம் போக்கிடுவாய் போற்றி

ஓம் நீதிக்குப் போராடி தட்சனையும் அடக்கிய பேராண்மையோய் போற்றி

ஓம் கோபங்கொள் கணத்தினில் சூழ்ஒளி நெருப்பிலே துவளச்செய்வாய் போற்றி

ஓம் அழித்தலும் அறம்தான் என்பதை உணர்த்திடும் அம்மையே மாரி போற்றி

ஓம் ஆசையைத் தூண்டியே மீண்டும் உயிர்ப்பிக்கும் ஆற்றல் மிக்கோய் போற்றி

ஓம் வடிவிலே நினக்கு நிகர் அழகிலே நினக்கு இணை யாரும் இலையே போற்றி

ஓம் கரும்பிலே வெளிப்பட்டுக் கனிந்த மந்திரினி யாழ்மீட்டுவோய் போற்றி

ஓம் மந்திர வடிவாகி மக்களைக் காக்கின்ற மகிஷமர்த்தனி போற்றி

ஓம் எரிகின்ற தீயின் கனலாகும் சுடராகும் ஜ்வாலாமுகி போற்றி

ஓம் பரம்பொருளை விட்டுப் பிரியாத பான்மையளே 'பராரக்தா' போற்றி

ஓம் பார்வையில் தீவைத்துப் பகைவரைப் பொசுக்கிவிடும் 'ஜ்வாலாக்ஷி' போற்றி

ஓம் தீயோடு புகை சூழ்ந்த பார்வையளே ஜெகன் மாதா 'தூம்ரலோசனா' போற்றி

ஓம் இருகரைக்குள் நடக்கும் நதிபோல அமைதியளே இன்பமயமே போற்றி

ஓம் ஸ்ரீபுரச் சுற்றினிலே ஓடையைக் காக்கின்ற 'குல்யாதேவி' போற்றி

ஓம் மென்மையும் பேரழகும் கருணையும் தவழ்கின்ற மேன்மையளே போற்றி

ஓம் குவிந்த நகில் பாலூட்டி குவலயத்தைக் காக்கும் கோடி கோடீஸ்வரி போற்றி

ஓம் வாராஹி, சங்கேதா சேனைத் தலைவியே தண்டி நியே போற்றி

ஓம் தலையைத் துண்டாடித்தனிஞானம் ஊட்டுகிற 'சின்னமஸ்தா' போற்றி

ஓம் சிறிதும் பயமின்றி அறிவால் உலகாளும் உறுதிகொண்டாய் போற்றி

ஓம் நவகன்னியரில் நீ ஜெயகன்னி உனைப்போற்ற அவம் இல்லையே போற்றி

ஓம் தோள்தந்து துணையா வாளேந்திவருவாயே 'ஜெயங்கரீ' போற்றி

ஓம் சண்டனையும் முண்டனையும் சாய்த்த செருக்கினோய் சாமுண்டியே போற்றி

ஓம் சரண்என அவர்கூற அபயம் என்றாய் நீயே சண்டமுண்டேசி போற்றி

ஓம் அபயம் என்றாலும் அக்கிரமம் தலைதூக்க அவரைமாய்த்தாய் போற்றி

ஓம் ஒன்பது துர்க்கையிலே ஒருதுர்கை வினைநீக்கும் 'பத்ரகாளி' போற்றி

ஓம் தீ சூழ்ந்த போதிலும் நேர்வந்து காத்திடும் 'வன்னிதுர்கை' போற்றி

ஓம் அமரரா அசுரராயார் நல்லோர் அவர்பக்கம் சமர்புரிந்தோய் போற்றி

ஓம் யோகினியர் சூழ ஸ்ரீசக்ர நடுவிலே வீற்றிருப்பாய் போற்றி

ஓம் வலிவிற்கும் வலிவாகி வாழ்விற்கும் வாழ்வாகும் 'பிரபலா'வே போற்றி

ஓம் அன்ன நடை கண்டால் யார் மயங்கார் அம்மா 'ஹம்ஸகாமிநீ' போற்றி

ஓம் சும்பனை வதைத்ததோர் காளி நீ கௌசிகீ சூலினியே போற்றி

ஓம் கண்ணுக்குத்தெரியாத சூட்சும் வடிவத்தில் க்த்தி சுழற்றுவாய் போற்றி

ஓம் வீரத்தின் விளைநிலமே பேரொளி வடிவமே 'சோபனவிக்ரமா' போற்றி

ஓம் நிசும்பனின் வீரியம் நிர்மூல மாக்கிய கதம்ப வனத்தோய் போற்றி

ஓம் அண்டியவரைக் காக்க அயராது விழித்திருக்கும் 'நிர் நித்ரா'வே போற்றி

ஓம் எல்லாம் கரைந்திடினும் ஊழியிலும் உன்தோற்றம் இருப்பாக இருக்கும் போற்றி

ஓம் அறத்தின் சின்னமாம் சிம்மத்தில் ஏறிவரும் அரசகுமாரி போற்றி

ஓம் குந்துமணிமாலை வேடுவப் பெண்ணாகும் குடிசைவாசி போற்றி

ஓம் நரசிம்மரின் சினம் அடங்கட அவருடலைச் சுவைத்தவளே போற்றி

ஓம் எட்டியவரை நீளும் எண்கைகள் கொண்டவளே பட்டீஸ்வரத்தோய் போற்றி

ஓம் ஏழுலகும் அண்ணாந்து பார்க்கின்ற உயரத்தில் நீளுபவளே போற்றி

ஓம் சிம்மாசனம் அமர்ந்து ஜகமெலாம் ஆள்கின்ற ஒருபெருந்தலைவி போற்றி

ஓம் தேவர்கள் மூவர்கள் யாவருக்கும் தலைவி ஸ்ரீராஜ ராஜேஸ்வரி போற்றி

ஓம் நிலவின் ஒளிக்கீற்று நீதரும் பார்வை உலகம் செழிக்கவே போற்றி

ஓம் சிற்றரசு உடலென்றால் பேரரசு உள்ளம் கற்றுக் கொடுப்பாய் போற்றி

ஓம் மறையேதும் கூறவோ, கிளியோடு பழகுவாய் மங்கையர்க்கரசி போற்றி

ஓம் போற்றுதற்கென்றே நீயுளாய் நாங்களும் போற்றினோம் போற்றி போற்றி

ஓம் ஊழியில் உலகத்தை உண்பவள் நீயன்றோ 'மஹாசனா' போற்றி

ஓம் கடல் வற்றுமோ உன் கருணையும் வற்றாது காப்பவளே போற்றி

ஓம் கருஞ்சிவப்பு நிறம் காட்டுவாய் ஒருநேரம் கனகாங்கியே போற்றி

ஓம் துட்டருக்கிடமில்லை தொலைவிலே துரத்துவோய் மட்டார்குழலி போற்றி

ஓம் அட்டலட்சுமிகளில் வீரலட்சுமி உந்தன் அநுக்ரஹம் வேண்டும் போற்றி

ஓம் சேனை வீரர்கள் போல் ஞானியும் ஒருவீரன் போற்றுவார் உன்னைப் போற்றி

ஓம் பெருவிழாத்திருநாளில் அவர்களோடு நீயும் விளையாடுவாய் போற்றி

ஓம் திக்குத்தெரியாத காட்டிலும் திசைகாட்டும் 'வனதுர்கா'வே போற்றி

ஓம் சட்டியில் தீயிட்டுச் சதிராடிப் பகைபோக்கும் முத்துமாரி போற்றி

ஓம் நாடியதையெல்லாம் தேடியே வரச்செய்யும் வைஷ்ணவீ வாழி போற்றி

ஓம் காட்டிலே மலர்கின்ற பூக்களைச் சூடிடும் 'வனமாலீ' போற்றி

ஓம் அகழ்வாரைத் தாங்கும் நிலமகளாய்ச் சுழலும் 'வாராஹீ' போற்றி

ஓம் அருவிபோல் பேச்சாளர் அகத்தில் உறைபவளே அறிவுறுத்துவோய் போற்றி

ஓம் தானே தனித்தவளாய் வேறு துணை இல்லாத ஏகாந்தமே போற்றி

ஓம் நீ அமரும் சிங்க வாஹனம் சிவன்தானோ யார்அறிவார் போற்றி
ஓம் ஒருதந்தம் உடைத்து மாபாரதம் தந்த கணநாதன் தாயே போற்றி
ஓம் நரசிம்மன் தோலை ஆடையாய் உடுத்தவளே நவதுர்காவே போற்றி
ஓம் ஒருநேரம்போல மறுநேரம் காணாத ஒளி உருவே போற்றி
ஓம் உன்வேகம் அடக்கயாராலும் இயலாது தடையிலாதோய் போற்றி
ஓம் சரிநீதி தாராத அரசரைச் சாய்க்கவரும் சமநீதியோய் போற்றி
ஓம் தாழ்மையையே சிந்திக்கும் நீசரைத் தாழ்த்த வரும் சௌதாமினி போற்றி
ஓம் சுதர்சன சக்கரமே எதிர்ப்பட்டும் உன்முன்னே சோர்ந்துவிடுமே போற்றி
ஓம் பிறைநிலாவைச்சூடும் மகராணி நீயன்றோ சந்த்ரகலா போற்றி
ஓம் ஊமத்தம் பூ எனினும் உவப்போடு ஏற்பாயே மாங்காட்டுத்தாய் போற்றி
ஓம் சங்காலே தாடங்கம் குந்துமணி ஆரங்கள் சங்கரியின் வேடம் போற்றி
ஓம் யானை மதநீரில் குழைத்த செந்தூர நாமத்தோய் போற்றி
ஓம் மாதுன் திருமேனி மதுவின் மணம் வீசும் தீதகற்றுவாய் போற்றி
ஓம் வேடர்குலத் தலைவி, வித்தகி, நர்த்தகி விதிமாற்றுவாய் போற்றி
ஓம் கருமேக நிறங்காட்டிக் கண்ணைக்கவர்ந்திழுக்கும் சியாமளாதேவி போற்றி
ஓம் இடைசிறிது என்பதால் உடைஇறுக்கம் தளரும் நடையுடையாய் போற்றி
ஓம் கருங்கூந்தல் நடுவே மயிற்பீலி அசைந்தாடும் பெருந்தேவியே போற்றி
ஓம் கரும்பச்சை நிறம்கொண்டதமால இலைபோல திருமேனியோய் போற்றி
ஓம் பாசமும் வில்லும் பகைவரை அழிப்பதற்கே நேசம்மிக்கோய் போற்றி
ஓம் எலும்புமாலை தான் ஏனம்மா ஏந்திழை அகந்தை அழிப்போய் போற்றி
ஓம் இரண்யனின் இரத்தத்தைக் குடித்த நரசிம்மர் இரத்தம் குடிப்போய் போற்றி

ஓம் வராஹரின் உக்கிரம் தணிய அவட்டாகோரைப்பல்
உடைத்தெடுத்தாய் போற்றி
ஓம் அதிகாலை, அந்திக் கதிரவன் நிறச்சடை கருமேக மேனி போற்றி
ஓம் நான்முகன் தலையினை மாலையாகக் கொண்டோய்
நாகப்பூணூலோய் போற்றி
ஓம் தட்சனது யாகத்தை அழித்ததால் தேவர்கள் தலைகுனிய
வைத்தாய் போற்றி
ஓம் வீரபத்திரன் வீரம் வெளிப்படத் தூண்டினாய் விவேக சீலிபோற்றி
ஓம் நீரிலே ஆழ்ந்தாலும் நீவந்து கைதருவாய் 'ஜலதுர்கா' போற்றி
ஓம் பெருமிதம் கொண்ட பேரரக்கர் உயிரைப் பெயர்ப்பவளே போற்றி
ஓம் பிறர்ஏவல் சூனியங்கள் அணுகாது அன்பரைப் பேணும் முக்கண்ணி
போற்றி
ஓம் குத்துவேல் தரையில் சிக்குவதுபோல் குரல், கர்ஜனை செய்வாய்
போற்றி
ஓம் துட்டரை அழிக்கவே கோரைப்பல் கொண்டாய் துர்காவே போற்றி
போற்றி
ஓம் கோளினால் வந்திடும் தீதெலாம் போக்குவாய் கொடுத்து
வைத்தோம் போற்றி
ஓம் அற்பமந்திரத்தால் பிறரை ஆட்டுவிப்போரைப் பிடித்து
ஆட்டவல்லோய் போற்றி
ஓம் சிவனைப்போல் நீயும் புலித்தோல் ஆடையில் சிந்தைவைத்தாய்
போற்றி
ஓம் அவரத்தைக் கையில் கங்கணமாய் அணிந்த நவரசத்தோய்
போற்றி
ஓம் பலி பூசை ஏற்கும் பேய் பிசாசங்களை பலிசெய்குவாய் போற்றி
ஓம் உணர்விழக்கச் செய்யும் சம்மோஹனாஸ்திர உலுத்தரை
ஒழிப்பாய் போற்றி
ஓம் காமத்தால் தளர்ந்ததுபோல் காட்டி ஏமாற்றியே அசுரரை
அழிப்பாய் போற்றி
ஓம் காமனின் லீலைகளைக் கணவனிடம் காட்டி காதல் செய்குவாய்
போற்றி

ஓம் கர்ப்பூரம் மணக்கும் தாம்பூலம் சுவைப்பதற்கு இச்சைவைப்பாய் போற்றி

ஓம் பக்தரைத் தன்பால் ஈர்க்கும் பரவச வித்தை செய்வோய் போற்றி

ஓம் காமத்தால் தடுமாறும் அசுரர்களின் கனவில் சோதிப்பாயே போற்றி

ஓம் கனவிலேயே அவர்கள் மடியுமாறு செய்யும் கபடவேடதாரி போற்றி

ஓம் யாவரும் வசீகரம் ஆவதல்லால் வேறு பாதையில்லை போற்றி

ஓம் அண்டியவர் விருப்பத்தைக் கண்டுகொண்டே அவரை அரவணைப்பாய் போற்றி

ஓம் வாய்வழியே தீயை வரவழைப்பாய் அம்மா 'ஜ்வாலாமுகீ' போற்றி

ஓம் விழிவழியே நெருப்பை வெளிப்படுத்துவாய் அம்மா 'ஜ்வாலநேத்ரா' போற்றி

ஓம் உடல் முழுதும் சுடரை உமிழவும் செய்வாயே 'ஜ்வாலாங்கா' போற்றி

ஓம் கடும் சுரத்தால் கலங்கும் அடியவரின் கொடுந்துயரம் களைவிப்பாய் போற்றி

ஓம் ஈட்டிகள் என்றாலே ஈஸ்வரிக்கு ஆசை – வினை ஓட்டுவாயே போற்றி

ஓம் எதிர் ஈட்டி வந்தாலோ இல்லைஎன ஆக்கிவிட்டு புதிராவாய் போற்றி

ஓம் 'சல்ய' மந்திரத்தால் மலைகளெலாம் குலைய சாடுவாயே போற்றி

ஓம் துரியநிலை என்னும் நான்காம் நிலையத்திற்கு உயரவைப்பாய் போற்றி

ஓம் குறையில்லா நிறைவடிவே குணமென்னும் உயர்குன்றே மறையவளே போற்றி

ஓம் உருத்திரனின் சக்தியே ஒடுக்கத்தில் ஆழ்பவளே மூன்றாமவளே போற்றி

ஓம் உடல்தாபம் ஊத்தாபம் உயிர்த்தாபம் போக்கும் குளிர்தடாகமே போற்றி

ஓம் எதிரிகளைத் தகர்த்துத் தரைமட்டம் ஆக்கிவிடும் 'தரநாசிநீ' போற்றி

ஓம் ஏழ்மையை இல்லாமல் போக்கியே செல்வத்தை ஈந்திடும் தாயே போற்றி

ஓம் எதற்கும் அடங்காரைத் தீயவரைச் சினந்து அடக்குவாயே போற்றி

ஓம் வேட்டைக்காரன் வேடம் சிவன்போட அவனோடு வேடத்தியே போற்றி

ஓம் விலகாத பிணிகளையும் விரட்டியே நல்வாழ்வு தருவாயே போற்றி

ஓம் பிரம்மராட்சதர் என்னும் பேரின்னல்விளைப்போரைக் கும்மிடுவாய் போற்றி

ஓம் பிரம்மனின் சக்தியே ஜபமாலை ஏந்திடும் ப்ராம்ஹிதேவி போற்றி

ஓம் கொடுமைகள் செய்வோரைக் கூட்டமாய் வேரோடு மடியச்செய்வாய் போற்றி

ஓம் வைநாயகீநீ விநாயகரின் சக்தி வரம்தருக போற்றி போற்றி

ஓம் நவக்ரயங்களின் தொல்லை உனைத்துதித்தால் இல்லை நாகாபரணி போற்றி

ஓம் தக்க வேளையில் தருக்கர் செருக்கடக்கும் சொக்கன் துணைவி போற்றி

ஓம் தக்கது இது என்றும் தகாதது இது வென்றும் சாற்றுவாயே போற்றி

ஓம் அண்ணன் கண்ணனிடம் அளவற்ற அன்பினோய் அசலாம்பிகை போற்றி

ஓம் அக்கினி விண்மீன் கிருத்திகையும் நீதானே அருளமுதே போற்றி

ஓம் தோலாடை மரவுரி ஏவலைத் தீர்ப்பவள் சுகுணாம் பிகை போற்றி

ஓம் சங்கின் வெண்மையும் தாழம்பூ மஞ்சளும் ஒன்றுசேர் வண்ணம் போற்றி

ஓம் உள்ளத்தின் ஆழத்தில் உள்ளதை வெளிப்படுத்தா அல்லியல்கோதை போற்றி

ஓம் போர் என்ற வுடனே பூரிக்கும் தோளுடையோய் பூரணியே போற்றி

ஓம் யார் வந்து எதிர்த்தாலும் நேர்வந்து நில் என்னும் யாமளையே போற்றி

ஓம் உன்னோடு போர் புரிவோர் என்னதவம் செய்தாரோ உனைப் புகழ்வாரே போற்றி

ஓம் அழிப்பதில் நிலைத்தவள் அழித்தால்தான் ஆக்கம் அசையா உறுதியோய் போற்றி

ஓம் சந்தோஷம் அளிப்பதில் தாய் உனக் கீடிட்லலை சாந்தஸ்வரூபிணி போற்றி

ஓம் நலிவென்பதில்லாமல் நல்லுடல் அளிப்பாயே நந்தினியே போற்றி

ஓம் போகமும் தருவாய் யோகமும் தருவாயே புண்ணியவதி போற்றி

ஓம் உள்ளும் புறமும் ஒரு தியதும் இல்லா உண்ணாமுலை போற்றி

ஓம் கள்ளத்தால்பாவக் கசடு சுமந்தாரைக் கடிந்து திருத்துவோய் போற்றி

ஓம் ஒருருவம் வைத்து உனைப்பற்ற முடியுமோ பேரிலாயே போற்றி

ஓம் கொடுமையை அகற்றவோ மாற்றவோ பயங்கர வடிவெடுப்பாய் போற்றி

ஓம் அன்னத்தை ஊட்டும் அன்னையாய் வருவாயே அன்னபூரணி போற்றி

ஓம் இல்லையெனும் வறுமை இல்லாமல் செய்பவளே இதயநாதமே போற்றி

ஓம் சிந்தனை தூய்மை செயல்யாவும் தூய்மை வந்தனை செய்வோம் போற்றி

ஓம் அணிமாதி சித்திகள் அனைத்தும் தருவாயே ஆதாரசக்தி போற்றி

ஓம் வேண்டியதை விளைவிக்கும் பேராற்றல் தருகின்ற வேல்நெடுங் கண்ணி போற்றி

ஓம் உண்மை எது என்று உற்றறியவைப்பவளே உலகம்மையே போற்றி

ஓம் ஊனை உருக்கி உள்ளொளியைப் பெருக்கும் தேனம்மையே போற்றி

ஓம் நல்லோரை நல்லோராய் நடுநிலையில் வைத்திருக்கும் வில்வாம்பிகை போற்றி

ஓம் உள்ளொன்று புறம்ஒன்று சூதுவாது எட்டா எல்லாம்பிகை போற்றி

ஓம் அமரர்கள் தொழுதேத்தும் ஆனந்தவல்லியே ஆதிபராபரை போற்றி

ஓம் மந்திரம் ஒடுங்கமனம் ஒடுங்க 'அசபா' மந்திரத்தோய் போற்றி

ஓம் கலப்பையை ஆயுதமாய்க் கையிலே ஏந்திய காரணியே போற்றி

ஓம் பஞ்சம் பஞ்சாகப் பறக்கச்செய் சதாட்சி பட்டீஸ்வரத்தோய் போற்றி

ஓம் நிலைத்தது அதனின்று கிளைத்ததால் சலனமொடு அசைபவளே போற்றி

ஓம் வரிப்புலிமேல் ஏறி வருபவளே புலித்தோள் அமர்பவளே போற்றி

ஓம் சத்வ குணத்தாளே சச்சிதானந்தியே சாரதாம்பிகை போற்றி

ஓம் மந்தகுணத்தை ஒரு மகிஷலமன மிதிக்கும் விந்தியாவே போற்றி

ஓம் சந்திரனின் சக்தி சௌம்யாவும் நீயே குண்டலின் தேவி போற்றி

ஓம் காலைத் கதிர் வாங்கும் தூய பனி நீர் போன்றோய் கமலாம்பிகே போற்றி

ஓம் ஈராயிரம் கைகள் எனலாமோ உன் உருவில் பேராயிரத்தோய் போற்றி

ஓம் கலப்பே இல்லாத காரிகையேம கண்மணியே கரும்பு வில்லாளே போற்றி

ஓம் பருத்த சிம்மம் உன் பாதத் தருகே அமரும் விருத்தாம்பிகே போற்றி

ஓம் நாராயணன் தங்கை நாராயணி சங்கு சக்கரத்தோய் போற்றி

ஓம் பெருவீரம் உன்வீரம் எளியோர்க்கு உபகாரம் பிரமராம்பிகை போற்றி

ஓம் சிவாம்சம் பிந்து சக்தி அம்சம் நாதம் ஒளி ஒலி வெளி போற்றி

ஓம் ஆளுமை, பொறுமை, புகழ், செல்வம், ஞானம் உறுதிகொண்டாய் போற்றி

ஓம் தத்துவத்தின் மூலம் தத்துவத்தின் சாரம் தத்துவ முடிவு போற்றி

ஓம் தத்துவம் தாண்டி தனி நின்ற சக்தியே தாரகமே போற்றி

ஓம் ஆபத்துக் காலத்தில் அமிர்தத்தை ஊட்டி ஆதரிப்பாய் போற்றி

ஓம் தேவர்கள் தேவிகள் வடிவங்கள் யாவிலும் தேவி நின் சாயல் போற்றி

ஓம் தெய்வீகம் தங்கவே தேவி நினைத்துதிப்பார் வானோர்கள் வாழ்வே போற்றி

ஓம் உன்முகம் பார்த்தபின் மற்றொரு முகம் பார்க்க ஒவ்வுமோ தாயே போற்றி

ஓம் காலம் என்பதெது காளியே நீதானே காலரூபிணி போற்றி

ஓம் இருகால இடைவெளி சந்தியாதேவி உன் வழிபாடு போற்றி போற்றி

ஓம் மேனிஒளியோ கோடி மின்னல்களின் ஒளியோ மாணிக்கவல்லி போற்றி

ஓம் வானிலே வலம் வரும் ராணியே ரேணுகா வடிவாம்பிகா போற்றி

ஓம் பதினான்கு புவனங்கள் 'ஹ்ரீம்' எனும் ஒலியாலே பாதுகாப்பாய் போற்றி

ஓம் முதலிலே தோன்றிய மூலப் பிரகிருதி மிருதுபதாம்பிகை போற்றி

ஓம் எதைச் சொல்லி விளக்கிட எல்லாமே நின்விளக்கம் மருவத்தூரோய் போற்றி

ஓம் மதுகைடபரை அழிக்க மாயையாய் வந்தாயே மதுரமின்னம்மை போற்றி

ஓம் உள்நோக்கி தியானத்தில் ஒருமுகம் ஆவோரின் மனோன்மனீ போற்றி

ஓம் முதியோர்க்கும் முதியவளே மூத்தவளே முன்நின்று கதிகாட்டுவாய் போற்றி

ஓம் இடைநாடி மேலேற வாமா எனும் நாமம் உடையவளே போற்றி

ஓம் ஆணிவேர் இறங்க ஆதிவிதை நீதானே அருணாம்பிகை போற்றி

ஓம் படைப்பவள் நீமுடிவில் துடைப்பவளும் நீதான் பரிமளாம்பிகை போற்றி

ஓம் தன்னிச்சையாய் எதையும் சாதிக்கவல்லவளே தர்மசம்வர்த்தனி போற்றி

ஓம் அண்டமும் பிண்டமும் அத்தனையும் உன்வசம் அடக்குவாயே போற்றி

ஓம் உயிர்க்குலம் இன்புற உபப்புறுழ் பொருளெலாம் அளிப்பவளே போற்றி

ஓம் வேள்வியில் இடுபொருள் தேவர்களைச்சேரும் விருப்பம் உடையோய் போற்றி

ஓம் வியப்பின் வியப்பு நீ எளிமைக்கு எளிமை நீ விமலநாயகி போற்றி

ஓம் சித்திரப்பட்டாடை கட்டிட ஆசைகொள் சித்திரமே போற்றி

ஓம் நஞ்செலாம் நீக்கி நல்லமுதம் தருகின்ற அஞ்சுகமே போற்றி

ஓம் வேதங்கள் மந்திர சாரங்கள் என விளம்பும் வாகேஸ்வரி போற்றி

ஓம் வேதங்கள் போற்றும் வித்தகிவைரவி யோகாம்பிகை போற்றி

ஓம் மூலாதாரம் முதல் ஆக்ரைவரை ஊர்கின்ற நாகவடிவே போற்றி

ஓம் தானிருக்கும் இடம் ஞானியர்க்கே உணர்த்தும் தந்திரக்காரி போற்றி

ஓம் ஞானியரும் உன்னை மோனத்தில் மட்டுமே காண்கின்ற 'குஹ்யா' போற்றி

ஓம் காரிரவு வடிவத்தோய் காலனை உணர்த்தும் கண்டாதாரீண்டைய போற்றி

ஓம் அறுபத்து நான்குகலை ஐம்மூன்று சந்த்ரகலை தெளிவிப்பாயே போற்றி

ஓம் மயில்மேல் அமர்முருகன் கைவேல் சக்தியென மனங்குளிர்வாய் போற்றி

ஓம் சிவனையும் மயங்கச்செய் மன்மதன்கையில் மலரம்பு தந்தாய் போற்றி

ஓம் எவராயினும் உன்முன் சரணாகதி அடைவர் 'வச்யாதிநீ' போற்றி

ஓம் இடையழகு நடையழகு மடியழகு அணியழகு எல்லாமே அழகு போற்றி

ஓம் நீயேகதிஎன்பார் தாயாகத் தாங்கிடும்ஓர் நீலாயதாட்சி போற்றி

ஓம் தீப்பிழம்புமாலை தீக்கோட்டை நடுவே தீயாகத் தெரிவாய் போற்றி

ஓம் கள்ளையும் சுவைத்துக் களிநடம் ஆடுகின்ற காளிகாம்பிகை போற்றி

ஓம் பதியை விட்டகலாப் பதிவிரதை 'ஸ்வாஹிஸிநீ' பாகம்பிரியாள் போற்றி

ஓம் தேவர்களின் சக்தியெலாம் திரண்டவளே மகிஷா சூரசம்ஹாரி போற்றி

ஓம் பெருயானைப் பிடிநடைப் பீடு மிக்கோய் அம்மா பிரஹந்நாயகி போற்றி

ஓம் மதியாதோர் எதிர்வந்தால் மதயானை போன்றவளே மதுவன நாயகி போற்றி

ஓம் தோன்றித் தோன்றி மறையும் வான்மின்னல் கொடிபோன்ற சோதிமின்னம்மை போற்றி

ஓம் இரத்த பீளு ன் இரத்தம் சொட்டாமல் வற்றச் செய் ஒப்பிலா நாயகி போற்றி

ஓம் போர்க்களத்தில் பானம் உன்கண்ணில் செவ்வானம் ஆர்பரிப்பாய் போற்றி

ஓம் அரக்கரின் தசையிலே குத்தீட்டி சொருகிடும் அமர்க்களத்தாய் போற்றி

ஓம் வாகை சூடியபின் வானவர் போற்றிடும் வரதாயகி போற்றி

ஓம் ஹேம் கூட மலை உச்சியில் உலாவரும் ஹேமலதாம்பிகை போற்றி

ஓம் கற்பகத் தருப் போலக் கேட்டதைக் கொடுத்திடும் கருணாம்பிகை போற்றி

ஓம் சந்தானப் பேறு தந்திடும் தாயம்மை சம்பத்கரியே போற்றி

ஓம் வந்து முன் நின்றுடட நொந்தவர் வாட்டங்கள் கொந்துவாயே போற்றி

ஓம் திருவே உனைத்தேடக் குருவன்றி வழியில்லை மறைமுகத்தோய் போற்றி

ஓம் வறுமைப் பாறையை வஜ்ராயுதம்போல் நொறுக்கும் திருநிலைநாயகி போற்றி

ஓம் நிலவுமுன் கமலமாய்ச் சுருங்குவர் அற்பர்கள் நீலாம்பிகை போற்றி

ஓம் பிணியெனம் இருள் போக்கும் பெருஞாயிறு நீ ப்ராபயை போற்றி

ஓம் பாவம் கிளைக்காமல் வேரோடு வீழ்த்துவாய் பண்மொழி நாயகி போற்றி

ஓம் பிறப்பிறப்பெனும் பெருங்காட்டைப் பொசுக்கி வெளியேற்றுவாய் போற்றி

ஓம் பஞ்சுமுன் தீப்போலப் பகைவரை எரிக்கின்ற பங்கயவல்லி போற்றி

ஓம் அம்மையெனும் வெந்நாகம் அதைக்கொத்தும் மயிலாகும் அபயாம்பிகை போற்றி

ஓம் களையெனக் கயவரை அகற்றிடும் தெய்வமே கனகதுர்க்கா போற்றி

ஓம் வலிப்பு எனும் மானை வரிப்புலி போல் துரத்தும் வல்லாம்பிகை போற்றி

ஓம் மனக்குழப்பம் அகற்றி அஞ்சேல் எனக்கூறும் மலைவளர்காதலி போற்றி

ஓம் யானைமுன் சிங்கம்போல் காசநோய் ஓட்டிடும் யாழ்மென்மொழி போற்றி

ஓம் குறியில்வரும் பிணிஎல்லாம் அறநீக்கும் குணவதி குந்தளநாயகி போற்றி

ஓம் நெஞ்சைப் பிளக்கும் இருமலை இளைப்பை நீக்குவாய் நிமலை போற்றி

ஓம் செல்லும்வழி அல்லல்தரும் பேய் பிசாசுகளின் செருக்கு நீக்குவாய் போற்றி

ஓம் வாதப்போர் அடக்கியே வாழவினைச் சீராக்கும் பாலினும் நன்மொழி போற்றி

ஓம் அறியாமை, ஆணவம், பிடிவாதம், வெறுப்பு, ஆசை நீக்குவாய் போற்றி

ஓம் பொல்லாங்கு நீங்கிட நல்லவழி காட்டிடும் புவனநாயகி போற்றி

ஓம் போரென்று மூண்டபின் வெற்றியைத் தரவல்ல பூங்கோதை நாயகி போற்றி

ஓம் இரத்த பித்தம் மற்றும் தொண்டைநோய் நீக்கிடும் வெற்பின் மடக்கொடி போற்றி

ஓம் மாலுக்குள் மாலை விளைவித்து சிவனையும் மோகதத்தில் ஆழ்த்தினாய் போற்றி

ஓம் மூர்க்கரைக் குத்திஎறி முள்ளீட்டி போன்றவளே முருதவள்கோதை போற்றி

ஓம் தொடங்கும் பணி எல்லாம் துர்க்கையை நினைத்துத்தான்
அடியார்கள் துணையே போற்றி
ஓம் குட்டம் குல்மம் நீரிழிவைத் துரத்தும் முத்தாம்பிகை போற்றி
ஓம் உடலுள் மறைந்து மனவேதனைதரும் பிணி நீக்குவோய்
போற்றி
ஓம் உயிர்க்கு யிராய் நின்று பக்தருடன் நட்புக்கொள் உதவிநாயகி
போற்றி
ஓம் குலங்காக்கும் மகராசி இறையார் வளை அம்மை உலக நாயகி
போற்றி
ஓம் உடலாலும் உளத்தாலும் உனைநெருங்கி வருவோரின்
உயிர்காக்கும் பெற்றி போற்றி
ஓம் மிலேச்சரின் கொட்டம் மிதிபடச் செய்வபளே மேகலலாம்பிகை
போற்றி
ஓம் எட்டுபைரவர் சக்தி இரத்த வாடை வீசும் செந்நிறப்பைரவி
போற்றி
ஓம் அடக்கி ஆள்கின்ற அச்சத்தின் வடிவம் நீ அஞ்சல்நாயகி போற்றி
ஓம் பார்த்தால் பயமூட்டும் பச்சை நாயகி நீ பந்தாடு நாயகி போற்றி
ஓம் போர்முனைக்கு வருவார் புறமுதுகு காட்டச் செய்
மாழையங்கண்ணி போற்றி
ஓம் எந்த வ்யூகத்தையும் தந்திரமாய்க் கலைக்கும் இருள் நீக்கி
அம்மை போற்றி
ஓம் போரென்னும் வேள்வியில் மாற்றாரே ஆகுதியாம் பூவண
மின்னம்மை போற்றி
ஓம் வீரரின் வீரியம் நீ வெற்றித்திருமகள் நீ தோகையம்மை
போற்றி
ஓம் தன்படை குலையாது சதுரங்கம் காத்திடும் மின்னுமேகலை
போற்றி
ஓம் எல்லையிலாப் பேரரசு எங்கேயும் செங்கோல் இருமலர்க்கண்ணி
போற்றி
ஓம் பெருஞ்சேனை உன்னது பிடிபடாதது கருந்தடங்கண்ணி
போற்றி
ஓம் அவரவர் தருவதை ஏற்பதுன் அருங்கணம் இறைச்சிபுசிப்போய்
போற்றி

ஓம் நாராயணன் தங்கை காவியங்கண்ணியே காந்திமதியம்மை போற்றி

ஓம் புலிக்கொடித்தேரேறி புவன முழுதாளும் கரும்பனையாள் போற்றி

ஓம் வஜ்ராயுத நகங்கள் பகைவரை வகிர்ந்திடும் உஜ்ஜயினி நித்யை போற்றி

ஓம் வஜ்ராயுரம் ஏந்தி வருகின்ற நடைகண்டால் அச்சம் எதற்கு போற்றி

ஓம் வேடுவச்சி வேடம் ஏவிவிடும் புலிகளை விரட்டிடுமே போற்றி

ஓம் கத்தியும் கேடயமும் 'ஏந்திடும்' சூலினி கர்ப்பர்ட்சகி போற்றி

ஓம் பருவக்குமாரி பார்வதி பரிமளை பஞ்சின் மெல்லடியாள் போற்றி

ஓம் வீரனின் கத்தியில் வெட்டிடும் சக்தி நீ மாவடுக்கண்ணி போற்றி

ஓம் ஆயதங்களின் கூர்மை அம்மா உன் விழிக் கூர்மை யௌவனாம் பிகை போற்றி

ஓம் நாணொடு வில்லேந்தும் நங்கை நீலலிதையே வாள்நெடுங்கண்ணி போற்றி

ஓம் நாணொலி கேட்டதும் அண்டமெலாம் நடுங்கும் வாளையல்கண்ணி போற்றி

ஓம் உன்கோபம் சீறும் உலுத்தரைப்பார்த்தவுடன் மின்னல் ஒளி அம்மை போற்றி

ஓம் பார்வையால் அச்சம் படைப்பவள் நீஅன்றோ வார்கொண்ட முலைஅம்மை போற்றி

ஓம் வீரர்கள் முன்னே பீடுநடை போடுவாய் வேயுறுதோளி போற்றி

ஓம் இன்முகம் காட்டாத வன்முகம் எதிரியை இல்லாது செய்யும் போற்றி

ஓம் அரக்கரை விழுங்குவதில் ஆர்வமிகக் கொண்டோய் ஆரணங்கம்மை போற்றி

ஓம் ஒளிமங்கம் காட்டிலும் யோகியர் உளத்திலும் களிநடம் புரிவாய் போற்றி

ஓம் நல்லவர் செல்வங்கள் நாளுமே காக்கவரும் நல்ல நாயகி போற்றி

ஓம் ஈயாத லோபியிடம் இருக்கின்ற செல்வத்தை எடுத்தெறிவாய் போற்றி

ஓம் மதுகைடபரை அழிக்க வெளிப்பட்டு வந்தாயே மகாகாளியே
போற்றி

ஓம் கௌசிகீ வெளித்தந்த கடுத்தவள காமகலாகாமேச்வரி போற்றி

ஓம் புறத்தோற்றம் போர்க்கோலம் அகமோ மலர் மென்மை
பூங்குழலம்மை போற்றி

ஓம் நந்தா எனும் தேவி ஆனந்த மயமான மங்கள நாயகி போற்றி

ஓம் சப்தசதீ, லலிதா சகஸ்ர நாமம் போன்ற சரித்திரங்கள் தந்தாய்
போற்றி

ஓம் நாடிச் சரணடைந்தோர் நரகவாதனை நீக்கும்
பாலாங்குராம்பிகை போற்றி

ஓம் மலயமலைச் சிகரமை மலை மகளுடன் திருவீடு பெரியநங்கை
போற்றி

ஓம் உடலிலே நறுமணம் உள்ளத்திலே நட்பு ஓசைகொடுத்தநாயகி
போற்றி

ஓம் காதலால் தளர்ந்து நாணித் தலைகுனியும் கல்யாணசுந்தரி
போற்றி

ஓம் கடம்ப மலர்போன்று ஒளிவீசும் திருமேனி கடந்தைநாயகி
போற்றி

ஓம் அன்புக்கு உரியவளே அன்பைப் பொழிபவளே அமிர்தநாயகி
போற்றி

ஓம் கடம்ப மலர் ஊறும் தேனைக் குடிப்பவளே கானார்குழலி
போற்றி

ஓம் மகாமாயையாகி மதுஎனும் அரக்கனை மாயச்செய்தாய் போற்றி

ஓம் தேனை அருந்துவதில் திளைக்கும் சிவகாமி சிற்றிடைநாயகி
போற்றி

ஓம் பாதிரிப் பூப்போன்று காலைக் கதிர்ஒளியோய் பால்வளைநாயகி
போற்றி

ஓம் உயிர்கள் உறங்குகையில் நீ மட்டும் உறங்காமல்
உலாவருவாய் போற்றி

ஓம் இராக்கதர்களை அழிக்கும் இறைவியே குறைவிலா திருபுரச்
செல்வி போற்றி

ஓம் அழகென்ற சொல்லுக்கு அடையாளம் நீஅன்றோ
அழகம்மையே போற்றி

ஓம் நவராத்திரி நாயகி பௌர்ணமி பூசையில் நவசக்தியே போற்றி

ஓம் சிவராத்திரி நாளினில் சிவனுடன் அமர் அர்த்தநாரீ போற்றி

ஓம் வானோர் மகிழ்ந்திட சித்து விளையாடிடும் வண்டுவார் குழலி போற்றி

ஓம் ஞானியர் தியானத்தில் வேண்டும் உருவத்தில் தோன்றுவாயே போற்றி

ஓம் பக்தர்கள் வேண்டிட சந்தானம் அருளும் பவளக்கொடி போற்றி

ஓம் உச்சிப் பொழுதிலே உன்னை வழிபட்டால் மெச்சிமகிழ்வாய் போற்றி

ஓம் வெற்றியைத் தருகின்ற சூலினி மெய்யம்மை வெள்வளையம்மை போற்றி

ஓம் மூவருக்கும் முதல்வி முக்கண்ணி மலர்க்கண்ணி திரியம்பகா போற்றி

ஓம் தீயநோக்கோடு செய்கின்ற வேள்விகளைப் போயழிப்பாய் போற்றி

ஓம் மும்மூன்றாய் இலங்கும் முல்லை நனை வடிவே முகிழம்பிகை போற்றி

ஓம் முடிவு வரும்போது முப்புரமும் அழிக்கும் முக்கூடல் நாயகி போற்றி

ஓம் அன்பரின் இதயம் நா அகண்ட வெளிமேடையதில் ஆடுவாயே ஓம்றி

ஓம் செந்நிறமாகித் தியானிப்போர் உள்ளத்தே தித்திப்பாய் போற்றி

ஓம் நீஆடும் பேரண்டம் நின்றால் இயங்காது நீள்நெடுங்கண்ணி போற்றி

ஓம் செந்தூரம் போன்ற சிவப்பழகி சிந்தைகவர் சௌந்தராம்பிகை போற்றி

ஓம் சுந்தன் உபசுந்தன் காமத்தை குரோதத்தால் சுட்டெரித்தாய் போற்றி

ஓம் அணுவிற்கும் அணுவாகி அண்டத்தில் பிண்டத்தில் செறிவாகினாய் போற்றி

ஓம் நெறிகெட்டாரை மயக்கி நிலை குன்றி மாயச்செய் நீலதளாம்பிகை போற்றி

ஓம் எட்டு வடிவான அட்ட மூர்த்திநீ பட்டீசுரத்தோய் போற்றி
ஓம் கற்றதெலாம் நீ கற்பனவும் நீயே கலாநாதா போற்றி
ஓம் எண்கைகள் கொண்டு எப்போதும் அருள்புரியும் கண்கண்ட
தெய்வம் போற்றி
ஓம் பேறெலாம் பெற்றாலும் பிள்ளைச் செல்வம் பெரிது தாய்மை
தருவாய் போற்றி
ஓம் செவ்வாயின் தணல்நீ சேந்தனின் அன்னையே சிவயோக
நாயகி போற்றி
ஓம் கருணையாம் கண்கள் கனல்கின்றதும் உண்டு சரிவார் குழலி
போற்றி
ஓம் அம்சன் எனும் அசுரனின் அகந்தையை அடக்கிய அருமருந்தம்மை
போற்றி
ஓம் திரள் மார்பினால் சற்றே தேகம் முன்சாய்ந்த தேகசௌந்தரி
போற்றி
ஓம் மஞ்சள் மணக்கின்ற மார்பகம் தஞ்சம் மதுரவசனாம்பிகை
போற்றி
ஓம் அரனின்பத்தினி இந்திராட்சியே அஞ்சனாட்சியே போற்றி
ஓம் தங்கம் போன்றே மங்கா ஒளியோய் சொர்ணவல்லியே போற்றி
ஓம் அங்குமும் பொன்னனம் ஆடையும் பொன்னோ அருந்தவநாயகி
போற்றி
ஓம் ஈஸ்வரனோடு நேசம் வைத்தாய் இளங்கொம்பனாளே போற்றி
ஓம் படைத்ததை எல்லாம் ஒடுக்கும் பரமனின் பக்கத்துணையே
போற்றி
ஓம் கவிஞர்கள் உன்னைக் காவியம் பாடக்கற்பனை கொடுப்பாய்
போற்றி
ஓம் பயிர்கள் வளர்ந்திடத் தடையாய் வருகின்ற இடையூற
போக்குவாய் போற்றி
ஓம் நிட்டையினாலும் செபங்களினாலும் நெருங்கிடச் செய்வாய்
போற்றி
ஓம் தன்னை மறந்த ஆனந்த நிலையில் தரிசனம் தருவாய்
போற்றி
ஓம் அமரர்கள் ஆயினும் வரம்புகள் மீறின் அடங்கிடச் செய்வாய்
போற்றி

ஓம் பாலையில் ஊறும் ஓடையைப் போலே தாழ்வுகள் நீக்குவாய் போற்றி
ஓம் நீலோத்பல மலர் வண்ணங்கள் காட்டும் நீலமலர்க்கண்ணி போற்றி
ஓம் நான்கு மறைகளில் இருக்கு வேதமாய்த்தோன்றிடுவாயே போற்றி
ஓம் சாம கானம் கேட்டுத் தலையினை அசைப்பாய் சத்யாம்பிகையே போற்றி
ஓம் அப்பமுக்கற்றோய் அற்பு தம்புரிவோய் பட்டீஸ்வரத்தோய் போற்றி
ஓம் கற்பகவல்லி புண்ணியம் செய்தோர் கனவே நனவே போற்றி
ஓம் மாலையில் செய்யும் வேள்வியில் வந்தே சாந்தியைத் தருவோய் போற்றி
ஓம் பாலில் அமுதம் பாங்குற வழங்கும் காமதேனுவே போற்றி
ஓம் பதினைந்தெழுத்து பஞ்ச தசாட்சரி மந்திர உருவே போற்றி
ஓம் பதினாறாவது சந்திர கலையே மகாசோடசீ போற்றி
ஓம் சிவனும் சக்தியும் சமமாய்க்கலந்த 'ஹ்ரீம்' எனும் புவனை போற்றி
ஓம் ஹ்ரீம் எனுன் மந்திரம் எதிரியை விரட்டும் கவசம் ஆனாய் போற்றி
ஓம் கேடுகள் தருகின்ற எண்ணம் சொல் செயல் ஓடிடச் செய்வாய் போற்றி
ஓம் ஆறு அங்கங்களில் நியாசங்கள் செய்வோர்க்கு அபயம் அளிப்பாய் போற்றி
ஓம் ஒன்பது கோணங்கள் உள்ளே இருப்பாய் சண்பகவல்லியே போற்றி
ஓம் முக்கோணம் அதில் மூன்று பக்கமும் பற்றி இருப்பாய் போற்றி
ஓம் நடுப்புள்ளியில் நின்று ஞாலத்தை நோக்கும் நங்கை நல்லூர்ம்பை போற்றி
ஓம் ஆயிரம்முகங்கள் அமைந்தவளே அம்மா அத்வைத நாயகி போற்றி
ஓம் தாமரை அமர்ந்து தாமரை ஏந்தும் சீர்மிகு செல்வியே போற்றி
ஓம் பதினெட்டு அட்சர மந்திர வடிவில் சூலினி யாவாய் போற்றி

ஓம் அமரர்கள் பணியில் இடர்கள் வராமல் அசுரனைத் தடுப்பாய் போற்றி
ஓம் பெரும் சூலம் தாங்கி வரம் அபயம் தரும் பிரமரகுந்தளா போற்றி
ஓம் எதற்கும் அசையாது இயல்பாய் இருப்போய் அழகியநாயகி போற்றி
ஓம் அதனதன் தன்மை அகலாதிருக் கவனம் வைப்பாய் போற்றி
ஓம் பெருமை மிக்க இந்திரன் வணங்கும் பெண்ணின் நல்லாளே போற்றி
ஓம் சூலத்தைப் பார்த்ததும் ஓடுவர் பகைவட்டா தொல்லை தவிர்ப்பாய் போற்றி
ஓம் சூலை நோயின் கொடுமைகள் தீர்க்கும் சோமகலாவதி போற்றி
ஓம் மங்களம் யாவும் தங்க இடம் தரும் அங்கங்கள் கொண்டாய் போற்றி
ஓம் சூலம் ஏந்திய சிவபெருமானின் துணைவியே துர்கா போற்றி
ஓம் ஸ்ரீ எனும் செல்வம் சேர்ந்தோர் நின்னைச் சேவித்தவர்கள் போற்றி
ஓம் காரியம் எதற்கும் காரணம் ஆனாய் காம்பனதோளி போற்றி
ஓம் தானெனும் ஆணவமூலம் அதன் விதை உன்கையில் உள்ளது போற்றி
ஓம் தனித்தனியாகிப் பொருள்கள் விளங்கிடத் தண்ணருள் பொழிவாய் போற்றி
ஓம் முதலில் தோன்றி விண்வெளி வந்தது முற்றிலா முலையம்மை போற்றி
ஓம் நிலம், நீர், தீ, வளி அதனதன் செயல்புரி நறுங்குழல் நாயகி போற்றி
ஓம் அறிவும் ஆற்றலும் பெற்றவர்பெற்றது அன்னைநின் ஆற்றல் போற்றி
ஓம் நரசிம்மரின் சக்தி நரசிம்மி உந்தன் பெருங்குரலோசை போற்றி
ஓம் ஐநூவதம் ஏறும் இந்திரனின் சக்தி மாகேந்த்ராணி போற்றி
ஓம் தோழீயர்சூழ்ந்திடச் சூலினி எனவரும் சரபரின் சக்தி போற்றி
ஓம் ஒடுங்கிய உலகம் வெளிப்படச் செய்திடும் 'ஹ்ரீங்காரி' சக்தி போற்றி

ஓம் பூப்பின் பொலிவினைக் காட்டிடும் ருதுமதீ பூங்கொடிநாயகி போற்றி

ஓம் கோரம் நீங்கியே அன்பு தவழ்ந்திடும் ஞானப்பிரசூனா போற்றி

ஓம் பிரத்யங்கிரா என்னும் பெரியவளேகாளி பிரத்யட்சமின்னம்மை போற்றி

ஓம் மிகமிகக்கொடூரக்கோர வடிவம்கொள் மலையான் மடந்தையே போற்றி

ஓம் செம்பருத்தி மலர் மாலை அணிந்ததோர் சுகந்தகுந்தளா போற்றி

ஓம் எந்த அழகும் உனக்கு நிகரில்லை நீயேதான் அழகு போற்றி

ஓம் நல்மனம் கொண்டவர் நாடியே கூடிடும் நறையார் பூங்கோதை போற்றி

ஓம் மாதுளம் பூப்போன்று வண்ணத்திருமேனி மாதுமையம்மை போற்றி

ஓம் பாலில் நீர்போல் உலகங்கள் தன்னுள்ளே பதுங்கச்செய்பவளே போற்றி

ஓம் படைத்தல் காத்தல் அடக்கல் அனைத்திலும் பரபரப்புடையோய் போற்றி

ஓம் உடலில் உயிராய்ப் பரவி மறைந்துள்ள இறைகொண்ட மின்னம்மை போற்றி

ஓம் குங்குமக் குழம்பினை செங்கழுத்தில் பூசும் குயில்மொழி அம்மை போற்றி

ஓம் 'இ' எனும் எழுத்தில் தியானிக்கத்தக்கவள் இளையநாயகி போற்றி

ஓம் பூமியின் தலைவி நீ பொறுமையின் சின்னம்நீ புரிகுழல் அம்பிகை போற்றி

ஓம் மேருமலை சூழ் "இலாவ்ருத" மகளிரால் சூழப்பெற்றவளே போற்றி

ஓம் தானே தனக்கு ஆதாரமாய் நிற்கும் ஐஸ்வர்ய தேவி போற்றி

ஓம் பச்சையும் மஞ்சளும் பரவிய வண்ணத்தோய் பாலசுந்தரி போற்றி

ஓம் சிவப்பும் மஞ்சளும் சேர்ந்த நிறந்தவள் தேன்மொழிப்பாவையே போற்றி

ஓம் உளுந்தும் பயிரும் நெய்யொடு சமைத்தே உண்ணும் பெண்ணே போற்றி

ஓம் எப்போதும் பணியாற்றத் துடிக்கும் படைவீரர் தலைவி சற்குணி போற்றி

ஓம் என்னவேண்டுவார் என்பக்தர் என்றே எதிர்பார்த்திருப்போய் போற்றி

ஓம் ஊசிபோன்றே சுழிமுனை உட்செல்லும் லதாமத்யாம்பிகை போற்றி

ஓம் உலக மண்டலங்கள் முட்டை வடிவாக உள்ளே இருப்பாயே போற்றி

ஓம் பரமஹம்ஸர் நிலை பெற்றதோர் யோகியர் பார்வையில் உள்ளோய் போற்றி

ஓம் 'ஹம்ஸம்' எனப்பெறும் அபின்னாம்பிகை அபீதகுசாம்பிகை போற்றி

ஓம் சிரிப்பிலே பலவகை பலநிலை காட்டியே களிப்பில் ஆழ்ட்டதுவாய் போற்றி

ஓம் கலியுகக்கேடுகள் களைய வருகின்ற கடவூர் அபிராமி போற்றி

ஓம் பாலினை ஏற்பாயே பாலினை ஊட்டியே பரகதிகாட்டுவோய் போற்றி

ஓம் செந்தண்மை பூண்ட அந்தணர் பூசையில் சிந்தை குளிர்வாய் போற்றி

ஓம் கட்வாங்கம் என்னும் குறுந்தடி கையேந்திக் காலார நடப்பாய் போற்றி

ஓம் கத்தியைக் காட்டியே புத்திபுகட்டிடும் சத்தியச்சுடரே போற்றி

ஓம் ஆகாயதத்துவம் 'கம்' எனும் மந்திரம் பீஜத்தில் இருப்பாய் போற்றி

ஓம் பதினான்காயிரம் படையொடுவந்தவன் கரதனை மாய்த்தாயே போற்றி

ஓம் வேள்வித் தீயாகி ஆர்வத்தொடுநெய்யை விழுங்க வருவாயே போற்றி

ஓம் மண்டையை முதுகுத் தண்டை மாலையாய் மார்பில் அணிந்தாய் போற்றி

ஓம் ஆயுதம் ஏந்தும் உன் கைகளை வழிபடும் அரக்கரைக்காப்பாய் போற்றி

ஓம் ஆழமான நாபி ஆழம் காணா உள்ளம் ஆவுடைநயாடிக போற்றி

ஓம் சித்தர், கின்னரார் தேவியர் சூழ்ந்திடும் கட்கநேத்திர போற்றி

ஓம் கத்தி வடிவிலே வீரனின் சக்தியே கருந்தாழ்குழலி போற்றி

ஓம் மேக நிறம் கொண்டு ஞாலம் வலம் வரும் மெல்லியலாளே போற்றி

ஓம் செல்வம் வேண்டும் எனச் செட்டிமார் போற்றிடும் சிவானந்தவல்லி

ஓம் செந்தேன் என்றதும் வந்தேன் எனவரும் சிநேகவல்லி போற்றி

ஓம் 'ம' என்ற எழுத்தொடு வாமாசாரர்கள் வணங்கிடும் தேவி போற்றி

ஓம் கம்பீரம் என்பது உன் உருவம் அது காண்பவர் தவம் அம்மா போற்றி

ஓம் அறியாத எளியவர் அன்பாலே வழிபடும் புரியாதவளே போற்றி

ஓம் மலர்கள், கனிகள், தேனொடு கடைந்த மதுவினை அருந்துவாய் போற்றி

ஓம் துரிய நிலையினில் அம்பிகா எனப்பெறும் சமஷ்டி சக்தியே போற்றி

ஓம் பருவங்கள் எனப்பெறும் திதிகளில் துதிபெறும் பௌர்ணமி நாயகி போற்றி

ஓம் முத்துப்போல்ா வெண்மையும், மென்மையும், தூய்மையும் 'சித்' உருவேபோற்றி

ஓம் வேதத்தின் நாதங்கள் நீதரும் சந்தங்கள் விகிந்த நாயகி போற்றி

ஓம் புலனை அடக்கிய புனிதர்கள் போற்றிடும் புவனேஸ்வரியே போற்றி

ஓம் கெட்டகுணம் கொண்ட துட்டரை அடக்கிடும் கிரிகுசாம்பிகை போற்றி

ஓம் எட்டுவாக்குதேவி அதில் நீ 'ஜெயி நீ' பட்டீஸ்வரத்தோய் போற்றி

ஓம் கிருஷ்ணபட்சத்து அட்டமிதிதிதனில் கீர்த்தித மிக்கோய் போற்றி

ஓம் அச்சம் தரும் யாகம் அதனிலும் கலந்து கொள் அருள் நாயகியே போற்றி

ஓம் 'ஐம்' எனும் பீஜம் அநாகத ஒலியாகும் இன்னிசை வாணி போற்றி

ஓம் நவராத்திரியில் நவமிதிதியினில் வேண்டிடப்பெறுவோய் போற்றி

ஓம் தென்னம்பாளையின் சிரிப்பில் லயித்திடும் சிங்காரவல்லி போற்றி

ஓம் அமரபட்சத்துச் சதுர்த்தசிதிதியினில் எழுந்தருள்வாயே போற்றி

ஓம் பக்தர்கள் வேண்டுதல் பலித்திடச் செய்திடும் பசுபதிநாயகி போற்றி

ஓம் உள்ளுணர்வாலே உன்டைன உணர்ந்திடும் யோகியா செல்வமே போற்றி

ஓம் அமாவாசை நாளினில் அலையெனத்தாவிடும் அமிர்தகரவல்லி போற்றி

ஓம் மணிபூரகத்தில் 'டாமரி' சக்தியாய் மனம் கவர்பவளே போற்றி

ஓம் மாற்றார் என வந்தால் தோற்றோடி மாயச்செய் மருவார்குழலி போற்றி

ஓம் ஒழுக்கத்தினாலே உயர்ந்தவர் சங்கல்யம் உடன் நிறைவேற்றுவாய் போற்றி

ஓம் கலியிலும் நல்லவர் யாரெனக் காட்டிடும் கிரிராஜகன்னி போற்றி

ஓம் செல்வப் பகட்டிலே சிக்கித் திரிவார்கள் இல்லத்திலும் உள்ளாய் போற்றி

ஓம் செயல் ஊக்கம் கொண்டவன் சிந்தையின் ஆற்றலாய் செய்து முடிப்பாய் போற்றி

ஓம் குத்தீட்டிச் சண்டையில் கூடவே இருப்பவள் கொந்தார் பூங்குழல் போற்றி

ஓம் பூஜியத்தில் ஒரு இராஜியம் படைப்பவள் பூவைவல்லியம்மை போற்றி

ஓம் கவிகளில் சிறந்தவர் சொல்லினில் நடம்புரி கரும்படு சொல்லன்னம் போற்றி

ஓம் எல்லாச் செல்வமும் அளிப்பதில் ஈடில்லா செல்வநாயகி போற்றி

ஓம் புரட்டாசி நவராத்திரி ஒன்பது நாளிலும் போற்றப்பெறுவோய் போற்றி

ஓம் அரச பதவியும் தருவதில் வல்லவள் அணிகொண்டகோதை
போற்றி

ஓம் அரசாட்சி செய்யவும் அருந்திறல் அளிப்பவள் அதிகை நாயகி
போற்றி

ஓம் மதுமயக்கத்தை நீக்கிடும் பச்சிலை மர்மத்தைச் சொல்லுவோய்
போற்றி

ஓம் செயல் செய்தபோதிலும் பலனைத்தருபவள் நீதானே நிர்குணி
போற்றி

ஓம் செல்வக்குபேரனும் சிந்தையில் வைத்திடும் சிவாம்பிகையே
போற்றி

ஓம் பாரிஜாத மலர் சூடும் மனோஹரி பர்வத வர்த்தனி போற்றி

ஓம் பலிமந்திரம் செபிக்கச்சித்திகள் தந்திடும் பாலாம்பிகையே
போற்றி

ஓம் மந்திரபலத்தால் மனோபலம்தரும் பெண்ணமிந்தநாயகி
போற்றி

ஓம் தூய மனத்தினில் பக்தியை வளர்ப்பவர் நேயத்தை ஏற்பாய்
போற்றி

ஓம் பக்தர்கள் சித்தத்தில் எப்போதும் இருப்பவள் பார்ப்பதியம்மை
போற்றி

ஓம் பக்தனுக்காகக் குற்றேவலும் செய் பெருங்கருணை நாயகி
போற்றி

ஓம் முக்கோண மாலையள் பகமாலினி நீ மலர்க்குழல்மாதம்மை
போற்றி

ஓம் மல்லிகைக் காடதன் மத்தியில் வாசம் செய் மலைச்சொக்கநாயகி
போற்றி

ஓம் உருவிலும், செயலிலும், நினைவிலும் பெரியவள்
உருவுடைமங்கை போற்றி

ஓம் மகிஷா சூரனின் மதத்தை அடக்கிய மலர்க்குழல் மின்னம்மை
போற்றி

ஓம் யஜுர் வேதத்தின் உட்பொருள் ஆயினை யாழைப்பழித்தமொழி
போற்றி

ஓம் சங்கொடு சக்கரம் ஏந்தியகைகள் பங்கயமோ தாயே போற்றி

ஓம் ஆக்கம் கொடுப்பதில் 'ஆக்ரோஷம்' கொண்டடைன
'ராஜஸாதேவி' போற்றி

ஓம் மாதங்கரின் மகள் ராஜமாதங்கீ மைவார்குழலி போற்றி

ஓம் முழுமதிபோன்றதோர் முகவதி மிருது முகுளகுசாம்பிகை
போற்றி

ஓம் எளியோர் வழிபாடு முனிவர் கடுந்தவம் இரண்டையும் ஏற்பாய்
போற்றி

ஓம் அழகிகள் புடைசூழும் பேரழகே அம்மா அதிகாந்தியம்மையே
போற்றி

ஓம் வாக்கின் தலைவியேடம வளைக்கை நாயகி வனமுலை
நாயகி போற்றி

ஓம் மகழி மலர்களின் மணத்திலே சொக்கிடும் மையார்
தடங்கண்ணி போற்றி

ஓம் வாக்கெலாம் நீயே வாசமலர்க்குழல் மாதம்மையே போற்றி

ஓம் வந்த துன்பங்களைக் கொந்திளறிந்திடும் வளைக்கை
வல்லிப்பூவை போற்றி

ஓம் சரபேசர் மனைவியே சதாநந்தி யம்மையே சர்வஜனரட்சகி
போற்றி

ஓம் சந்திரமண்டில நடுநின்று சதிராடும் சரிகுழலம்மையே போற்றி

ஓம் எழுத்து, சொல், மந்திரம், தத்துவம், கலை, உலகம் என
ஆறுவழி யினோய் போற்றி

ஓம் இரத்தம் கலந்ததோர் ஹோம பலியையும் ஏற்றிடுவாயே
போற்றி

ஓம் தத்துவ ஞானத்தால் நிலைபெறும் ஆனந்தம் தந்திடுவாயே
போற்றி

ஓம் தன்னுடன் ஒன்றிடத் தக்க வழிஎல்லாம் சாற்றிடுவாயே போற்றி

ஓம் எப்போதும் நின்னையே எண்ணி இருப்போர்க்கு தப்பாது
செல்வம் போற்றி

ஓம் 'ஹம்' என்ற மந்திரம் அகந்தையைத் தந்தாலும் அதுவும்
உன்செயல் போற்றி

ஓம் அசையாத தாவரம் அதற்கும் நீ ஆதாரம் அங்கவ்ளநாயகி
போற்றி

ஓம் தேவமாதர்களின் ஆடலில் மகிழ்ந்திடும் திருக்குழல் நாயகி போற்றி

ஓம் மூன்று 'ல' காரங்கள் பீஜமாய்க் கொண்டனை திரிபுவனேஸ்வரி போற்றி

ஓம் பண்டா சூரனை மயக்கியலலிதையே பசும்பொன் மயிலம்மை போற்றி

ஓம் அடையாளம் காட்டியும் அநுபவம் உணர்த்தியும் ஆதரிப்பவளே போற்றி

ஓம் யாரென்று தெரிந்ததும் நேரிலேவந்திடும் தூலகோமளபதா போற்றி

ஓம் நல்ல உணவினை நாடியே உண்டிடும் நறுஞ்சாந்திள முளை போற்றி

ஓம் ஸ்ரீபுரம் என்னும் மாளிகை அதனில் சிறப்பொடு வாழ்வாய் போற்றி

ஓம் நீல கண்டரின் சக்தி நீலோற்பலாம்பிகை திருநீலநாயகி போற்றி

ஓம் பசும்மஞ்சள் நிறப்பைங்கொடி பக்தர்கள் பயகூடிய நாயகி போற்றி

ஓம் பைங்கிளி வடிவினில் ஞான சக்தியாகும் பண்ணேர்மொழியாளே போற்றி

ஓம் தவத்தால் வெளுத்தவள் அறத்தால் நிலைத்தவள் திருவெண்ணீற்றுமை போற்றி

ஓம் இமவான் மகளே அமிர்தாம்பிகையே அழகார்ந்தநாயகி போற்றி

ஓம் கேட்டதற்கு மேலே கொடுக்க நினைப்பாயே கோகர்ணநாயகி போற்றி

ஓம் வருமுன் உரைப்பதும் காப்பதும் வல்லதோர்ட யட்சிணிதேவதை போற்றி

ஓம் உன்னருள் இன்றிஎதுவும் அசையாதென உணர்த்திய 'யக்ஷா' போற்றி

ஓம் மஞ்சளிலும் வந்துமங்களம் தந்திடும் மாதுமையாளே போற்றி

ஓம் கலப்பையைத் தோளினில் ஆயுதமாய் ஏந்தும் கிருபாநாயகி போற்றி

ஓம் சூழ்ந்திடும் தோழிகள் யாவரும் உன்சக்தி தோழியம்மையே போற்றி

ஓம் என்றோ செய்தது இன்றும் பலன்தர எப்போதும் அருள்வாய் போற்றி

ஓம் உன்னை அறிந்துள்ளே உன்மத்தம் ஆகிடும் ஆனந்தநாயகி போற்றி

ஓம் இரண்டிரண்டாகத் தொடரும் அலைகள் நீ இருப்பினும் காப்பாய் போற்றி

ஓம் நீரின் சுவையினில் ஊறிய பூமியாய் நாளும் சுழல்பவள் போற்றி

ஓம் உண்ண உணவு, உடை, உறையுள், ஊட்டிவளர்ப்பாயே போற்றி

ஓம் எதையும் தாங்கியே என்றும் நிலைத்திடும் இமயமடக்கொடி போற்றி

ஓம் அண்ணாந்து திறந்து விரிந்ததோர்வாய் காட்டும் அந்தகார சூதனி போற்றி

ஓம் மாமிசம், மீன், மாது, கள் ஏற்றிடும் பஞ்சமிப்பாவை போற்றி

ஓம் அந்தந்தப் பிறவியல் அநுபவிக்கும் வினை அளந்து அளிப்பாய் போற்றி

ஓம் இச்சை, ஞானம், செயல், அப்பாற்பட்டு நிற்கும் அம்பிகை அம்மை போற்றி

ஓம் எதிலும் கணக்காக இப்படி இப்படி என்றே விதிப்பவள் போற்றி

ஓம் காலத்தை எல்லை செய் காலனின் சக்தியே கருணை நாயகி போற்றி

ஓம் வாணியின் வீணையில் ஞானசக்தி நீயே வேதாம்பிகை போற்றி

ஓம் இரத்தினம் போன்று மின்னும் சிவப்பொளி இளங்கிளையம்மையே போற்றி

ஓம் இலக்குமி தேவியைத் தூதாக அனுப்பிடும் இளங்கொடி அம்மையே போற்றி

ஓம் உனது கிரியா சக்தி சிங்கமாய் வந்தது ஒப்பில்அம்பிகை போற்றி

ஓம் நற்குடிப்பிறந்தோரின் இயல்பான நாணத்தோர் நங்கை உமையம்மை போற்றி

ஓம் புகைவடிவாகியே நச்சினைக்கக்கிடும் தூமவதியே போற்றி

ஓம் மரம்போன்று உணர்ச்சி மரத்தவளாகிடும் மடக்கண்ணியே போற்றி
ஓம் பிருங்கி மகாமுனி தோழராம் ஈசனின் நேசக்கரத்தோய் போற்றி
ஓம் ஒவ்வோர் அங்கமும் போட்டியிட்டுக் கொண்டு உன்எழில் காட்டிடும் போற்றி
ஓம் எல்லா அணுவிலும் நட்பாகி நோயற்ற உள்ளம் உடையோளே போற்றி
ஓம் இசையினை மீட்டியே இதம் தரும் கயற்கண்ணி கொடியிடைநாயகி போற்றி
ஓம் தன்னைப்பற்றியோரைத் தான் பற்றிக் கரையேற்றும் சத்தியம்மை போற்றி
ஓம் வினைப்பயன் துய்த்திட மூத்தவள் உருவத்தில் துயர்தரும் தேவி போற்றி
ஓம் மனத்தை ஈர்த்திடும் மதுரபாஷணி மலையரசிஅம்மை போற்றி
ஓம் யமுனை நதியினில் நீந்திவிளையாடும் ஜகந்நாயகி போற்றி
ஓம் உலக்கை ஏந்திய தண்டினி உருவினில் தடையாய் நிற்பாய் போற்றி
ஓம் துண்டு துண்டாகச் சண்டனைச் சாய்த்தனை வண்டுவார் குழலம்மை போற்றி
ஓம் எப்போதும் கூட்டத்தின் இடையே இருப்பாய் கற்பக நாயகி போற்றி
ஓம் வெண்பனி, நிலவொளி, முல்லைமலர் நிற வெண்ணீற்றுமை போற்றி
ஓம் நான்முகன்ட படைப்பாற்றல் நாயகி நின்கையில் ஞானாம்பிகை போற்றி
ஓம் அறிஞரின் தன்மானம் புகழ்யாவும் உன் அம்சம் அம்பு ஜாட்சி போற்றி
ஓம் பிறைநெற்றி தவழ்ந்திடும் கூந்தலின் சுருள்அல்லை பிரம்மவித்யா போற்றி
ஓம் இந்திராணி சசிதேவி அவள் சக்தி நின்சக்தி இட்சுவாணி போற்றி
ஓம் சக்திநின் ஒளிபெற்றார் சந்திர சூரியர் சாந்தநாயகி போற்றி

ஓம் வீரவிளையாட்டில் தோழியரை மகிழ்விக்கும் வேய்த்தோளி அம்மை போற்றி

ஓம் முன்னை முதலாகி மூத்தவள் என்றாலும் இன்றும் உன் இளமை போற்றி

ஓம் திங்களின் குளிர்ச்சி தீர்மானிப்பவள் நீ தேனமிர்தவல்லி போற்றி

ஓம் பெரும்சாம்ராஜ்யப் பேரரசி அன்றோ பெரியஅம்பிகை போற்றி

ஓம் கயன் நடத்திய வேள்விகாணவந்த கல்யாணி அம்மை போற்றி

ஓம் மாயையால் ஏமாற்றி மாற்றாரைச் சாய்க்கின்ற பூங்கொம்பு நாயகி போற்றி

ஓம் அமுதமயம் நின் ஒளியால் நிலவும் முழுமையாகுமே போற்றி

ஓம் நாகாபரணங்கள் முத்தாரங்களோ சொல்க வடிவம்மையே போற்றி

ஓம் கருடனின் சக்தியாய் செந்நிற விழியொடு சிறகடிப்பாயே போற்றி

ஓம் அணுவிற்கும் அணுவாக யாருக்கும் புலப்படா அகிலேஸ்வரியே போற்றி

ஓம் குருமண்டலம் உன்னை வழிவழி வழிபடும் குசுசுந்தரியே போற்றி

ஓம் திருமணம் ஆகாத பருவப் பெண் போன்ற தேனார்மொழி போற்றி

ஓம் மலைமகள் வேடச்சி மாவின் வடுக்கண் சவுந்தரியே போற்றி

ஓம் இந்த்ர ஜால வித்தை என்பதெல்லாம் நினதே அன்பாயி போற்றி

ஓம் மதிபோல்நின் முகம் பொலியும் பேரழுகு மங்கை நாயகி போற்றி

ஓம் அதிதியின் மக்களால் புகாப பெற்றோய் அம்மா அஞ்சொல்நாயகி போற்றி

ஓம் கணவனையே தூதனாய் அனுப்பிய சுதந்தரி சிவதூதீ போற்றி

ஓம் கண்டம் கறுத்தவன் நீலகண்டன் துணைவி அமிர்தமுகிழ் அம்பிகை போற்றி

ஓம் சூளையில் சூழ்கின்ற பெருநெருப்பின் நிறத்திகோட்ல வளை அம்மை போற்றி

ஓம் நினைத்ததை முடிக்கின்ற ஆற்றலின் ஜ்வாலையாய் எதிர்ப்பதைத் தகிப்போய் போற்றி

ஓம் வேள்வியின் தீயிலே தோன்றிடும் தேவியே அமிர்தவர்ஷிணி போற்றி

ஓம் நவரத்ன அணிகலன் தீபோல ஒளிசிந்தும் பிரகதீசுரி போற்றி

ஓம் கோளெலாம் ஒளிபெறும் ஒடுங்குமே உன்னிடம் வாழவந்தாய் போற்றி

ஓம் சோதிடம் ஒருவாறு உன்ஆட்சி கூறிடும்ட வாலசுந்தரி போற்றி

ஓம் பெருஞ்சோதியாய் திகழ்ந்து பேரொளியைத் தருகின்ற போதஇள முலையாள் போற்றி

ஓம் யோகியர் இதயக் கோட்டையிலே வாழும் ஒளி நிலாவே போற்றி

ஓம் அக்கினியால் வழிபடப் பெறுபவளே ஆதி அநூபமஸ்தனீ போற்றி

ஓம் 'லம்' என்ற பீஜத்தில் புவி வடிவில் பூரிக்கும் ஆனந்தவல்லி போற்றி

ஓம் அழகு நிலையம் உந்தன் உறையுள் அதுவும் அம்மா அழகம்பிகை போற்றி

ஓம் அழகெது அழகற்ற ததுஎது அத்தனையும் அன்னை உருவே போற்றி

ஓம் இலங்கையெனும் 'தீவின் எல்லை காக்கும் தெய்வம்' 'லங்காதிபா' போற்றி

ஓம் 'இலாஸ்ய' மெனும் நங்கையர் நடனத்தில் மகிழ்வாயே ஆமோதனா போற்றி

ஓம் போகத்தின் இருப்பிடம் லயமும் உன்னிடம் கேதாரகௌரி போற்றி

ஓம் எப்போதுமே நளினம் எல்லையிலா அழகி கொம்பிலிளங்கோதை போற்றி

ஓம் விழியிலே சலனம் நடையிலே சலனம் அபிநயத்தோய் போற்றி

ஓம் நெடிதுயர் நின்தோற்றம் நினைக்கும் போதே இனிக்கும் சுரும்பார் குழலி போற்றி

ஓம் அழகியதாய் நீ அரவணைக்கும் தாயே லலிதாம்பிகை போற்றி

ஓம் முனிவர் மேற்கொளும் முத்திரைகளும் நீ முயங்குபூண் முலையம்மை போற்றி

ஓம் சபலசித்தம் கொண்டோர் அணுக இயலாதோர் சிவகைங்கர்யை போற்றி

ஓம் 'லகுலர்' வழிவந்த தந்திரக் கலை வல்லோர் வழிபாட்டை ஏற்பாய் போற்றி

ஓம் நெற்றிக் கண்காட்டும் தநுமத்யாம்பிகை, தவளவெண்ணகை போற்றி

ஓம் வெங்கம் உடையாய் புவனை 'ஹ்ரீம்' என்னும் பீஜ துணைமாலை அம்மை போற்றி

ஓம் அசைவே நடனம் அன்பான பேச்சு அங்கோல்வளை போற்றி

ஓம் யாகத்தில் 'அக்னி ஜ் வாலை'யில் சுடராக எதர்வருவாயே போற்றி

ஓம் ஒளிதரும் 'தும்' எனும் துர்கா உன்பீஜம் தோட்டுமலர் மங்கை போற்றி

ஓம் சோதி மண்டலத்தின் நடுவிலே எழுந்தருள் தேவநாயகி போற்றி

ஓம் பூர்ணாகுதியில் தூண்போல் நெடிதாகத் தோன்று வாயே போற்றி

ஓம் ஒளிவடிவம் நீ தொடங்கும் செயல் எல்லாம் ஓங்கி வளரும் போற்றி

ஓம் உன்னைப் போற்றிடும் மந்திரச் சொல் எல்லாம் உடனே பலன்தரும் போற்றி

ஓம் உன்னை நினைத்து வேண்டிய தெல்லாமே உடனே கிடைத்திடும் போற்றி

ஓம் நிறைவு என்பதை இலக்கணமாய்க் கொண்டோய் பட்டீஸ்வரத்தோய் போற்றி

ஓம் சுறுசுறுப்பென்பதும் பரபரப்பும் உன் உடன்பிறப்பு போற்றி

ஓம் சோதிவளையம் சுற்றியே வலம்வரும் 'வடுவகிர்க் கண்ணம்மை' போற்றி

ஓம் அறியாமை அகற்றிடும் அக்கினிச் சிரிப்பு அழகால் உயர்ந்தாய் போற்றி

ஓம் ஒளிதெளிவளையல்கள் அணி கமலக்கர அழகீச்சுரி போற்றி

ஓம் எரிகின்ற தீப்போன்று எங்கிருந்தாலும் அழகாகும் ஆகத்தோய் போற்றி

ஓம் கனல் உமிழ் மாலையோய் ஆமோதாளக நாயகியே போற்றி

ஓம் ஊழி நெருப்பாலே உலகை எலாம் சுடும் 'ஜகஜ்ஜ்வாலா' போற்றி

ஓம் தீயினை ஒத்ததோர் ஜோதியே சுடரே கிரிசுந்தரிபூவை போற்றி
ஓம் மூன்று கூடத்திலும் 'ல' காரமாய்த் திகழ் அழகமர் மென்முலை போற்றி
ஓம் காலத்தின் முடிவிலே தீபோடில விழுங்கிடும் கடைவாய் உடையாய் போற்றி
ஓம் அன்பாலே நெகிழ்ந்து ஆடிவிளையாடும் அழகுச்சடைமுடி போற்றி
ஓம் வெளியே உலவாமல் மனத்தை உன்னிடம் வரவழைப்பாயே போற்றி
ஓம் வைராக்ய சித்தம் படைத்தாலும் பக்தர்க்கு வாரிக்கொடுப்பாயே போற்றி
ஓம் கந்தன் கணபதி உந்தன் பிள்ளைகள் கனகாம்பிகையே போற்றி
ஓம் குண்டலிப் பாதையில் மணிபூரகத்தில் லாகினி சக்தி போற்றி
ஓம் கண்கள் செவிதேட மகரகுண்டலங்கள் பொன்னூஞ்சல் ஆடும் போற்றி
ஓம் பேறுகள் யாவும் பெற்றவளே அம்மா குழல்வாய்மொழி போற்றி
ஓம் விரும்பியதை எல்லாம் அடைந்தவள் நீயன்றோ சொர்ணபுரேசுரி போற்றி
ஓம் அறிவின் நிறைவே அகிலாண்டேஸ்வரி அமிர்தவட்லலியே போற்றி
ஓம் சகல மங்களமும் உன்னிம் அடைக்கலம் அதிசுந்தரமின்னம்மை போற்றி
ஓம் வீரியம் யாவும் ஓரிடம் உன்னிடம் அமலக்குய மின்னம்மை போற்றி
ஓம் வேண்டிய தெல்லாம் பெற்றவர் சூழ விற்றிருப்பாயே போற்றி
ஓம் பெறற்கரும் பேறெது நீதானே அப்பேறு அமிர்தேஸ் வரி போற்றி
ஓம் நிலையாமை காட்டிட அனைத்தையும் அழித்திடும் அருட்பார்வையே போற்றி
ஓம் நீ உடுத்தும் ஆடை என்றும் துவங்கிடும் அரும்பனவன முலை போற்றி
ஓம் அங்கம் சிதறிய அந்தந்த இடங்கள் உந்தன் பீடங்கள் போற்றி

ஓம் ஆரங்கள் மேனியை ஆரத்தழுவிட மேலும் ஒளிபெறும் போற்றி
ஓம் மேனியைச் சுற்றிய ஒளி வட்டம் காண்பவர் ஞானியர் வாழ்க போற்றி
ஓம் சூலம் எடுத்தகை ஞாலம் அளந்திடும் கோதை அம்மையே போற்றி
ஓம் சூரர்கள் வணங்கிடும் சொக்கநாயகி சோபுர நாயகி போற்றி
ஓம் தேடி வருவோர்க்கு உள்ளேன் இதோ என்பாய் சூளிகாம்பிகை போற்றி
ஓம் குன்மநோய் நீக்கிடும் அன்னையே சுவேதவலயாம்பிகை போற்றி
ஓம் 'சூம்' எனச் சொல்லியே ஒப்புதல் அளித்திடும் ஞானவல்லி போற்றி
ஓம் முறம் ஏந்திப் பணிசெய் சீதளாதேவி சோபனாவே போற்றி
ஓம் முறம் ஏந்தி நின்றாலும் அறம்வளர்த்த நாயகி அன்னபூரணி போற்றி
ஓம் சூலம் மட்டும் நட்டுத்தேவியைக் காண்பாரே சுந்தரநாயகி போற்றி
ஓம் சூரனும் உணர்ந்துன்னை நெஞ்சில் இறுத்துவான கோகிலாம்பிகை போற்றி
ஓம் நீசரை ஏற்றிடும் கழுமரமாகவும் நிற்பவள் நிமலிகை போற்றி
ஓம் சத்வகுணம் மிக்கதேவர்கள் வணங்கிடும் பொற்கொடி அம்மை போற்றி
ஓம் வெண்தாமரையில் வீற்றிருப்பவளே பொன்மயிலம்மை போற்றி
ஓம் தூயவெண்ணிறம் தாயே உன்நிறம் வடிவுடைமங்கை போற்றி
ஓம் ஆடையில் வெண்ணிறம் அன்றிவேறணியா அழகுவனமுலை போற்றி
ஓம் தாமரைக்கைகளால் அஞ்சுகந்தன்னைத் தடவிக் கொடுப்பாய் போற்றி
ஓம் மேகத்திலும் வெள்ளை மேகம் போன்றவளே யாழினும் மென்மொழி போற்றி
ஓம் சுகமுனி துதிக்கும் குழலார்கோதை பட்டீஸ்வரத்துர்கா போற்றி
ஓம் விளக்கம் நின்திருமேனியைக் காண்பது திரசுந்தரி போற்றி
ஓம் எளிய மந்திரத்தில் இருப்பவளே சிவை திரிபுராந்தகி போற்றி

ஓம் இனிய குங்குமப்பூக்கலவையைப் பூசிடும் பரிமள சுகந்தி போற்றி

ஓம் எழுதும் எழுத்ததில் இருப்பவளே அம்மா திருமடந்தை அம்மை போற்றி

ஓம் திருநீறணிந்த திவ்ய தரிசனம் திருமாது அம்மை போற்றி

ஓம் சந்தனக் காப்பலில் உந்தனின் தோற்றம் அந்தமில் இன்பம் போற்றி

ஓம் விளையாட்டாக நீபேசிடும் போது வீணையின் நாதம் போற்றி

ஓம் எட்ட இருந்தாலும் கஸ்தூரி மணக்ஞகும் ஒப்பிலா முலையம்மை போற்றி

ஓம் சக்கரத்தில் உள்ள தாமரை அமர்பவள் குயிலினும் நன்மொழி போற்றி

ஓம் உந்தனின் லீலைகள் உருவகப்படங்களாய் நெஞ்சினில் நிற்கும் போற்றி

ஓம் காரிருங்கூந்தல் குயிலமிர்தநாயகி கும்பமுலைநாயகி போற்றி

ஓம் நேர்மைக்குப் பேர்பெறும் குரவங்கமழ் குழலம்மை குன்றமுறை நாயகி போற்றி

ஓம் அறநெறி உணர்த்திடும் நூல்களில் உன்உரு அகத்தினில் தோன்றிடும் போற்றி

ஓம் தாழ்ந்த குணத்தவர் வாழ்தல் தவறெனும் ஆழ்ந்தநோக்கினோய் போற்றி

ஓம் பாகுபாடுகாணா முழுமையே செழுமையே கோவர்த்தனாம்பிகை போற்றி

ஓம் தோற்றமும் முடிவும் அற்றவள் ஆயினை நித்யாதேவி போற்றி

ஓம் நீலகண்டனின் தர்மபத்தினி ஞானச்சரிவார்குழலி போற்றி

ஓம் எந்தத் தேவையும் எதிர்பார்ப்பும் இல்லா சௌந்தராம்பிகை போற்றி

ஓம் கட்டற்ற நின்னைப் பற்றற்ற முனிவர்கள் பற்றிக்கொள்வரே போற்றி

ஓம் அகந்தை, செல்வம், மது, மதம்பிடித்தநிலை அற்றவளே சக்தி போற்றி

ஓம் எல்லாம் அழிந்தாலும் இருக்கின்றவள் இமய அருந்தவநாயகி போற்றி

ஓம் வடிவம் குணம் இல்லா வாக்கு மனம் எட்டா நிரந்தரதேவி போற்றி

ஓம் ஆத்மாவிலும் சற்றும் அழுக்கேயில்லாத மின்னனையாள் அம்மை போற்றி

ஓம் உணர்வும் ஓய்வுற்று அமைதியிலே நிற்கும் ஜகதம்பிகையே போற்றி

ஓம் யார்வந்து தடைசெய்ய அன்னையின் செயல்களை ஜடாமகுடநாயகி போற்றி

ஓம் அசுரர் படைகளைத் தளர்வடையச் செய்யும் ஆரண்ய வாசியே போற்றி

ஓம் தாரகா சூரனை மாய்த்தவளே அம்மா கோலயாழ்மென்மொழி போற்றி

ஓம் கள்ளமில்லாக்கைகள் வாஎன அழைத்திடும் கௌரி அம்பிகை போற்றி

ஓம் நல்லோரைக் காத்திடப் பொல்லோரை வதம்செய்யும் கோல்வளைக் கையம்மை போற்றி

ஓம் கருணையால் நெஞ்சம் கசிந்து நெகிழ்ந்தவள் கௌரிபார்ப்பதி போற்றி

ஓம் உணவையும் கருதாமல் ஒன்றித்தவம் செய்யும் குயிலாகும் மென்மொழி போற்றி

ஓம் இடையில் நீல உடைஇறுகக் கட்டியவள் நடையினில் அன்னமே போற்றி

ஓம் அரக்கர் குலம் என்றால் ஆங்காரம் கொள்வாயே அங்காளம்மையே போற்றி

ஓம் ஆனந்தச்செறிவு நீ அலை அலையாய் அதை அள்ளித் தருவாளே போற்றி

ஓம் வேம்பை விரும்பியே வினை, பிணி நீக்கிடும் பெரியம்மையே போற்றி

ஓம் உன்னை உணர் மனம் வெற்றிடமாயினும் பேய்கள் புகாதது போற்றி

ஓம் அசுரர் மனைவியர் தூற்றவர் ஆயினும் அன்னை நின் கருணை போற்றி

ஓம் இரைச்சலை விரும்பாமல் இன்னிசை கேட்டிடும் இளமுறை நாயகி போற்றி

ஓம் மான்தோல் அடுக்கிய மாளிகை வாசிநீ சகிதேவி அம்மை போற்றி

ஓம் சுவைத்து உணராத அருவம் எனினும் சுவைக் கெலாம் சுவையே போற்றி

ஓம் நித்தமும் கல்யாணத்திருக்கோலம் மங்களம் நித்யகல்யாணம் போற்றி

ஓம் நிரந்தரம் சுகம் தரும் பகவதி பகீரதி பட்சநாயகி போற்றி

ஓம் வற்றாத சீருடைய செல்வி நீ, பேராசை அற்றவளே போற்றி

ஓம் நேர்மையாளன் என்றால்நின் கடைக்கண் நோக்கு மாறாதம்மா போற்றி

ஓம் இடையூறே இல்லாத இன்பப்பெருக்கே ஸ்திரசுந்தரி போற்றி

ஓம் காலத்தின் அசைவை முடிவுக்குக் கொண்டுவரும் புராந்தகி, புறவம்மை போற்றி

ஓம் 'தும்' என்னும் பீஜத்தின் விரிவே துர்காவே நீலோற்பல விசாலாட்சி போற்றி

ஓம் துடுக்கரை அடக்குகிற பர்வதராஜபுத்ரி பிரயாகேசுரி போற்றி

ஓம் துட்டர்கள் நெருங்கிட இயலாத வெறிகொண்டாய் வட்டப்பாறை அம்மை போற்றி

ஓம் பாவங்களைப் போட்கக வேகமாய் விரைந்திடும் பர்ப்பதநாயகி போற்றி

ஓம் யாராலும் எதிர்க்க இயலாத வீரி நீ வாடாமுலை அம்மை போற்றி

ஓம் அறிவிலிகளின் கொட்டம் அடக்கிடும் வடிவாம்பா ராஜேஸ்வரி போற்றி

ஓம் மயானத்தில் இருந்து மாமிசம் உண்கின்ற மாமாடிய காளி போற்றி

ஓம் கெட்டவர்க்கெல்லாம் கெட்டவள் எங்கள் கேடு களைவாய் போற்றி

ஓம் அரக்கரை அப்பாலுக் கப்பாலும் விரட்டும் ஆளிவாகினி போற்றி

ஓம் துர்தேவதை, கெட்டகோள்களைத் துரத்தும் யோகினி மோகினி போற்றி

ஓம் திக்கற்றோர் புகல் நீ தேற்றுவாய் ஆற்றுவாய் திரியம்பகி போற்றி

ஓம் 'ஷ்டம்' ஒலி எழுப்பியே வில்லினைச் சுழற்றிடும் சாதகி, மாதவி போற்றி

ஓம் 'ஷ்டம்' ஒலி வடிவினோய் சங்கரி வானவி மைம்மேவு கண்ணி போற்றி

ஓம் உறுதியாய்க் கைப்பற்ற உற்ற தூணாவாய் சவுரி சம்பவி போற்றி

ஓம் 'ஷ்டம்' எனும் பீஜம் உன் மந்திரம் ஆகும் சந்திரசேகரி போற்றி

ஓம் ஜீவாத்மாவைக் கட்டத் தேர்ந்த முளைநீ சிவரூபியே போற்றி

ஓம் கோளெலாம் ஆள்பவள் குலவதி கோமளி கைலாய நாயகி போற்றி

ஓம் பச்சைக்குதிரையில் பவனி வந்திடும் பரிபூரணியே போற்றி

ஓம் எட்டுத்திக்குப் பாலகர் போற்றும் இதய நதியே போற்றி

ஓம் அமரரை அசுரரைச் சமநிலையில் வைக்கும் ஆறாதாரமே போற்றி

## சதுஸ்ரம் : துர்கையின்பலவங்கள்

ஓம் பச்சைக் கிளி வந்து பழகும் வளைக்கரம் பட்சிதுர்கா போற்றி

ஓம் அஸ்வமேத யாக அரண் நீ ஜ்வலதுர்கா போற்றி

ஓம் அஜபாமந்திர அட்சரமை ஆவாய் ப்ரம்மசாரிணி போற்றி

ஓம் ஹம்ஸ பீஜம் அதன் அம்சம் நீதான் சாந்தி துர்கா போற்றி

ஓம் 'ஹாஹா' எனக் கதறும் அபலைகளைத் தேற்றும் வரததுர்கா போற்றி

ஓம் உள்ளம் நெகிழ்வதில் இளகும் நெய்போன்றவள் சபரிதுர்கா போற்றி

ஓம் மரகதப்பச்சை மணி ஒளிபோன்றனை மஹாகௌரி போற்றி

ஓம் 'ஹூம்' எனும் ஒலி கேட்டுக் கவசமாய் உதவிடும் சிம்ஹமுகி போற்றி

ஓம் யாகத்தின் ஆகுதி அன்போடு ஏற்றிடும் அக்னிதுர்கா போற்றி

ஓம் 'ஹூம் எனும் அரண்மனை உள்ளே இருப்பவள் மஹாதுர்கா போற்றி

ஓம் 'ஹூம் எனும் கூண்டில் வாழும் பைங்கிளி ரிபுமாரிணி' போற்றி

ஓம் 'ஹூம்' எனும் கமலத் திருமகள் நீயே விஷ்ணு துர்கா போற்றி
ஓம் 'ஹூம்' மரத்தில் பூத்த பூங்கொத்தே வனதுர்கா போற்றி
ஓம் 'ஹூம்' எனும் தீபத்தின் சுடரொளி தாயே தீபதுர்கா போற்றி
ஓம் 'ஹூம்' எனும் கடலிடைத் தோன்றிடும் பௌர்ணமி லவணதுர்கா போற்றி
ஓம் 'ஹூம் பட்' எனும் ஒலி தீமைகளைந்திடும் வராஹதுர்கா போற்றி
ஓம் 'ஹூம் பட்' எனும் ஒளி மாயை இருள்நீக்கும் ப்ரக்ஞாதுர்கா போற்றி
ஓம் 'ஹூம்' எனும் வானில் துவங்கிடும் கதிரவன் சூலினிதுர்கா போற்றி
ஓம் 'ப்பட்' என ஒலிதரும் சண்டி அனுசண்டி உத்தர சண்டிகா போற்றி
ஓம் படிக மணிபோன்ற தூயநிறத்தோய் ப்ரம்மதுர்கா போற்றி
ஓம் நவகோள் வழிபடும் நாகபூஷணி நாரி சூரி போற்றி
ஓம் வயிற்றுத்தொல்லையை, போக்கினைப் போக்கிடும் வயிரவிவாகினி போற்றி
ஓம் கோளின் மாற்றங்கள் காட்டிடும் கோதையே கோலசுந்தரி போற்றி
ஓம் உணர்வுடையோர் மதிக்கின்ற உட்சசித் திலகம்நீ மவுன சுந்தரி போற்றி
ஓம் கோள்களையும் காக்கும் சூலபாணி வாமி சுமங்கலையே போற்றி
ஓம் பச்சிலை மூலிகையால் நச்செலாம் போக்கிடும் பவளவண்ணப் பூங்குழலி போற்றி
ஓம் எளியோன் அச்சமெலாம் அறவே நீக்கிடும் மரகத நிறத்தி போற்றி
ஓம் பிறருக்கு வசப்படாய் பிறரை வசப்படுத்தும் திறன் மிகுதேவி போற்றி
ஓம் கோள்களை ஆட்டுவித்து அம்மானை ஆடிடும் காங்காளியே போற்றி
ஓம் மக்களின் கூட்டத்தை வழிநடத்திச் செல்லும் சற்குணி நிர்க்குணி போற்றி

ஓம் சிற்றுரையும் காக்கும் தேவதை யாகிடுவாய் முக்கனிச் சாறே போற்றி

ஓம் பிரம்மாஸ்திரம் அதனை ஏற்றுக் கொண்டவளே பித்தனின் மனைவியே போற்றி

ஓம் அன்னையின் கைகள் ஏந்தும் ஆயுதம் அத்தனையும் சக்தி போற்றி

ஓம் கவளம் கவளமாய் இறைச்சியைப் புசிக்கும் தவள நகையாய் போற்றி

ஓம் இல்லறத்தார் போற்றும் இன்சொல் இளங்கிளி வைகல் அம்பிகை போற்றி

ஓம் பூதபீடைமயும் கோளாறும் போக்கும் நாதஸ்வரூபிணி போற்றி

ஓம் 'ஹம்' எனும் பீஜமாய் ஆனவளே அம்மா ஆபத்தில்காப்பாய் போற்றி

ஓம் சேனைத்தலைவி வாராஹி போற்றிடும் சித்திரப் பாவையே போற்றி

ஓம் ஆரங்கள் பதித்த ஆடையை உடுத்தோய் ஆகமசுந்தரி போற்றி

ஓம் உள்ளத்தின் நிறைவை வெள்ள மெனத்தரும் உயிருக்கு உயிரே போற்றி

ஓம் சிவனும் வழிபடும் சீர்மிகு செல்வமே சித்த நாயகியே போற்றி

ஓம் புன்னகையாலே நிலவையும் பழிக்கும் பெண்மையின் பேறே போற்றி

ஓம் யாகத்தின் ஹவிசை அந்தந்த தெய்வமாய் ஏற்றிட வருவாய் போற்றி

ஓம் பொன்னிற மஞ்சள் பெண்மணி நீயே உண்மையின் விளக்கம் போற்றி

ஓம் தாமரைக்கையில் ஜெபமாலை ஏந்திய சந்தியாதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் கீலகம் பாலமாய் அமையும் ருத்ரதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் அஸ்திரம் பாதுகாப்பளித்திடும் சித்திதாயினி போற்றி

ஓம் 'ப்பட்' எனும் பாம்பின் ரத்தினம் போன்றவட்ள ஸ்கந்தமாதா

ஓம் 'ப்பட்' எனும் மலரின் தேனே ஜாதவேதஸ்துர்காவே போற்றி

ஓம் 'ப்பட்' எனும் பங்கயம் வாழ்கின்ற இலக்குமி சுமுகிதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் மாளிகை உச்சியில் தோன்றிடும் பத்ராதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் வேடிளவியில் பரிசாய் வருபவள் கூஷ்மாண்டினி போற்றி

ஓம் 'ப்பட்' எனும் சிப்பியின் முத்தொளி நீயே சிந்துதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் மரத்தின் மலர்க்குவியல் நீ ப்ரமரதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் வீரரின் கத்தியின் கூர்மை க்ரூர துர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் உடலில் உயிராய்த் திகழ்வோய் சைலபுத்ரி போற்றி

ஓம் 'ப்பட்' எனும் பல்லக்கில் ஏறிவவருபவள் வராரோஹதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் குடையால் அடையாளம் காட்டுவாய் கரிஷ்டதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் பீடத்தில் எழுந்தருள் நாயகி துர்முகியே போற்றி

ஓம் 'ப்பட்' காரம் சுற்றிய மண்டிலம் உள்ளவள் வரிஷ்டதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் யானையின் மதநீர்ப்பெருக்குநீ சண்டதுர்கா போற்றி

ஓம் நெற்றிக்கண் சிவதுர்கா, நீலஜங்காதுர்கா போகமோட்சதுர்கா போற்றி

ஓம் கனிகளைச் சுவைத்திடும் ஸ்வாங்கரமுகிதுர்கா காத்யாயனி போற்றி

ஓம் செய்யும் செயலுக்குப் பயனைத்தருபவள் ஜெயதுர்கா போற்றி

ஓம் பலனை அளிப்பதைக் கருத்தாய்க் கொண்டவள் விஜயதுர்கா போற்றி

ஓம் 'ப்பட்' எனும் கத்தியின் ஒளி முனை போன்றனை பத்ரகாளி போற்றி

ஓம் பலனெனும் உருவினில் வருபவள் நீயே காலராத்ரி போற்றி

ஓம் பலனைக் கருதாமல் நலனைக் கருதுவாய் நவமிதுர்க்கா போற்றி

ஓம் கனவின் தொல்லையைக் களைகின்ற சசிதுர்கா ஸ்தூலதூர்க போற்றி

ஓம் ஸ்வாதிஷ்டானத்தாமரை அமர்ந்தவளே நவதுர்கா போற்றி

ஓம் தானே தோன்றிய மகிஷாசுர மர்த்தினி வரவர்ணினீ போற்றி

ஓம் உயிரெழுத்தாடிக எழுஸ்வரங்களாய் மிளிரும் வரேண்யதுர்கா போற்றி

ஓம் ஸ்வர்க்கத்தின் அரசியே பட்டீஸ்வரம் வாழும் துர்கையே போற்றி போற்றி

ஓம் தங்கமாய்ச் சுடர்விடும் தலைவி நீ நந்தியா நிரஞ்சனியே போற்றி

ஓம் 'ஸ்வாஹா' எனும் ஒலியில் பக்தனின் சமர்ப் பணம் ஒப்புவாயே போற்றி

ஓம் கணவனைத் தானே தேர்ந்தெடுக்கும் கன்னி காதலியம்மை போற்றி

ஓம் இராகஸ்வரங்களில் மேல் நிலை காண்பவள் அமரநாயகி போற்றி

ஓம் தனக்குத்தானே விளங்கித் தனை நாடுவோர்க்கும் விளக்கும் திகம்பரநாயகி போற்றி

ஓம் இன்னிசை கேட்பதில் எனக்கினை யாரெனும் அன்னை கோமதி போற்றி

ஓம் ஒன்பது படி கொண்ட ஸ்ரீ சக்ரத்தேரில் ஊர்வலம் வருவாய் போற்றி

ஓம் தன் பக்கம் சார்ந்த சேனைக்குப் பலம் தரும் சர்வசக்தியே போற்றி

ஓம் வேறெதும் வேண்டாது உன்னையே வேண்டினால் தன்னையே தருவாய் போற்றி

ஓம் யோக நித்திரையில் மாலையும் உறங்கிடத்தூண்டுவாயே போற்றி

ஓம் பிறரைச் சாராது பெருமையில் உயர்ந்த பிரணவ ரூபிணி போற்றி

ஓம் தளர்ச்சியோ கலக்கமோ இல்லாது செயல்புரி தாரணியே போற்றி

ஓம் மோகினியும் நாணும் பேரெழிலே அம்மா மோகவதியே போற்றி

ஓம் வேண்டுதல் வேண்டாமை அற்ற மெய்ச்சுடரே விரசாதேவி போற்றி

ஓம் கேடுசெய்வோரை ஓட விரட்டுகிற 'ஜ்வாலா முகி' போற்றி
ஓம் யானையின் மத்தகம் போன்ற திருமார்பு 'காமசாரிணி' போற்றி
ஓம் வேழத்தில் அமர்ந்து வரும் 'விஸ்வகாமா' 'காமாக்கியா' போற்றி
ஓம் அயக்ரீவர் போற்றும் 'உத்பலாட்சி', 'விபுலா' 'அபயா'வே போற்றி
ஓம் யானைத்தோல் போர்த்தும் அரனின் துணைவியே 'தாரா'வே போற்றி
ஓம் அமுதம்போல் நலம்தரும் இனியவே செய்வோய் 'குமுதா'வே போற்றி
ஓம் மாற்றமே இல்லாத தோற்றத்தைக் கொண்டனை 'ப்ரம்மகலா' போற்றி
ஓம் கந்தர்வர் போற்றும் 'சுந்தரி' 'நிதி' 'வந்தனியா' போற்றி
ஓம் அரக்கரின் தோலை உரிப்பதில் விருப்பங்கொள் 'சத்யவாதினி' போற்றி
ஓம் அசுரரைமாய்ப்பவள் 'ஜெயா' 'ப்ரபா' 'லலிதாவே' போற்றி
ஓம் வெறுப்பை விலக்குவாய் 'பிங்களா' 'பிரசண்டா' 'அங்கணா' தேவி போற்றி
ஓம் மேருவின் குகையிலே வாழ்ந்திடும் மோனமே 'மேதா' 'பீமா' போற்றி
ஓம் கும்மி அடிப்பதில் தன்னை மறந்தவள் 'ஜெயந்தி' 'ரம்பா' போற்றி
ஓம் சிங்கத்தின் குகையிலும் 'செல்பவள்' 'மஹாதேவி' 'ஜலப்ரியா' போற்றி
ஓம் அநுமனின் பாடலில் அக்கரை காட்டுவாய் 'கபிலா' 'கமலா' போற்றி
ஓம் கண்ணனின் சோதரி 'கபாலினி' 'மாதவி' 'மார்க்கதாயின்' போற்றி
ஓம் 'ஹ' எனும் எழுத்திலே சிம்மமே 'துர்கா' 'துர்க்கமோஹா' போற்றி
ஓம் 'ஹ' மது துர்காதிசமநீ துர்கா பதவி நிவாரிணி போற்றி
ஓம் 'ஹ' எனும் ஆற்றின் ஓட்டமே 'துர்கமா' 'துர்கமாலோகா' போற்றி
ஓம் 'ஹ' தாமரை ஆயுததாரிணீ 'துர்கம ஸேதினீ' போற்றி
ஓம் 'ஹ' நிலா துர்க மஞ்ஞான ஸமஸ்தானா துர்கஸாதினீ போற்றி
ஓம் 'ஹ' தயிர் சுவைதுர்கம தயானபாஸினி துர்கநாஸினீ போற்றி
ஓம் 'ஹ' எனும் திசையிலே உதிக்கின்ற சூரியன் துர்கதோத்தாரிணீ போற்றி

ஓம் 'ஹ' எனும் பாலையில் சோலைநீ ஒளிக்கதிர் துர்க நிஹந்த்ரீ போற்றி

ஓம் 'ஹ' எனும் இல்லத்தின் அரங்கம் நீ துர்கமாபஹா போற்றி

ஓம் 'ஹ' எனும் நீர்வீழ்ச்சி துர்கதைத்யலோகதவா நலா போற்றி

ஓம் 'ஹ' எனும் தேன்சுவை துர்கபாமா துர்கமாத்மஸ்வரூபிணி போற்றி

ஓம் 'ஹ' எனும் தபசிநீ துர்கமஞ்ஞானதா, துர்கமார்கப்ரதா போற்றி

ஓம் 'ஹ' எனும் வசந்த மல்லிகை துர்கபா, துர்கமவித்யா போற்றி

ஓம் 'ஹ' எனும் சுரத்தினில் காகளி நிஷாதம் துர்கமாச்ரிதா போற்றி

ஓம் 'ஹ' எனும் பீஜமே துர்கமஹா, துர்கமேஸ்வரி போற்றி

ஓம் 'ஹ' எனும் பறைஒலி துர்கமாஸுரஸம் ஹந்த்ரீ போற்றி

ஓம் 'ஹ' எனும் பெண்மைஎழில் துர்கமதா, துர்கம்யா, துர்கபீமா போற்றி

ஓம் 'ஹ' பரதேவதை துர்கதாரிணீ துர்கமாங்கீ போற்றி

பட்டீஸ்வரத்தோய் போற்றி

பல்லாண்டு பல்லாண்டு போற்றி.

# பட்டீஸ்வரம் ஸ்ரீ துர்கா தேவி





## 2. சரித்திர நாயகி

**விருத்தம் :**

பட்டீஸ்வரம் வாழும் துர்கா தேவி நீ
நவசக்திநாயகி நவரத்னநாயகி
நவயோக நாயகி நவக்ரஹ நாயகி
நவகோடி நாயகி நவராத்ரி நாயகி
நவகோண நாயகி
நவமந்த்ர நாயகி
நவயுகம்படைக்கின்ற
நாரணி பூரணி
சாந்தஸ்வரூபிணி

**பாடல் :**

முடிசார்ந்த மன்னர்களும்
அடிசார்ந்து தொழுது நின்ற
வரலாறு உன்னதம்மா
பழையாறை எனும் நகரில்
தனி ஆட்சி செலுத்திவரும்
மஹராணி நீ அம்மா
துர்காவே....

(முடிசார்ந்த)

அம்மாவே உன் ஆணை அதைக் கேட்ட பின்தானே
எந்நாளும் சோழர்குலம் எதையும் செய்யும்
உன் ஆசி அதைவேண்டி வந்தோர்கள் வென்றார்கள்
பொன்மாரி பொழிவாயே அம்மா அம்மா

(முடிசார்ந்த)

மாற்றங்கள் இயல்பென்று காட்டவோ நீ உந்தன்
கோட்டையை அடிக்கடி மாற்றிக் கொண்டாய்
ஏற்றமிகு பட்டிஅம்மா வழிபட்ட இத்தலத்தில்
தோற்றத்தைக் காட்டியே சிரிக்கின்றாய்
(முடிசார்ந்த)

எங்கே நீ சென்றாலும் உன்பார்வை ஒன்றேதான்
எப்போதும் வடதிசையை நோக்குகின்றாய்
அங்கேதான் மின்காந்தம் உன்காந்தம் அதும் சேர்ந்து
இங்கேநீ யாவரையும் ஈர்க்கின்றாய்
(முடிசார்ந்த)





# 3. அபயகரம்

சரணென வந்தவர்க்கு அபய கரம்காட்டும்
சாந்த ஸ்வரூபனி நாராயணி
நவகோடி நாயகி மகிஷமர்த்தினி
உலகெலாம் காக்கும் சிம்ம வாஹினி
பட்டீஸ்வரம் நின்ற துர்கா தேவி நீ
பார்வதி கல்யாணி மனோரஞ்சனி (சரணென)

எதுவந் தாலும் நான் பார்த்துக் கொள்வேன்
இனிமேல் பயமேன் ஜெயமே என்பாய்
இருபுறம் இருவினை நன்மை தீமை
நடுவினில் நில்லென நயமாய்ச் சொல்வாய்

பாலரபி ஷேகம் பார்க்கும் போது
நூல்போல் சுழிமுனை என அது வழிந்தது
பட்டும் படாதிரு என்றே பகர்ந்தது
சத்நனக் காப்பு கண்டதும் புரிந்தது
பட்டீஸ்வரம் நின்ற துர்கா தேவி நீ
சுட்டி உணர்த்துவதில் கெட்டிக் காரி நீ (சரணென)

எதையோ கேட்க யாரோ வருவார்
புதிராய் இருந்ததை புரியவைத் திடுவாய்
அமைதியை விரும்பும் அஞ்சுகம் கையில்
ஆணவம் அழிந்து புதைந்தது காலில்
ஞானம் உணர்த்தும் ஓங்கார வடிவம்
தூர இருந்தும் தொனிக்கும் ப்ரணவம்
ஆகர்ஷிணி நீ அம்ருத வர்ஷிணி
கேட்டதைக் கொடுக்கும் ஐஸ்வர்யலக்ஷ்மி
பட்டீஸ்வரம் நின்ற துர்கா தேவி நீ
பட்ட மரத்தையும் துளிர்க்கச்செய் பவள் நீ (சரணென)



# 4. என்னில் நீ

**விருத்தம்**

கண்பட்ட இடமெல்லாம் பட்டீஸ்வரம்
கால் பட்ட இடமெல்லாம் பட்டீஸ்வரம்
என்நெஞ்சைத் தொட்டபின் துர்காம்பிகே
நீ வேறு நான்வேறா துர்காம்பிகே

செல்லும் இடமெல்லாம் தேவி நின் தரிசனம் - என்
சிந்தைக்கு மட்டுமே தெரிகின்ற ரகசியம் - நான்
(செல்லும் இடமெல்லாம்)

கொள்ளைச் சிரிப்பு கண்ட நாள் முதல் உன்வசம்
கொடுத்துவிட்டேனம்மா என்னை உன் வசம்
(செல்லும் இடமெல்லாம்)

பட்டு வஸ்திரங்கள் சார்த்திப் பார்த்துவிட்டேன்
புஷ்பத்தால் பாவாடை கட்டிப் பார்த்து விட்டேன்
சந்தன ஆடையும் அணிந்து பார்த்துவிட்டேன்
அந்தந்த அலங்காரம் நெஞ்சிலும் பார்த்திருப்பேன்
(செல்லும் இடமெல்லாம்)

தூர இருந்தாலும் தொடர்பில் குறையில்லை
நேரில் நின்றால் தான் என்னும் நிலையில்லை
யாரும் தடையில்லை எல்லை நமக்கில்லை
நேரம் காலம் இல்லை நினைவு மறப்பதில்லை
(செல்லும் இடமெல்லாம்)



# 5. மக்கள் வெள்ளம்

பகல் இன்னும் நீளாதா இரவது போகாதா
பக்தர்கள் இப்படிக் கேட்கும் கேள்விக்கு
பதில் சொல்லுவாய் துர்கா - அம்மா
பட்டீஸ்வரம் துர்கா (பகல் இன்னும்)

நாளும் உன் கோயிலில் கூடிடும் கூட்டம்
யார் அதை எண்ணுவது?
நாமாவளிகள் அர்ச்சனை அபிஷேகம்
கணக்கில் அடங்காது!
ஆறு கால பூஜைகள் என்பது
பேருக்குச் சொல்லுவது
நாளும் பொழுதும் ஆண்டு முழுவதும்
தொடர்ந்து நடந்திடுது - அம்மா
தொடர்ந்து நடந்திடுது (பகல் இன்னும்)

சின்னஞ் சிறிய பெண்ணைப் போலே
சிரிப்புக் காட்டிடுவாய்
கன்னியைப் போலே அன்னையைப் போலே
காட்சி தந்திடுவாய்
மூத்து முதிர்ந்த சுமங்கலி யாகவும்
பார்த்து மகிழ்ந்திடலாம்
நேரம் தோறும் மாறும் கோலம்
நேரில் பேசிடலாம் - உன்னுடன்
நேரில் பேசிடலாம் (பகல் இன்னும்)



# 6. பாண்டி ஆடும் பாவாடைக்காரி

அள்ளக் குறையாத செல்வம் அவள் - ஒரு
கள்ளம் இல்லாத செல்வி அவள்
பட்டீஸ்வரம் வந்து பாருங்கள் - அவள்
பாண்டி ஆடுவதை பாருங்கள் - நீங்கள்
வேண்டுவது யாவும் கேளுங்கள்

(அள்ளக் குறையாத)

சிற்றாடை கட்டி சிரித்திடுவாள் - வண்ண
பட்டாடை கட்டி களித்திடுவாள்
மலராடை காட்டி மயக்கிடுவாள் - சந்தனம்
மணக்கின்ற ஆடையும் உடுத்திடுவாள்

(அள்ளக் குறையாத)

கேட்டது அனைத்தும் கொடுத்திடுவாள் - துர்கா
கெட்டதை யெல்லாம் தடுத்திடுவாள்
வாட்டம் நீக்கி வளர்த்திடுவாள் - மீண்டும்
வாநீ என்றே உரைத்திடுவாள்

(அள்ளக் குறையாத)

ஒருமுறை பார்த்தால் போதாது - வந்து
மறுமுறை பார்த்தாலும் தீராது
உறவு என்றென்றும் மாறாது - அவள்
அன்புக்கு ஈடு இணையேது - அதை
வார்த்தையால் சொல்லி முடியாது

(அள்ளக் குறையாத)



# 7. சாந்தஸ்வரூபிணி (விழி)

பரம சாந்தம் பவித்ரம் பங்கஜ நேத்ரம்
பட்டீஸ்வரம் துர்காம்பிகே இது எந்தன் பாக்யம்
பார்க்கப் பார்க்க பரவஸ மாகும்
ஆஹா ஆஹா இங்கேதான் சொர்க்கம்

(பரமசாந்தம்)

ஒதுக்கோ அம்மா என்னைநீ அழைத்தாய்
வாடா மகனேஎன வாஞ்சையாய் அழைத்தாய்
வாரி வாரியே அமுதத்தைக் கொடுத்தாய் - என்
வாக்கிலே மந்திரம் அதை வர வழைத்தாய்

(பரமசாந்தம்)

தாயினும் இனிய தாயே நீதான்
ஆதி முதல்தாய் அன்பை வடித்தாய்
ஞான பானம் அருந்தென கொடுத்தாய்
கோல விழிகாட்டி சிக்கெனப் பிடித்தாய்

(பரமசாந்தம்)

இனி எந்தன் வாழ்வு உந்தன் வசமே
கனவல்ல அம்மா நடப்பது நிஜமே
கனிகளின் சுவையாய் இனிப்பவள் நீயே
உயிரினில் ஒளியாய் உலவுகின் றாயே

(பரமசாந்தம்)



# 8. அதிதேவதை

ராஜ சர்ப்பம் படமெடுத் தாற்போல்
அம்மா உன்தோற்றம்
நாக லக்ஷ்மி வைஷ்ணவி துர்கா
ஏனிந்த மாற்றம்
மூலா தாரம் மூண்டெழுந்தால் சகஸ்ராரம் ஒற்றம்
யோஹம் கூடும் யாவும்
என்பதுவோ சூக்ஷமம்
என்பதுவோ சூக்ஷமம் (ராஜசர்ப்பம்)

ராகு உந்தன் ப்ரபை யாக சூழ்ந்து நிற்கின்றான்
என்றும் உன்னுடன் இருக்க எண்ணி வந்திருக்கின்றான்
மங்கள் வாரம் மங்கையர்க் காக அருள் புரிகின்றான்
வெள்ளிக் கிழமை விரதம் இருந்தால் அள்ளிக் கொடுக்கின்றான்
அள்ளிக் கொடுக்கின்றான் (ராஜசர்ப்பம்)

அவனின் திசையில் உன்னை நிறுத்த ஆசை கொள்கின்றான்
அம்மா உந்தன் பின்னல் சடையில் அழகு பார்க்கின்றான்
தெற்கில் நின்று மேற்கு நோக்கி சற்றே வளைகின்றாய்
இடது தொடையின் அசைவு கண்டு அவனும் நெளிகின்றான்
அவனும் நெளிகின்றான் (ராஜசர்ப்பம்)

நடனம் ஆடும் நளினம் இங்கே நின்ற கோலத்தில்
அபயம் அபிநயம் இரண்டும் சேர்ந்தது பட்டீஸ்வரத்தில்
தோளை விட்டு தொடையில் வந்து கிளியும் நடைபழகும்
ஜாலம் அதனின் தத்துவங்கள் யாருக்குப்புரியும்
யாருக்கும் புரியும் அம்மா எவருக்குப்புரியும்?
(ராஜசர்ப்பம்)



# 9. அழகின் சங்கமம்

**விருத்தம் :**

அழகெலாம் உன்னிடம் சங்கமம் - நீ
அருள்தரும் பொக்கிஷம் ஆன்மலயம்
பழகிட ஓர் இடம் பட்டீஸ்வரம் - உனை
பார்ப்பது அவரவர் செய்ததவம்

**பாடல் :**

இந்த லாவண்யம் இந்த சௌந்தர்யம்
வேறெங்கும் காணாத ஸௌம்யம்
ஒரு மோஹனம் மதுரம் மனோஹரம்
உன்பொன்மேனி ரம்யம் ஸோபிதம்

நாதமென்றால் அதில் ஏழுஸ்வரம் - அது
பாடலாய் மலர் கின்ற உன்வதனம்
பட்டீஸ்வரம் ஜெய துர்காம் பிஹே - உன்
அழகின் ரகஸ்யம் அதிசயமே (இந்த லாவண்யம்)

ஸௌலப்யம் ஸுகிர்தம் சாமுத்ரிகம்
சந்ததம் ஸாந்தம் பரமானந்தம்
நிரந்தர யௌவனம் ஸௌமாங்கல்யம்
வரந்தரும் பதம் தரும் அதுநிச்சயம்

வானவில் அதனில் பல வண்ணம் - அவை
அத்தனையும் உந்தன் விழி வண்ணம்
பட்டீஸ்வரம் ஜெய துர்காம்பிஹே - நீ
பார்க்கின்ற பார்வை அற்புதமே (இந்த லாவண்யம்)

ஸர்வாதாரம் நீ ஸர்வ மந்த்ரம்
ஸந்தோஷம் லயம் நின் சந்நிதானம்
ஸௌபாக்யம் ஸுபீட்சம் தரும் கரம்
நிரந்தரம் சுகந்தரும் ஸர்வமங்களம்

பூமலரும் உன் புன்சிரிப்பு - என்
தேகமெலாம் ஒரு சிலிர்சிலிர்ப்பு
பட்டீஸ்வரம் ஜெய துர்காம்பிஹே - உன்
முத்துநகை சித்ரம் விசித்திரமே

(இந்த லாவண்யம்)





# 10. சகல தேவதாஸ்வரூபிணி

கருணையிலே காஞ்சி காமாட்சியோ
கலையரசி மதுரை மீனாட்சியோ
தவநிலையில் ஆரூர் கமலாட்சியோ
தண்ணருள் பொழிவதிலே விசாலாட்சியோ
(கருணையிலே)

தேவர்கள் வாழ்வது நின் மாட்சியோ
தேனுபுரியில் நின் திருக் காட்சியோ
சோழர்கள் கண்டது நின் ஆட்சியோ
பேரழ கென்பது நின் நேர்த்தியோ
(கருணையிலே)

ஹ்ரீம்கார மந்திர புவனேசியோ
மந்த்ர ஸ்வரூபிணி மங்களையோ
ஸ்ருங்கேரி சாரதா தேவிநீயோ
காத்யாயனி கன்யா குமாரியோ

அந்தாதி கேட்கின்ற அபிராமியோ
அன்ன பூரணி எனும் அம்பிஹையோ
சக்திஸ்வ ரூபங்கள் அத்தனையும்
பட்டீஸ்வர துர்கா நீதானோ

சிம்மவாஹினி துர்கா
சிம்மாஸனேஸ்வரி துர்கா
ஸர்வ வர்ண ஸோபிதா துர்கா
ஸர்வாலஸ்கார பூஷணி துர்கா
ஸர்வ ஸாஸ்திரமயி துர்கா
ஸச்சி தானந்த ரூபிணி துர்கா
ஸாம்வாஜ்ய தாயினி துர்கா
சரணம் சரணம் சரணம்



# 11. அமரர்கள் தேஜஸ் அவள்

தேவர்கள் பேரொளி சேர்ந்ததே
ஜோதி ஸ்வரூபம் ஆனதே
மகிஷா சூரனை மாய்க்கவே
மங்கையின் உருவினில் வந்ததே

ஜெயஜெய துர்கா தேவியே
ஜெயஜெய துர்கா தேவியே

சிவனின் வெண்மை திருமுகம்
யமனின் கருமை விரிகுழல்
அருணன் முருகன் செவ்விதழ்
அக்கினிச் சுடர்கள் விழிகளோ

ஜெயஜெய துர்கா தேவியே
ஜெயஜெய துர்கா தேவியே

செவிகள் வாயுவின் சக்தியே
குபேரன் பொன்நிறம் நாசியே
பல்லின் வெண்மை ப்ரஜாபதி
பதினெட்டு கரம்திரு மால் ஒளி

ஜெயஜெய துர்கா தேவியே
ஜெயஜெய துர்கா தேவியே

சந்திர காந்தி மார்பகம்
இந்திர தேஜஸ் இடைவளம்
புவியின் அழகு பின்புறம்
புருவம் சந்த்யா ஒளி மயம் (ஜெயஜெய)

வருணனின் வண்ணம் தொடை எழில்
வசுக்களின் வண்ணம் விரல்களே
ப்ரம்மனின் கிரணங்கள் பதமலர்
ஒளியின் சங்கம வடிவமே

ஜெயஜெய துர்கா தேவியே
பட்டீஸ்வரம் வாழ் தேவியே





# 12. அவதாரம்

துர்கையின் அவதாரம் - இனி
துஷ்டர்கள் நிர்மூலம்
பத்தொட்டுக் கைகளில் படைக்கலம் ஏந்தினாள்
சித்திரப்பூம்பாவை - நல்ல வெற்றிச் சுபவேளை
(துர்கையின் அவதாரம்)

சிவனின் திரிசூலம் திருமாலின் சக்ரம்
அக்னி சக்தி ஆயுதம் வாயு தநுர்பாணம்
வருணனின் திருச்சங்கம் இந்திரன் வஜ்ராயுதம்
யமதர்மன் கொடுந்தண்டம் ஜலதேவன் பாஸம்

காலனின் கத்திகேடயம் நான்முகன் கமண்டலம்
கடலரசன் கமலம் சூரியன் ஒளிக்கிரணம்
ஜெபம்செய் அட்சமாலை ப்ரஜாபதி சன்மானம்
குபேரன் மதுக்கிண்ணம் அன்பின் சமர்ப்பணம்
(துர்கையின் அவதாரம்)

நாகராஜன் வந்தே மாணிக்கம் தந்தான்
ஆபரணம் பரசு விஸ்வகர்மா அளித்தான்
கதாயுதம் அதனை துவஷ்டா வழங்கவந்தான்
சிம்மாசனம் கொணர்ந்தான் இமவான் எனும் சீமான்

காணிக்கை ஏற்றனளே கவசம் போர்த்தினளே
நாணில்வில் ஏற்றினளே சூரனை நோக்கினளே
மணிஒலி எழுப்பினளே மகிஷனை உலுப்பினளே
ஜெயஜெய துர்காம்பா தீமையை போக்கினளே
பட்டீஸ்வரம் துர்கா பாவங்கள் போக்கினளே
ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய ஜெயஜெய



# 13. யுகந்தோறும் அவதாரம்

யுகம் யுகம் தோறும் ஜெயம்தர வருவாள்
அறங்கள் காத்திடுவாள்
உத்தமி இவளின் சொற்படி கேட்டால்
நலங்கள் சேர்த்திடுவாள் - துர்கா
வளங்கள் சேர்த்திடுவாள் (யுகம் யுகம் தோறும்)

கிரேதா யுகத்தில் தசரதன் தந்தைக்கு
நாட்டை மீட்டுத் தந்தாள்
ராவண னுடனே போர்செய்யும் சக்தியை
ராமனுக்கு அளித்தாள்
வனவாசம் முடித்தபின் தருமன் வேண்ட
ஜெயம்பெற வழிவகுத்தாள்
கண்ணன் உன் காலன் கர்வம் அகற்றென
கம்ஸனை எச்சரித்தாள் (யுகம் யுகம் தோறும்)

பாரதப் போரில் சாரதி கண்ணன்
துர்கையை வணங்கச் சொன்னான்
பார்த்தனின் போற்றி கேட்டதும் அன்னை
வெற்றிமேல் வெற்றி என்றாள்
சோழசாம் ராஜ்யம் சுடர்விடச் செய்தாள்
பட்டீஸ்வரம் வந்தாள்
கலியுகத்திலும் கண்கண்ட தெய்வமாய்
அருள்மழை பொழிகின்றாள்
ஆபத்தில் காக்கின்றாள் (யுகம் யுகம் தோறும்)



# 14. ஸ்ரீ துர்கையின் சரிதம்

மந்திரம் யாவும் தன்னைவந் தடைந்திட
தந்திரம் ஒன்று செய்தான் - துர்கமன்
தவம்செய்து வரம் பெற்றான்
எங்கணும் பஞ்சம் இளைத்தது உயிர்க்குலம்
அமரர்கள் அவதி உற்றார் - கொடும்
அரக்கர்கள் செருக் கடைந்தார் (மந்திரம்)

அம்பிகை யேஇனி நம்பலம் என்றே தேவர்கள் கூக்குரலே

ஒன்பது இரவுகள் அவள்விட்ட கண்ணீர்
உலகம் பிழைத்ததுவே
ஆறாய்ப் பெருகிய நீரால் பயிர்கள்
மீண்டும் தழைத்தனவே
சாகம்பரீ அவள் சதாக்ஷி ஆனாள்
தர்மம் செழித்ததுவே (மந்திரம்)

அக்கினி வளையம் அமைத்தே நடுவினில்
சுரர்களை அவள் காத்தாள்
அசுரர்கள் தலைவன் துர்கமன் அவனை
அரைநொடியில் சாய்த்தாள்
சரண மடைந்த மந்திர சக்தியை
தன்னிடம் வரவழைத்தாள்
சர்வ மந்த்ர மயீ எனப்போற்ற
சாந்தியை அருள்கின்றாள்
துக்கம் நீக்கும் துர்காதேவி பட்டீஸ்வரம்வந்தாள்
அச்சம் அகற்றி ஆறுதல் தந்தே ஆபத்தில் காக்கின்றாள்
பட்டீஸ்வரம் துர்கா ஜெயஜெய பட்டீஸ்வரம் துர்கா



# 15. பாலாஜி - துர்கா

திருவேங் கடமும் பட்டீஸ்வரமும் திவ்ய க்ஷேத்திரங்கள்
ஸ்ரீ நிவாஸனும் துர்காம்பிகையும் இரண்டு நேத்திரங்கள்
அண்ணன் தங்கை இருவர் கரத்திலும் சங்கு சக்கரங்கள்
அள்ளிக் கொடுப்பதில் இருவரும் ஒன்றே போற்றிப் பாடுங்கள்
போற்றிப் பாடுங்கள்

(திருவேங்கடமும்)

தொண்டைமானுடன் உறவு கொண்டவன் அந்த
மணிவண்ணன்
சோழ மன்னர் காவல் தெய்வம் இந்த எழிலரசி
என்றும் இவர்கள் இருக்கும் இடத்தில் லக்ஷ்மியும் இருப்பாள்
வருவார் கோடி பெறுவார் கோடி கேட்டதைக் கொடுப்பாள்
அம்மா - கேட்டதைக்கொடுப்பாள்

(திருவேங்கடமும்)

இடது முழந்தாள் வளைந்த நளினம் எத்தனைபொருத்தம்
இடது கரத்தை தொடையில் மடக்கும் அழகும் அவ்விதமே
கடலும் முழந்தாள் அளவு ஆழம் பாதம் பற்றுங்கள்
பிறவிக் கடலை கடந்து விடலாம் என்று உணர்த்திடுமே

(திருவேங்கடமும்)



# 16. சிம்மவாஹனம்

தேவியின் சினமே சிம்மவாஹனம் - ஸர்வ
தேவதா ஸ்வரூபம் கம்பீரம்
வீரியம் விஷ்ணு வேதம் பலம்
சூரிய கிரணங்கள் ரோமாஞ்சனம்
நட்சத் திரங்கள் கழுத்தில் லயம் (தேவியின்)

இந்த்ரவில் லாகநீளும் வாலின்வளம்
சந்த்ர சூர்யர் அக்னி முக்கண் நிறம்
சண்டிகா ஸர்ச்சிகா ஹுங்காரம்
ஸந்தியா செவ்விதழ் சசி - பின்புறம்
ஸாத்யர் எனும் தேவர் ஹ்ருதயம் (தேவியின்)

நெற்றியில் பார்வதி தலையில் பசுபதி
மணிக்கட்டிலே அமர்ந்தான் தேவ ஸேனாபதி
கண்டம் திருமால் மார்பகம் ஸரஸ்வதி
கன்னங்கள் யமன் குபேரன் செவிகள் அஸ்வின்
பற்களில் வசுக்களே நாவில் வருணனே (தேவியின்)

**முடுகு :** ரூபம் லக்ஷ்மி கோபத்தில் பூதனை
சப்த மாதர்கள் பிராணன்கள் ஆக
பித்ரு தேவதைகள் அபானன் ஆக
கருணையின் வடிவில் ராத்திரி தேவி
மாங்களம் தரும் சிங்க வாஹனம்
மகிஷனை மாய்க்க சீறி எழுந்தது
கடலில் ஒளிந்த கயவனை வெளியே
கொண்டு வரவே குடித்தது நீரை

உருவம் மாறிய அசுரனை தேவி
கணத்தில் மாய்த்தாள் அமரரைக் காத்தாள்
படைவீடு விட்டு பட்டீஸ் வரத்தில்
அமைதியே வடிவாய் ஆசிகள் தருவாள்

வலத்தில் நின்று வலந்தர வந்த
தர்மம் ஸிம்ஹம் சாந்தம் அடைந்தது
அன்னை துர்கா அவளின் இடப்புறம்
மாறி நின்றது மகிழ்ச்சி தந்தது

அச்சம் அகற்றும் அதனை வாழ்த்துவோம்
துர்கா தேவியை தொழுவோம் வாரீர்
துர்கா தேவியை தொழுவோம் வாரீர்
துர்கா தேவியை தொழுவோம் வாரீர்





# 17. கேசாதிபாதம்
# (நவமணிமாலை) கண்டநடை

முடிமீது கருநாகம் திருவாசி எனச் சூழ்ந்து
ஒரு வானவில்லாகும் அழகு
சடையோடு அதுசேர்ந்து சதிராடும் படமாடும்
அழகுக்கு அழகாகும் அழகு
மழைகொண்ட கார்மேகம் சுருள்கொண்ட தலைக்கூந்தல்
இயல்பான மகுடமெனும் அழகு
மகுடத்தின் மேலே ஓர் மணிமகுடம் வைத்ததுவும்
மகராணி எனக்காட்டும் அழகு

முழுநிலவின் மேல்வட்டம் ஒளிவீசும் பிறைநெற்றி
பெருஞான நடுமுக்கண் அழகு
புருவங்கள் தனுஸாகி நெடுநாசி அம்பாகி
இதயத்தைத் தைக்கின்ற அழகு
இருவயிர மூக்குத்தி புல்லாக்குப் பொன்னூஞ்சல்
இதழ் விளிம்பைத் தொடுகின்ற அழகு
பவளங்கள் கடைந்தெடுத்த உதடுகளின் சிறு அசைவில்
முத்துக்கள் கொட்டுகின்ற அழகு

கருணை மடை திறந்தாற்போல் அருள்வெள்ளம்
அலைஅலையாய்
விழிகளிலே தவழ்வதுவும் அழகு
கன்னங்கள் முக்கனியின் வண்ணங்கள் எனக் கனிந்து
மின்னல் விளையாடுவதும் அழகு
மோவாயின் சிறுமடிப்பில் முத்தமிழும் சேர்ந்ததம்மா
பேசாமல் பேசுவதும் அழகு
ஓங்காரச் செவிகளிலே உருண்டாடும் குண்டலங்கள்
தாய்முகத்தை வருடுகின்ற அழகு

வெண்சங்குக் கழுத்தினிலே மங்கள மாங்கல்யம்
மங்கையரின் பெருமை சொல்லும் அழகு
வீணையெனத் தோளிரண்டும் ஏழிசையை மீட்டிடுதோ
விரிமார்பின் ஒய்யாரம் அழகு
கோமேதகம் புஷ்ப ராகம் கருநீலம்
வைரமணி ஆரங்கள் அழகு
மரகதத் திருமேனி முழுதாகக் காண்பதற்கு
இருவிழிகள் போதாத அழகு

நான்குகரம் வலப்புறத்தில் நான்குகரம் இடப்புறத்தில்
எட்டுத்திக்கும் கட்டுகின்ற அழகு
மேலிரண்டில் சங்குசக்ரம் நாராயணன் தங்கை
நான் என்று சொல்கின்ற அழகு
வில்லம்பை ஏந்துவதும் கேடயத்தால் தாங்குவதும்
வெற்றி நகை புரிவதுவும் அழகு
கட்கம் அது காக்கும் என தொடைதட்டிக் காட்டுவதும்
மகிஷனை மிதிப்பதுவும் அழகு


மணிபூரகச் சுழியில் மனம் லயிக்கச் செய்வதுவும்
தனி ஞானம் தருகின்ற அழகு
உலகங்கள் படைக்கின்ற எழில்வயிறு இடையோடு
தழைந்து குழைவதுவும் அழகு
சுக முனிவர் கிளி உருவில் இடது கீழ்க்கரம் அமர்ந்து
முகம் பார்க்கும் அழகும் ஓர் அழகு
தொடை அழகும் நடையழகும் சொல்லி முடியாதம்மா
துர்கா உன் அழகன்றோ அழகு

மரகதத் திருப்பாதம் நிலையாக நின்றாலும்
இடதுதாள் முன்வைத்த அழகு
நளினங்கள் காட்டுகின்ற முழங்கால் வளைவதுவும்
சிம்மம் உரசுவதும் அழகு
அபய முத்திரையும் அபிநயம்போல் அமைந்ததுவோ
அதுவும் ஓர் நயந்தான் அழகு

அழகெலாம் திரண்டுவந்து அடைக்கலம் கேட்கின்ற
அம்மா உன் திருமேனி அழகு

சோழர்களின் மாளிகையில் சொகுசாக வாழ்ந்திருந்த
பேரரசி நீயன்றோ துர்கா
காலங்கள் மாறிடினும் கலையாத பேரழகு
காட்டுகின்ற கலைமகளே துர்கா
பார்வதியாய் திருமகளாய் மூவருமே இணைந்தவளாய்
பட்டீஸ்வரம் வந்த துர்கா
ஏழை என் கண்படுமோ என எண்ணி எலுமிச்சை
மாலையிட்டேன் ஏற்றிடுக துர்கா
மண்டியிட்டேன் காத்திடுக துர்கா

வாழவழி காட்டிடுவாய் துர்கா
வாழ்க பல்லாண்டு துர்கா
வாழ்க பல்லாண்டு துர்கா





# 18. ஆக்ஞா கணபதி


ஆக்ஞா கணபதியே ஆணையிடு - உன்
அற்புதம் அதைப் பாட சொற்கள் கொடு
(ஆக்ஞா கணபதியே)

கோவிந்த தீட்சிதரின் குருநீயே
ஞான வாவிக்கரை அமர்ந்தாயே (ஆக்ஞா கணபதியே)

அரசனின் ஆவணம் கிண்ணம் இடற
அபிஷேகப் பாலதுவும் கீழ் சிதற
குளத்து நீர்கொண்டு நீராட்ட
கணத்தில் நீ அதனை பாலாக்க
தான்செய்த தவறுக்கு
கோன் மனம் வருந்திட
மானியம் பெற்றனை
மானம் காத்தனை
பக்தனை சித்தனாய் முக்தனாய் மாற்றினை
(ஆக்ஞா கணபதியே)

பட்டீஸ்வரம் துர்கையைப் பாடிட வந்தேன்நான்
கட்டுக்கள் அகற்றிடு மெட்டுக்கள் கொடுத்திடு
கொட்டிக் கொடுக்கின்ற கோடீஸ்வரன் நீயே
குருபக வானின் குளம் சீர் செய் தாளே

எடைக்கு எடையாய் தொடுத்த துலாபாரம்
கிடைத்தது தங்கம் படைத்தார் மண்டபம்
பக்தனின் சித்தம் எத்தகை யதுஎன
பாருக்குக் காட்டிய பேரின்ப நாயக
ஞானவி நாயகா
மறக்க முடியுமோ மஹாமகம் திருப்பணி செய்வித்த
பெருங்குணம் (ஆக்ஞா கணபதியே)



# துக்கம் நீக்கும் துர்கா





## 19. மூல துர்கா

மும்பெரும் சக்தியின் மூலம் நீ
எப்போதும் இயங்கும் காலம் நீ
வைத்த கண் வாங்காமல் பார்ப்பவள் நீ
வருகின்ற துயரெலாம் தீர்ப்பவள் நீ
உடலுக்கும் உயிருக்கும் பாலம் நீ
ஒன்பது வாசலிலும் காவல் நீ
அணுவிலும் அணுவாக நிற்பவள் நீ
ஆனந்த சாம்ராஜ்யம் அளிப்பவள் நீ

நவதுர்கா தேவியே எழுக தாயே
நாவிலே சூலத்தால் எழுதுவாயே
பதமலர் தொழுகிறேன் அருள்க நீயே
பாடலை கேட்கவே வருக தாயே



## 20. பெண்ணவளின் கண்ணழகு

சின்னஞ்சிறு பெண்போலே
சிற்றாடை இடைஉடுத்தி
சிவகங்கைக் குளத்தருகே
ஸ்ரீ துர்க்கை சிரித்திருப்பாள்! (சின்னஞ்சிறு)

பெண்ணவளின் கண்ணழகைப்
பேசி முடியாது
பேரழகுக் கீடாக
வேறொன்றும் கிடையாது! (சின்னஞ்சிறு)

மின்னலைப் போல்மேனி
அன்னை சிவகாமி
இன்பமெல்லாம் தருவாள்
எண்ணமெல்லாம் நிறைவாள்!

பின்னல் சடைபோட்டுப்
பிச்சிப்பூ சூடிடுவாள்
பித்தனுக்கு இணையாக
நர்த்தனம் ஆடிடுவாள்! (சின்னஞ்சிறு)



# 21. உபாசனை

உபாசனை
உன்நாமம் என்நெஞ்சில்
உருவேற உருவேற
ஒளியாகி வழிகாட்டும்
உபாசனை (உபாசனை)

அதிகாலை கருக்கலிலே அம்மாஉன் வடிவழகை
விழிக்குள்ளே கண்டதுமே துதிக்கின்றேன்
திருநாமம் ஜபிக்கின்றேன் திருப்பாதம் நினைக்கின்றேன்
த்யானத்தில் லயிக்கின்றேன் பறக்கின்றேன் என்னை
மறக்கின்றேன்.
(உபாசனை)

ஓம் என்னும் இசைநாதம் உன் சங்கின் ஒலிதானோ
ரீங்காரம் கேட்கிறது செவியினிலே
ஓராறு சக்கரங்கள் உடலுக்குள் சுழல்கிறதே
நீ விட்ட சக்கரமோ சொல்தாயே
தீங்கேதும் நேராமல் பாங்காகப் பார்த்திருக்கும்
திரிசூலம் சென்றிடுதே முன்னாலே
நீ ஏறும் சிங்கம் அது நிழல்போலத் தொடர்கிறதே
வேறு துணை எனக்கெதற்கு துர்காவே. (உபாசனை)



# 22. ஓம் ஸ்ரீ

ஓம்......... ஓம்......... ஓம்......... ஓம்.........

ஓம் என்றே உச்சரித்தேன்
ஆம் என்றே நிச்சயித்தேன்

நீ தானே சாமுண்டி துர்கா தேவி - நான்
நினைத்த தெல்லாம் கொடுக்க வந்த நீலி திரிசூலி
(ஓம் என்றே)

சண்ட முசுண்டரை நீ அழித்தாய்
சும்ப நிசும்பரை நீ தொலைத்தாய்
மது கைடபரை நீ வதைத்தாய்
மகிஷா சுரனையும் நீ மிதித்தாய்

வீரமே உருவானாய்
வெற்றியைத் தருகின்றாய்

சூலத்தை சுழற்றி நின்றே
ஆபத்தில் காக்கின்றாய் (ஓம் என்றே)

சங்குடன் சக்கரம் ஏந்திடுவாய்
சந்திர கலைகளைத் தாங்கிடுவாய்
விந்திய மலையினை அடுத்திடுவாய்
துன்பம் யாவையும் துடைத்திடுவாய்

தேவாதி தேவர்களும்
போற்றுகின்ற அம்பிகையே

சிங்கத்தில் ஏறிவந்து
தரிசனம் தந்திடுவாய் (ஓம் என்றே)



# 23. துணைவருவாய் தாயே

துர்கா தேவி தாயே - என்
துணையாய் வருவாய் நீயே (துர்கா)

நெஞ்சின் ஓட்டம் நீயே - என்
நினைவும் கனவும் நீயே
நீதரும் அமுதம்
தேன்சுவை மதுரம்
என்றுமே இனி இன்பமே (துர்கா)

மங்காத கல்வியும் செல்வமும் நீ
மாறாத பாசமும் நேசமும் நீ
எத்திசை திரும்பினும் தெரிவது நீயே
எப்போதும் பக்கத்தில் இருப்பது நீயே (துர்கா)

சங்கு சக்கரம்
கத்தி கேடயம்
தனுசு அஸ்த்ரம்
மூவிலைச் சூலம்

உன் ரூபம் அழியாத பொன்னோவியம்
என் தாகம் தீர்த்து வைக்கும் தேனாம்ருதம்
உன் பாதம் எந்நாளும் சரணாகதி
நீயின்றி எனக்கேது மனநிம்மதி (துர்கா)



# 24. இதயத் துடிப்பு

இதயத் துடிப்பாய் இருக்கின்றாய்
இளமை வளமாய் சிரிக்கின்றாய்
உதயக் கதிராய் சுடர்கின்றாய்
ஒவ்வொர் அணுவிலும் படர்கின்றாய்

துக்கம் நீக்கும் துர்கா நீ
பக்கம் நிற்கும் துர்கா நீ
சொர்க்கம் அதுஎது துர்கா நீ
அக்கரை சேர்ப்பதும் துர்கா நீ

துர்கா... ஸ்ரீதுர்கா... நவதுர்கா.... ஜெயதுர்கா
(இதயத் துடிப்பாய்)

காரிருள் சூழும் வேளையிலே
கண்முன் நிலவாய்த் தெரிகின்றாய்
பாலை வனத்திலும் சோலையிதோ
பாரெனக் கூற வருகின்றாய்

துக்கம் நீக்கும் துர்கா நீ
பக்கம் நிற்கும் துர்கா நீ
சொர்க்கம் அது எது துர்கா நீ
அக்கரை சேர்ப்பதும் துர்கா நீ

துர்கா.... ஸ்ரீதுர்கா... நவதுர்கா.... ஜெயதுர்கா
(இதயத் துடிப்பாய்)

உன்னைப் பார்த்தபின் உலகத்தில்
என்ன பார்க்க இருக்கிறது
அன்னை என்றால் நீ அன்னை
அம்மா என்றால் சிலிர்க்கிறது.

துக்கம் நீக்கும் துர்கா நீ

பக்கம் நிற்கும் துர்கா நீ

சொர்க்கம் அது எது துர்கா நீ

அக்கரை சேர்ப்பதும் துர்கா நீ (இதயத் துடிப்பாய்)





# 25. மொழி கிடையாது

உன் அழகை வர்ணிக்க எம்மொழியும் உதவவில்லை
பெண்ணழகே பேரழகே துர்க்காம்பிஹே - உன்
கண்ணழகே போதுமம்மா துர்க்காம்பிஹே -
காண்பவர்கள் புண்ணியமே துர்க்காம்பிஹே

துர்க்காம்பிஹே ஜெய துர்க்காம்பிஹே
துர்க்காம்பிஹே ஜெய துர்க்காம்பிஹே (உன் அழகை)

ஜென்மம் எடுத்தது நான் தேவி உன்னைச் சரணடைய
தினந்தோறும் துதிக்கின்றேன் தீவினைகள் போய்முடிய
அன்னையவள் நீயிருக்க என்ன குறை ஏதும் இல்லை
கண்மணியே என்னுயிரே காப்பது நின் சூலம் அம்மா
காப்பது நின் சூலம் அம்மா

துர்ககாம்பிஹே ஜெய துர்ககாம்பிஹே
துர்க்காம்பிஹே ஜெய துர்க்காம்பிஹே (உன் அழகை)

சண்டி சாமுண்டி மங்களங்கள் தருபவளே
சாஸ்திரங்கள் போற்றுகின்ற மகிஷமார்த்தினியே
நவராத்ரி ஒளியினிலே நலம் தரும் நாயகியே
நம்பிக்கை வைப்பவர்க்கு அன்புக்கை கொடுப்பவளே
அன்புக்கை கொடுப்பவளே

துர்க்காம்பிஹே ஜெய துர்க்காம்பிஹே
துர்க்காம்பிஹே ஜெய துர்ககாம்பிஹே (உன் அழகை)



# 26. விழியின் வழி

சூலம் ஏந்திவந்தாய் - துர்காவே
ஆணவம் நீக்க வந்தாய்
உந்தன் விழியே........
எந்தன் வழியே........ (அம்மா) (சூலம்)

சும்ப நிசும்பர்களை - வாளாலே
துண்டாக்கிப் போட்டாயே
சண்டி சாமுண்டி - காலாலே
மகிஷனை மிதித்தாயே
சங்கு சக்ரம் ஆயுதங்கள் - எல்லாமே
வந்தெனைக் காப்பதற்கே (சூலம்)

ஆபத்துக் காலத்தில் - நீதானே
அகழியாய்ச் சூழ்ந்திடுவாய்
தீயவை நெருங்காமல் - கற்கோட்டை
மதிலாய் உயர்ந்திடுவாய்
போகும் பாதையெல்லாம் - முன்னாலுன்
பாதம் பதியுதம்மா (சூலம்)





# 27. வனதுர்க்கை

வனதுர்க்கா பரமேஸ்வரி
மனம் உவந்தே எமை ஆதரி - ஸ்ரீ (வனதுர்க்கா)

கமலாட்சி காஞ்சி காமாட்சி
மதுரையின் அழகே மீனாட்சி - ஸ்ரீ (வனதுர்க்கா)

லலிதாம்பிகே திரிசூலி
உலகாளும் தில்லை மாகாளி
அபிராமி சிவகாமி
மயிலையில் அருள்பொழி மகராணி (வனதுர்க்கா)

நவராத்ரி மகேஸ்வரி
நன்மையெல் லாம்தரும் மாதங்கி
திரு ஆச்சாள் புரம் வாழும்
சிங்க வாஹினி சாமுண்டி (வனதுர்க்கா)





# 28. ஸ்ரீ லட்சுமி துர்கை

சங்கோ............ முத்தோ.....பூங்கோத்தோ - உன்
செம்பவள இதழ் திறந்து சிந்தும் புன்சிரிப்பு
(சங்கோ முத்தோ)

கங்கை பொங்கும் கண்கள்வழி - நான்
சங்கமம் ஆனபின்னே ஏதுமொழி - அம்மா.......
(சங்கோ முத்தோ)

நங்கையின் கைகளில் ஆயுதங்கள் - அவை
நல்லதைக் காக்கும் கேடயங்கள்
சிங்கமும் எருமையும் ஆணவங்கள் - அவற்றை
தீர்ந்திடச் செய்தாய் சாகசங்கள் - அம்மா..........
(சங்கோ முத்தோ)

சாய்ந்த இடையும் மணிமார்பும. - என்றும்
சாந்தம் தவழும் திருமுகமும்
கூந்தல் உச்சிப் பூமுடிப்பும் - நின்
குங்குமப் பொட்டும் மனம்பறிக்கும் - அம்மா.........
(சங்கோ முத்தோ)

அழகின் முழுமை ஓவியமே
அன்பின் இனிய காவியமே
திருமகளே தேவி ஸ்ரீ துர்கா
சரணடைந் தேன்நின் தாமரைத்தாள் - அம்மா........
(சங்கோ முத்தோ)



# 29. கமலாம்பிகை துர்கா

பூர்ண சந்த்ர வதனம்
தாமரைக் கண்கள்
தேவேந்த்ரன் வணங்கும்........ திருவடிகள்
ஹ்ரீம் கார மந்திரமே மேனியாய் அமைந்தவளே
வேண்டுவார் வேண்டுவதை வழங்கிட வல்லவளே
கற்பக வனமே கமலாம்பிஹையே
(பூர்ண சந்த்ர வதனம்)

சுகமே நின்வடிவம் ஆத்மானு பவம் யோஹம்
மகரயாழ் இசைமீட்டும் உன் கானம் ராஜயோஹம்
ஐம்பூதம் அதற்குள்உன் அழகு ஊடுருவும்
அண்டசரா சரங்கள் சந்தோஷத்தில் மூழ்கும்
முருகனின் தாயே சண்டிகே மாயே
(பூர்ண சந்த்ர வதனம்)

சூலம் தரித்தவளே தீவினை தவிர்ப்பவளே
மகிஷனை மிதித்தவளே மகிழ்ச்சியைக் கொடுப்பவளே
காலத்தைக் கணிப்பவளே காலம் கடந்தவளே
கவலையை நீக்கி எங்கள் கண்ணீர் துடைப்பவளே
நவசக்தி நீயே மங்கள துர்கே
(பூர்ண சந்த்ர வதனம்)



# 30. மோஹனப் பூங்குழலி

எத்தனையோ பிழைகள் எண்ணி முடியுமோ
அத்தனையும் பொறுத்து ஆட்கொண்டாள்
முத்துச் சிரிப்பழகி மோஹனப் பூங்குழலி
சித்தம் வைத்தாள் என்னைத் தேற்றிவிட்டாள்
கடைத் தேற்றி விட்டாள்
துர்காம்பா........ துர்காம்பா........
(எத்தனையோ)

பக்தரைக் காப்பதற்கு பலப்பல ஆயுதங்கள்
எப்போதும் தாய்கையில் ஏந்துகிறாள்
கத்தி கேடயம் வில்லம்பு திரிசூலம்
காட்டுகிறாள் பகை ஓட்டுகிறாள்
துர்காம்பா........ துர்காம்பா........
(எத்தனையோ)

அடங்காத மனத்தை அவள் அடங்கச் செய்தாள்
ஆர்ப்பாட்டம் அத்தனையும் ஒடுங்கச் செய்தாள்
நெடுங்காலம் தொடர்ந்த வினை நீங்கச் செய்தாள்
நிம்மதி அவள் தோற்றம் நினைக்கச் செய்தாள்
துர்காம்பா........ துர்காம்பா........
(எத்தனையோ)



# 31. ஞானம்பிகை

நம்பிக்கை எல்லாம் - அந்த
ஞானாம்பிகை - அவள்
நளினக்கை வளை ஓசை
புதிய வாழ்க்கை (நம்பிக்கை)

சென்றதெல்லாம் நினைந்து பயன்என்னவோ - இனி
சிரித்து மகிழ்ந்திருக்க வழி என்னவோ
கன்றுக்குத் தாய் போல் மடிசுரந்தாள் - ஒரு
கவலையில்லா நிலைக்கு அழைத்துச் சென்றாள்.
(நம்பிக்கை)

துக்கத்தை நீக்கவந்தேன் துர்கா என்றாள் - உன்
தூக்கத்தை விடுக என்றாள் எழுக என்றாள்
பக்கத்தில் வைத்து எனை பார்த்துக்கொண்டாள் - அவள்
பாதம் பணிந்தவுடன் சேர்த்துக் கொண்டாள். (நம்பிக்கை)

குற்றம் யாவையும் எற்றித் தள்ளினாள்
குனிந்த தலையினை நிமிரச் செய்தாள்
எட்டுத் திக்கிலும் வெற்றியே என்றாள்
எனக்கொரு குறையிலை எதற்கும் தடையில்லை.
(நம்பிக்கை)





# 32. நிலையான சுகம்

துர்கா....... சாமுண்டி.............

நிலையான சுகம் எது - அது
நீதான் என உணர்ந்து
கலையாத காட்சியினைக் கண்டேன் - உன்
காலை என் கண்ணில் ஒற்றிக்கொண்டேன்

அலைபோல மன ஆட்டம்
கடலுக்குள் வந்த பின்னே
சிலை உருவில் நீ நிரிக்கப் பார்த்தேன் - உன்
திருவடியில் என்தலையைச் சேர்த்தேன்

(நிலையான)

சம்சார சாகரத்தில் என் சாரம் எலாம் இழந்து
கண் சோர்ந்து மெய் சோர்ந்து போனேன்
விண்சாரம் விட்டிறங்கி மின்சாரம் போல் வந்து
விளையாடும் உனைக்காண லானேன்

(நிலையான)

உன் சித்தம் என் பாக்யம் என் கர்மம் எலாம் தொலைந்து
நீ தானே கைப்பிடித்து நடத்துகிறாய்
இனி என்ன என்வேலை உனைப்பாடும் பணிதந்து
அரியணையில் சரிசமமாய் அமர்த்துகிறாய்.

(நிலையான)



# 33. கனியும் காலம்

இனியும் கவலை எங்களுக் கில்லை நீ வந்த வேளை
கனியும் காலம் வந்தது தாயே துர்கா உன்னாலே
(இனியும்)

சலங்கை அணிந்த பாதம் மெல்ல நடந்து வந்தது
நவராத்ரி ஒளியில் உந்தன் நளினம் தெரிந்தது
வருக வருக என்று வாசல் வழியை நோக்கினோம்
கொலு அமர்ந்த காட்சி கண்டு போற்றி வாழ்த்தினோம்
(இனியும்)

வளையல் அணிந்த கையில் கூரிய வாளை எடுத்தாய்
பகையை அகற்ற புன்னகை பூத்த பார்வையை விடுத்தாய்
சிம்மா சனம் தன்னில் ஏறி சூலத்தைப் பிடித்தாய்
அம்மா என்று அருகில் வந்ததும் அன்பாலே அணைத்தாய்
(இனியும்)





# 34. சிரிக்கும் அழகென்ன?

பனி நிரம்பிய குவளை மலர்கள் உனது அருள்விழிகள்
மது விரும்பிய வண்டின் சிறகோ திரண்ட பேரிமைகள்
கணைகள் தொடுக்கும் வளைந்த தனுசோ கரும்புருவங்கள்
கன்னம் கோடி மின்னல் மின்னும் தங்கத் தாமரைகள்

மகிஷன் என்னும் ஆணவத்தை மிதிக்கும் ஒயிலென்ன
சிங்க வாஹனம் ஏறி அமர்ந்து சிரிக்கும் அழகென்ன
(பனிநிரம்பிய)

நிமிர்ந்த வீணை நாசிமீட்ட கேட்கும் இரு செவிகள்
அழகுத் தோளில் அமர்ந்திருக்கும் பச்சைப் பசுங்கிளிகள்
பவள இதழில் விரியும் புன்னகை தெறித்த முத்துக்கள்
சுருளும் கூந்தல் படரும் நெற்றி நிலவில் மேகங்கள்
மகிஷன் என்னும் ஆணவத்தை மிதிக்கும் ஒயிலென்ன
சிங்க வாஹனம் ஏறி அமர்ந்து சிரிக்கும் அழகென்ன
(பனிநிரம்பிய)

திலகம் இட்ட வதனம் பார்க்க செய்த தவம் என்ன
சிலம்பொலிக்கும் பாதம் பார்க்க செய்த பேறென்ன
துக்கமெல்லாம் போக்க வந்த துர்காதேவி அம்மா
சூலம் காட்டும் கோலம் போதும் எதிலும் வெற்றி அம்மா

மகிஷன் என்னும் ஆணவத்தை மிதிக்கும் ஒயிலென்ன
சிங்க வாஹனம் ஏறி அமர்ந்து சிரிக்கும் அழகென்ன
(பனிநிரம்பிய)



# 35. கைகொடு தாயே

கை கொடுத்துக் காப்பாற்றுவாய் துர்காம்பிகா - இனி
காலமெல்லாம் துணை வருவாய் துர்காம்பிகா
நெய்விளக்கை ஏற்றி வைத்தோம் துர்காம்பிகா - மன
நிம்மதியை நீ தருவாய் துர்காம்பிகா (கைகொடுத்து)

நவராத்ரி நேரத்திலே துர்காம்பிகா - அந்த
முதல் மூன்று நாட்களிலே துர்காம்பிகா
சிவசக்தி அவதாரமாய் துர்காம்பிகா - நீ
தீமை எலாம் நீக்கிடுவாய் துர்காம்பிகா (கைகொடுத்து)

முழுவதுமாய்ச் சரணடைந்தால் துர்காம்பிகா - நீ
விதியையும் மாற்றிடுவாய் துர்காம்பிகா
வருவது வரட்டுமடி துர்காம்பிகா - உன்
வாசலிலே ஏதுபயம் துர்காம்பிகா (கைகொடுத்து)





## 36. ஒளிமிகு சுடரினில்

ஒன்பது இரவுகள் ஒளிமிகு சுடரினில்
அம்பிகை தோன்றினள் அருள்தரவே
சங்கதி துர்க்கையை லஷ்மியை வாணியை
சரணடை வோம் வந்து சேருங்கள்
(ஒன்பது இரவுகள்)

உண்மை அறிவு ஆனந்த மயமாய்
அன்னை வந்தனள் வாழ்த்துகவே
நவசக்தி நாயகி சாமுண் டேஸ்வரி
நளின மலர்ப்பதம் போற்றுகவே
(ஒன்பது இரவுகள்)

ஜெய ஜெய காளி மஹாலஷ்மி சரஸ்வதி
தீவினை யாவும் தீர்ந்திடுக
புதியதோர் எழுச்சியும் மலர்ச்சியும் வளர்ச்சியும்
வளமையும் செழுமையும் சேர்ந்திடுக
(ஒன்பது இரவுகள்)

திருவும் கல்வியும் திறமையும் வீரமும்
தேவியர் மூவரும் அளித்திடுக
நவராத்ரி பூஜையால் நாடும் வீடும்
நலங்க ளெலாம் பெற்றுக் களித்திடுக!
(ஒன்பது இரவுகள்)



# 37. தக தாம் திதி ததிதை

தும் எனும் மந்திரம்
துர்கா நின் நாட்டியம்
என் நெஞ்சக் கோயிலில் நிகழ்கிறது
அன்னையின் கர்ப்பத்தில்
ஆரம்பம் ஆகிப்பின்
ஆயுள் காலம் வரை நடக்கிறது

தகதாம் திதி ததிதை - தக
தகதாம் திதி திதிதை

உனதே இந்த யாக்கை - நீ
உருவாக்கிய வாழ்க்கை
எனதே எனும் அகந்தை - அது
அகன்றால் உன் வருகை

தகதாம் திதி ததிதை - தக
தகதாம் திதி திதிதை (தும் எனும்)

பட்டப்பகல் வெளிச்சத்தினில் தட்டுத் தடுமாறி
திக்குத்திசை தெரியாமலே முட்டிக்கொளும் மாயை
சுற்றம் அது சுற்றும் பின் எட்டித்தள்ளும் சூழ்ச்சி
விட்டுத் தொலை என்றாய் என் வினை நீக்கிய தாயே
தகதாம் திதி ததிதை - தக - தகதாம் திதி திதிதை

ஜெகமே உன் லீலை - பல - உயிராடிடும் மேடை
நிழலே அதன் தோற்றம் - நீ - நிஜமானதும் மாற்றம்
தகதாம் திதி ததிதை - தக - தகதாம் திதி திதிதை

(தும் எனும்)

எது தான் என அறியாததோர் எருமைத் தனம் மாற
மகிஷாசுரன் தலைமேல் ஒரு தீருப்பாதம் வைத்தாய்
அருளாலொரு ஒளி காட்டிய திருமாமணி துர்கா
அருகே வரவழிகாட்டியே விழியாலெனை தைத்தாய்
தகதாம் திதி ததிதை - தக - தகதாம் திதி திதிதை

நவராத்ரி முதல் நாயகி - சிவபார்வதி துர்கா
சுகபோகமும் கதி மோட்சமும் தருவாய் ஜெயதுர்கா
தகதாம் திதி ததிதை - தக - தகதாம் திதி திதிதை
(தும் எனும்)





# 38. தேவி வந்தாள்

சங்கு முழங்கிற்று சக்கரம் சுற்றிற்று
சிங்கம் உறுமிற்று திரிசூலம் தோன்றிற்று
தேவி வந்தாள் - நம்மைத் தேடிவந்தாள் - துர்க்கா
தேவி வந்தாள் - நலம் பாடி வந்தாள்
(சங்கு முழங்கிற்று)

திந்திமித்தோம் நாதம் திக்கெட்டும் எட்டிற்று
செந்தளிர்ப் பொற்பாதம் நர்த்தனம் ஆடிற்று
குங்குமத் திருமார்பில் மணிமாலை குலுங்கிற்று
சங்கரி கடைக்கண்கள் மங்களம் வழங்கிற்று
சக்தி வந்தாள் - நவ - சக்தி வந்தாள் - துர்க்கை
சுற்றி வந்தாள் - நம்மைப் பற்றி நின்றாள்!
(சங்கு முழங்கிற்று)

ரத்தச் சிவப்பினில் பட்டாடை உடுத்தினள்
முட்டவரும் எருமையை எட்டி உதைத்தனள்
முத்துத் தெறித்திடப் புன்னகை பூத்தனள்
பத்தெட்டுக் கைகளால் பாவத்தைப் போக்கினள்
பார்வதித்தாய் - இங்கு - நேர் உதித்தாள் - துர்க்கை
பார்வையினால் - நம் - நோய் தவிர்த்தாள்
(சங்கு முழங்கிற்று)

ஓங்காரி பூரணி நாராயணி கௌரி
ஒன்பது இரவுகள் கொலுவிருந்தாள்
சாமுண்டீஸ்வரி சௌந்தர்ய தேவதை
வந்தெங்கள் இல்லத்தில் வீற்றிருந்தாள்
வாழ்வு தந்தாள் - எங்கள் வாசல் வந்தாள் - மஹா
காளி வந்தாள் - கன்னி - கௌரி வந்தாள்
(சங்கு முழங்கிற்று)



# 39. பாவம் தீரும்

ஆயிரம் யுகங்கள் தொடரும் பாவம்
அரை நொடியில் தீரும் - நம்
தாய் துர்கை கோபக் கனலில்
சாபம் யாவும் வேகும் - அவள்
எருமைத் தனத்தை மிதிப்பாள்
உருமும் சினத்தை உதைப்பாள்
மகிஷ மார்த்தினி அவளே
சிங்க வாஹினி அவளே
அமைதி தவழ அவளின் வருகை
அழகின் பவனி அறிக
மகிஷமார்த்தினி வருக - அம்மா
மகிஷமார்த்தினி வருக (ஆயிரம்)

பாணம் தனுசு கத்தி கேடயம்
சங்கு சக்கரம் ஏந்தி
நேசம் வைப்பவர் நெஞ்சில் வளரும்
தேவி சூர்ய காந்தி
சூலம் எடுத்து சுழற்றும் போது
தீய சக்திகள் ஓடும்
நாளும் நாளும் மேலும் மேலும்
நன்மைகள் யாவும் கூடும் - ஒரு
தேவ வாழ்வு நேரும்
மகிஷமார்த்தினி வருக - அம்மா
மகிஷ மார்த்தினி வருக (ஆயிரம்)

ஒன்பது இரவும் அம்பிகை கோலம்
ஒளி மாலைகள் தொடுப்போம்
சண்டி சாமுண்டி தேவி மஹாத்மியம்
தமிழில் கவிதை இசைப்போம்
துர்கா எழுக வருக என்றே
தொழுது பாடி களிப்போம்
கல்லும் கனியும் அவளின் பார்வை
கலியின் கொடுமை தெடுப்போம் - ஒரு
புதிய யுகத்தை படைப்போம்

மகிஷ மர்த்தினி வருக - அம்மா
மகிழ்ச்சி நிம்மதி தருக - அம்மா
மகிஷ மர்த்தினி வருக
மகிழ்ச்சி நிம்மதி தருக
மகிழ்ச்சி நிம்மதி தருக

சர்வ மங்கல மாங்கல்யே சிவே சர்வாத்த சாதிகே
சரண்யே த்ரயம்பகே
கௌரி நாராயணி நமோஸ்துதே





# 40. சூத்திரதாரிணி

ப்ரபஞ்ச நாடக சூத்திர தாரிணி
போசாமல் பேசுகின்ற விசித்திர மோஹினி
ஞானியர் நெஞ்சத்தில் தந்தா விளக்கு நீ
நவராத்ரி நாயகி துர்கா தேவி நீ (ப்ரபஞ்ச)

காப்பது உந்தனின் கடைக்கண் பார்வையே
பார்ப்பது யாவும்நின் மாயா லீலையே
சேர்ப்பதும் பிரிப்பதும் நின்விளை யாடலே
ஜன்மம் எடுத்தபயன் உன்னை நாடலே (ப்ரபஞ்ச)

வலக்கால் பொல்லா அரக்கனை மிதித்தது
இடக்கால் தொட்டு கும்பிடக் கிடைத்தது
சூலம் எந்தன் தீவினை துரத்துது
பாவம் பழியெல்லாம் பஞ்சாய்ப் பறக்குது (ப்ரபஞ்ச)

நின் கருணையின் அதிசயம் அதுதான் - இனி
எதிலும் எனக்கு ஜெயம்தான்
அம்மா உந்தன்
அன்பு வெள்ளம்
நீந்தி நீந்தி களிக்கிறேன்
அல்லும் பகலும்
உந்தன் புகழை
பாடிப் பாடித் துதிக்கிறேன்

துர்கா..... ஜெய துர்கா.... துர்கா.... கனகதுர்கா



# 41. முப்போதும் பூஜை

ஒன்பது நாட்களில் முதல் மூன்று நாட்கள் மட்டும்
உன்னை நினைக்கின்றோம் போதுமா
ஓராயிரம் கோடி பிறவிகளில். தொடரும்
தீவினைகள் எல்லாமே தீருமா
    தாயே - துர்கா தேவி
(ஒன்பது)

கருமேகம் சூழ்ந்த பெரும் இருள்நேரம் உனை நினைத்து
திருவிளக்கு ஏற்றிவைத்து அழைக்கின்றோம்
வழிமேல் விழிவைத்து வருகையை எதிர்பார்த்து
புதுப்புது பாடல்களை இசைக்கின்றோம்
    தாயே - துர்கா தேவி
(ஒன்பது)

எப்போதும் நின் கருணை தப்பாதுஎன்று கண்டு
முப்போதும் உனை நினைந்து பூஜை செய்தோம்
இப்போதும் நிச்சயமாய் இங்கு வந்து கொலுவிருக்கும்
அற்புதத்தை என்னவென்போம் கொடுத்து வைத்தோம்
    தாயே - துர்காதேவி
(ஒன்பது)



# 42. அக்கினி சக்தி

அக்கினி சக்தி துர்காம் பிகையாள்
அக்கரை சேர்க்கட்டும்
பற்றிய பழிகள் பாவங்கள் யாவும்
பொடிப் பொடி யாகட்டும்

இடர் என்ற பேச்சுக்கு இடம் இல்லை - இனி
துயர் என்ற சொல்லுக்கு பொருள் இல்லை

துர்காதேவி பக்கம் இருக்க
துக்கம் நமக்கில்லை

சுற்றும் அகழியாய் துரத்திடுவாள் பகை
அவளுக்கு நிகரில்லை (அக்கினி சக்தி)

துர்க்கமன் என்னும் அரக்கனை அழிக்க
சூலத்தை அவள் விடுத்தாள்
விக்கினம் போக்க வினைகளை நீக்க
வில்லினில் கணை தொடுத்தாள்

சண்ட முண்டர்களைச் சாய்த்து விட்டாள் - அந்த
மகிஷா சுரனை மாய்த்து விட்டாள்

அன்புத் தாயவள் அருகில் இரக்க
அச்சம் நமக்கில்லை
நம்பிக்கை வைத்தே நாடி இருக்க
வம்புகள் வருவதில்லை (அக்கினி சக்தி)

நவராத்ரி நாட்கள் தீபங்கள் ஏற்றி
அவளை வணங்கிடுவோம்
நவ துர்கையாக ஒன்பது உருவில்
கண்டு மகிழ்ந்திடுவோம்

நலங்கள் யாவும் வேண்டிடுவோம் - பல
வளங்கள் பெறவே வழிபடுவோம்

ஜெய துர்கா தேவி துணையாய் இருக்க
தீங்குகள் ஏதும் இல்லை
தேடியதெல்லாம் கூடும் என்பதால்
ஏங்குதல் என்பதில்லை (அக்கினி சக்தி)





# 43. நவராத்ரி ஜோதியிலே

நவராத்ரி ஜோதியிலே நவதுர்கை தோன்றுகின்றாள்
சிவசக்தி நமைக்காக்க திருவிளக்கில் தோன்றுகிறாள்
புரட்டாசித் திங்களிலே புத்துணர்ச்சி ஊட்டுகிறாள்
போற்றுபவர் வீட்டினிலே ஏற்றங்கள் காட்டுகிறாள்
(நவராத்ரி)

அஞ்ஞான இருள்நீக்க அம்பிகை வாளெடுத்தாள்
அரக்கரை வேரறுக்க அம்ஸங்கள் மூன்றானாள்
மாகாளி மகாலக்ஷ்மி சரஸ்வதி வடிவெடுத்தாள்
மதுகைடப வதம்செய்தாள் மகிஷன்மேல் கால் வைத்தாள்
(நவராத்ரி)

சும்பன் நிசும்பன்எனும் துஷ்டரை அடக்கவந்தாள்
துக்கத்தை நீக்குவதால் துர்கைஎனப் பேர்கொண்டாள்
சண்டி சாமுண்டி ஆதிபரா சக்தி இவள்
தர்மத்தைக் காப்பதற்கு அவதாரம் செய்கின்றாள்
(நவராத்ரி)

மஞ்சள் அலரியிலே மலராடை போர்த்திடுவாள்
மங்கள வாரத்தில் ராகுபூஜை ஏற்றிடுவாள்
சிங்கத்தில் வலம்வருவாள் குங்குமம் கொடுத்திடுவாள்
திருவிளக்கில் சிரித்திடுவாள் தெய்வீகம் படைத்திடுவாள்
(நவராத்ரி)



# 44. நவராத்ரி பூஜையிலே

நவராத்ரி பூஜையிலே நவதுர்கை அவதாரம்
சிலம்போசை கேட்கிறது வரம்பெறவே வாருங்கள்
புரட்டாசித் திங்களிலே விரட்டுகிறாள் அரக்கர்களை
பொன்னான நேரமிது பூ அள்ளித் தூவுங்கள்

சங்கரி பைரவி சாமுண்டீஸ்வரி
ஜெய ஜெய பவானி ஜெய ஜெய துர்கா (நவராத்ரி)

வாசலிலே கோலங்கள் மாவிலைகள் தோரணங்கள்
வீடெல்லாம் விளக்கேற்றி பாடல்கள் பாடுங்கள்
தாயவளின் மனம்குளிர்ந்தால் தரையெல்லாம்
பொன்விளையும்
வீரம் விவேகமொடு செல்வங்கள் வேண்டுங்கள்.
(நவராத்ரி)

இமயத்தில் அவள்பிறந்தாள் குமரியிலே வளர்ந்திருந்தாள்
மதுரையிலே மணம் முடித்தாள் தில்லையிலே நடப்புரிந்தாள்
காஞ்சியிலே தவம்இருந்தாள் காசியிலே நலம் அருள்வாய்
காலமெல்லாம் நம்முடனே காளியவள் தொடர்ந்திடுவாள்



# 45. அவதாரம்

லக்ஷ்மியின் அவதாரம் - இனி
துஷ்டர்க்ளள நிர்மூலம்
பத்தெட்டுக் கைகளில்
படைக்கலம் ஏந்தினாள்
சித்திரப் பூம்பாவை - நல்ல
வெற்றிச் சுபவேளை! (லக்ஷ்மியின்)

சிவனின் திரிசூலம்
திருமாலின் சக்ரம்
அக்னி சக்தி ஆயுதம்
வாயு தநுர் பாணம்
வருணனின் திரச் சங்கம்
இந்திரன் வஜ்ராயுதம்
யமதர்மன் கொடுந்தண்டம்
ஜலதேவன் பாசம்

காலன் கத்திகேடயம்
நான்முகன் கமண்டலம்
கடலரசன் கமலம்
முறையாய் வழங்கினரே

ஜெபித்திட அக்ஷமாலை
ப்ரஜாபதி அன்பளிப்பு
மதுக்கிண்ணம் குபேரன்
உவந்தளித்த பரிசு (லக்ஷமியின்)

நாகராஜன் வந்தே
மாணிக்கம் தந்தான்
ஆபரணம் பரிசு
விஸ்வகர்மாஅளித்தான்

கதாயுதம் தன்னை
துவஷ்டா மகிழ்ந்துதர
சிம்மா சனம் கொணர்ந்தான்
இமவான் எனும் சீமான்!

காணிக்கை ஏற்றனளே
கவசம் போர்த்தினளே
நாணில்வில் ஏற்றினளே
சூரனை நோக்கினளே

மணி ஒலி எழுப்பினளே
மகிஷனை உலுப்பினளே
ஜெய ஜெய சாமுண்டி
தீமையைப் போக்கினளே (லக்ஷ்மியின்)

ஜெய ஜெய ஜெய ஜெய
ஜெய ஜெய ஜெய ஜெய





# 46. ஆயுததாரிணி

பரமேஸ்வரன் தந்த சூலாயுதம்
திருமாலவன் தந்த திருச்சக்கரம்
வருணனின் சங்குடன் சக்தி அயுதம்
வாயுவின் தனுர்பாணம், வஜ்ராயுதம்
தேர்களின் சக்தியெலாம் அவள் கைவசம்
சிவசக்தி எழுந்தனள் மகிஷன்வதம்

ஐராவதம் மாறி மணியானது
யமர்தர்மனின் தண்டம் சூழல்கின்றது
ஜலதேவனின்பாசம் விரைகின்றது
ஜபமாலை அவள் கையில் உருள்கின்றது

தேர்களின் சக்தியெலாம் திரள்கின்றது
சிவசக்தி வடிவாக வருகின்றது

கத்தியும் கேடயமும் காலன்தந்தான்
கமண்டலம் ப்ரம்மன் அவள் கையில்தந்தான்
விஸ்வகாமா பரசு கவசம் தந்தான்
துவஷ்டாவின் கதை ஏந்தி துர்கை வந்தாள்

தேவர்களின் சக்தி எலாம் ஒளிவண்ணமே
சிவசக்தி வருகிறாள் ஜெயம் திண்ணமே

வாடாத மலர்சூடும் மாகாளியும்
வடிவழகி திருச்செல்வி ஸ்ரீ தேவியும்
வீணையை மீட்டிடும் கலைவாணியும்
சேர்ந்ததோர் சக்தியே சிவசக்தியே

சிங்கத்தில் ஏறிவரும் சிவசக்தியே
ஜெய ஜெய ஜெய ஜெய பராசக்தியே
நவராத்ரி நாயகியே நவசக்தியே
ஜெய ஜெய ஜெய ஜெய ஸ்ரீ துர்கையே



# 47. ஜெய ஜெய சாமுண்டி

ஜெய ஜெய சண்டி சாமுண்டி
மகிஷ மர்த்தினி ஜெய ஜெய
நவராத் திரியின் நாயகி
அமிர்த வர்ஷினி ஜெய ஜெய

தேவர்கள் பேரொளி திருமகள்
மகிஷனை வதைக்க வந்தனள்
சிங்க வாஹனம் ஏறினள்
எங்கே அவனென சீறினள்

சிவனின் வெண்மை திருமுகம்
யமனின் கருமை விரிகுழல்
அருணன் முருகன் செவ்விதழ்
அக்கினிச் சுடர்கள் விழிகளே

செவிகள் வாயுவின் சக்தியே
குபேரன் பொன்நிறம் நாசியே
மாலின் நீலம் தோள்களே
மஹாலக்ஷ்மி துர்கா வாழ்கவே

சந்திர காந்தி மார்பகம்
இந்திர தேஜஸ் இடைவளம்
புவியின் ஒளிதான் பின்புறம்
அழகெலாம் இவளிடம் சங்கமம்

வருணனின் வண்ணம் தொடைஎழில்
ப்ரம்மனின் கிரணங்கள் பதமலர்
பதினெட்டுக் கரங்களில் ஆயுதம்
பகைவர்கள் சிதறிய போர்க்களம் (ஜெய ஜெய)



# 48. அமிர்தவர்ஷிணி

அக்ஷமாலை தாமரை அம்பு கத்தி வஜ்ஜிரம்
கதை சூலம் கோடரி சக்கரம் வலப்புறம்
சங்கு பாசம் மணியுடன் சக்தி தண்டம் கேடயம்
வில் மதுப்பாத்திரம் கமண்டலம் இடப்புறம்

பதினெட்டுக் கரங்களிலும் பதினெட்டு ஆயுதம்
உறுமிடும் சிங்கமோ உமா உந்தன் வாகனம்

சக்தியும் வீரம்
நர்த்தனம் ஆடிடும்
சண்டி
சாமுண்டி - எங்கள்

துர்க்கதி நீக்கிடு - துயரங்கள் போக்கிடு
துர்காவே மகிஷ மர்த்தினி
சுகம் தரும் அமிர்த வர்ஷினி (அக்ஷமாலை)

சிவபிரான் வெண்மையும் ப்ரம்மனின் செம்மையும்
திருமாலின் நீலமும் இந்திரன் பலவண்ணமும்
குலவியே கலந்ததோர் குங்குமம் ஆனது
பலநிறம் பல ஒளி அழகிய ஜோதி நீ

ஸத்துடன் ஸித்துமாய் ஆனந்தம் சங்கமம்
பக்தர்கள் நெஞ்சிலுன் பாதங்கள் ஸ்தாபிதம்
சக்தியும் தர்மமும்
நர்த்தனம் ஆடிடும்
சண்டி
சாமுண்டி - எங்கள்

துர்க்கதி நீக்கிடு - துயரங்கள் போக்கிடு
துர்காவே மகிஷமர்த்தினி
சுகம் தரும் அமிர்த வர்ஷிணி (அக்ஷமாலை)

நவரசம் உன்னிடம் நாடகம் பயிலுது
நாயகிஉன் முகத்தினில் ஞானப்பால் வழியுது
விழிகளில் கருணையாம் வெள்ளம் பெருகுது
விடிந்தது பொழுதென இதழ்களும் மலருது

வெற்றி எட்டுத் திக்கும் எட்ட கொட்டு முரசு கொட்டுது
சத்தியத்தின் தரிசனம் எதிரிலே தெரியுது

சக்தியும் சாந்தமும்
நர்த்தனம் ஆடிடும்
சண்டி
சாமுண்டி - எங்கள்
துர்க்கதி நீக்கிடு
துயரங்கள் போக்கிடு
துர்காவே மகிஷமர்த்தினி
சுகம் தரும் அமிர்தவர்ஷிணி





# 49. முல்லைமலர்கள் விரிப்பு

பக்தரிடம் பரிவுகொள்ளும் சக்தி சாமுண்டி
கற்பரசி கௌரி சண்டி ப்ரும்ம சாரிணி
துக்கமெலாம் போக்கவந்த சூலி நீலி
வெற்றியினை தருபவளே துர்கா தேவி

சும்ப நிசும்பர் தொலைந்தார்
சண்ட முண்டர்க்ள அழிந்தார்
மது கைடபர் ஒழிந்தார்
மகிஷா சுரன் மடிந்தான் - இனி

எந்தப் பகை வந்து என்னதான் செய்திடும்
சங்கரி பார்வைகள் போதும் -அவள்
சிங்க வாகனம் சீறும் (பக்தரிடம்)

சங்கு சக்ரம் திருசூலம் வஜ்ராயுதம்
கசக்தி மணி தனுர் பாணம் தண்டம் பாசம்
அக்ஷமாலை கத்தி கேடயம் கதை கமண்டலம்
பரசு கமலம் தாமரை உலக்கையோடு மதுவின் கிண்ணம்

ஆயுதம் ஏந்தியகைகள்
ஆணவம் போக்கும். கால்கள்
மூவரின் வண்ணங்கள் மேனி - அவள்
காளி திருமகள் வாணி

சச்சி தானந்த வெள்ளம் தவழ்ந்திடும்
முத்து மோகன சிரிப்பு - வெண்
முல்லை மலர்களின் விரிப்பு (பக்தரிடம்)

மாயை எனும் காரிருளை ஒட்டிடுவோம்
தாயவளின் மகிமைசொல்லி தீபம் ஏற்றுவோம்
ஒன்பது நாளும் மங்கையர் குலத்தை உபசரித்திடுவோம்
அம்பிகை அவளை கொலுவில் வைத்து ஆடிப்பாடுவோம்
சகஸ்ர நாமம் சொல்வோம்
சண்டிஹோமம் செய்வோம்
தேவி மகாத்மியம் படிப்போம்
புது - சிவப்புப் பட்டுடை உடுப்போம்
நவராத்திரி திரு நாயகி
வருவாள் நலம் தருவாள் - பொன் - மழை யாகவே பொழிவாள்
(பக்தரிடம்)






# 50. மகாலட்சுமி வருகிறாள்

ஜபமாலை கோடரி கதை, அம்பு தாமரை கமண்டலம் வஜ்ராயுதம்
கத்தி கேடயம் சூலம் சங்கு சக்ரபாசம் வில்லுடன் தண்டாயுதம்
மதுக் கலயம் சக்தி மணி ஆயுதம் பலவும் பதினெட்டு கைகள் ஏந்தி
மகிஷன்எனும் அரக்கனை அழித்தவள் வருகிறாள்
மஹாலக்ஷ்மி வருக வருக!

பவளம்போல் மேனி எழில் பாரிஜாதம் மணக்கும்
பாங்கினைக் காண்கவென்றே
பத்மபாதம் நோகத் தத்துநடை போடுவாள்
பகவதியின் தோழி இவளே
நவராத்ரி நாட்களில் நடுநாயகம் கொள்ளும் நங்கையைப்
போற்றுவோமே
நம் இல்லம் நலங்காண நாடெல்லாம் வளம்காண
நாயகியை வாழ்த்துவோமே!





## 51. அருள்வாயே தாயே!

ஆரியை காமக்கோட்டி அம்பிகை பராசக்தி
நாயகி அமலை, தேவி சாம்பவி தருமச்செல்வி
வேதத்தின் முதல்வி, ஐயை, மலைமகள், நீலி, கன்னி
பார்வதி கௌரிஎன்றே பலப்பல நாமம்பெற்றாய்
தாட்சா யணியே அம்மா சங்கரி பவானி, சூலி
யோகேஸ் வரியே உன்றன் தாமரைப் பாதம் போற்றி!

வேலவன் அன்னை, வீரி, மனோன்மணி, விமலை, ஐயன்
பாகத்தில் பங்கு பெற்றாய் ஏழையைக் காத்து நிற்பாய!

உன்னை நான் எண்ணும் போதே உதவிக்கு வருவாய் அம்மா
உமையெனும் அன்பின் ஊற்றே உன்முகத்தோற்றம் கண்டால்
என்னைநான் தேற்றிக்கொள்வேன் எழுந்துவா விரைவில் தாயே
இமவானின் மகளே துர்க்கா இளங்காளி மாரிசூரி
திங்களும் கதிரும் தீயும் கண்களாய்க் காந்தி வீசும்
திருமேனி பச்சைவண்ணம் சிவந்தவாய் பவளமன்றோ!

சுந்தரி ஸ்கந்தமாதா துணைக்கரம் நீட்டுவாயே
சூடா மணியேகுமாரி சாமுண்டி அருள்வாய் தாயே!



# 52. தேவர்களின் திரட்சி

சங்கரன் வெள்ளொளி திருமுகம் - அதில்
சாந்திப் புன்னகை தவழ்ந்திடும்
மங்களம் நல்கிடும் அவள் புஜம் - திரு
மாலவன் ஸ்யாமளம் ததும்பிடும்

காலனின் தேஜஸே கார்குழல்
பால் நிலா ஒளியதே மார்பகம்
வருணனின் காந்தியே தொடை எழில்
ப்ரம்மனின் செம்மையே பாதங்கள்

சூரிய ஜோதியே கால்விரல்
வசுக்களின் சக்தியே கைவிரல்
குபேரன் சுடரதே நாசியாம்
அக்கினி விழிகளின் உக்கிரம்

வாயுவின் அம்சமே திருச்செவி
மல்லிகைப் பற்களோ ப்ரஜாபதி
சந்தியா, நங்கையின் புருவங்கள்
அருணனும் முருகனும் செவ்விதழ்

புதியதோர் ஒளியினில் பூத்தனள்
தர்மத்தை ஊர்தியாய் சேர்த்தனள்
அமரரின் லட்சியம் காக்கவே
அன்னையே லக்ஷ்மியாய் வந்தனள்

ஆயுதம் பதினெட்டு ஏந்தினள்
சிங்கத்தின் மேலே ஏறினள்
சீறிச் சினந்து பாய்ந்தனள்

ஜெய ஜெய ஜெய தேவி ஜெய ஜெய ஜெய சூலி
ஜெய ஜெய ஜெய சண்டி ஜெய ஜெய ஜெய சாமுண்டி



# 53. ஸ்ரீ மஹாலக்ஷ்மி துர்கா

அஷ்டா தசபுஜ மஹாலக்ஷ்மி
அம்மா ஜெயகௌரி
துஷ்டரை அடக்கிடும் துர்காதேவி
ஆதி பராசக்தி - தாயே

(அஷ்டாதசபுஜ)

அஷ்டமி நவமி சந்தியில் உதித்தாய்
அமரரைக் காக்க வந்தாய்
எட்டுத் திக்கிலும் கர்ஜனை புரிந்தாய்
வெற்றியை விளைவித்தாய் - தாயே

(அஷ்டாதசபுஜ)

நான்முகன் வேண்ட மாயவன் முன்னே
காளியாய்த் தோன்றி நின்றாய்
தீய சும்ப நிசும்பர் தொலைய
சரஸ்வதி அம்சம் என்றாய்

இடையே வந்த மகிஷா சூரனை
தலையில் மிதித்துக் கொன்றாய்
நவராத் திரியில் நடுநின்ற நாயகி
நமஸ் காரம் அம்மா - தாயே

(அஷ்டாதசபுஜ)



# 54. ஸ்ரீ மஹாலக்ஷ்மி துர்கா

சிம்ம வாகனம் ஏறிவருகிறாள் ஸ்ரீராஜராஜேஸ்வரி - அவள்
சிவந்த முகத்தில் தீப்பொறி பறக்குது முக்கண் அக்கினி
(சிம்ம வாஹனம்)

தேவர்களும் கூறும் ஜெய ஜெய போற்றி
வாழ்வுக்கு வழி வகுக்கும்
ஆணவ அரக்கன் மகிஷா சூரனின்
அகந்தைக்கு உலைவைக்கும் (சிம்ம வாஹனம்)

திருமால், சிவனார், பிரமன் உள்ளொளி மூன்றும் வெளிவரவே
தேவேந்த்ரன் வண்ணக் கோலமும் சேர்ந்தே
பேரொளியானதுவே
நவநவமான ஆயுதம் ஈந்தனர் அவரவர் அன்பளிப்பு
நாயகி ஆதி பராசக்தி லக்ஷ்மி தீமைக்கு சுடுநெருப்பு
(சிம்ம வாஹனம்)

பதினெட்டுக் கைகளில் படைக்கலம் பார்க்கும்முன்
பார்வையை அவன் பார்த்தான்
பார்வதி, திருமகள், வாணியும் ஓருரு
பகைவன் உடல் வேர்த்தான்
தேவியின் பாதம் மகிஷனின் தலைமேல்
தேய்ந்தது அவுணர்குலம்
பாவிக்கும் கருணை சாதிக்கும் லக்ஷ்மி
துர்கா சரணம் என்போம்!



# 55. இருளில் மின்னல்

கரும்பில் நெருப்பின் ஒளி - நீ
காரிருளில் மின்னலடி - ஊழிக்
காலம் முடிகையிலே - உன்
கால் சலங்கை அதிருதடி
காளி - பத்ரகாளி- மலை
நீலி - திரிசூலி (கருப்பில்)

கத்தி கவண் கதை சூலம்
சங்கு சக்ரம் குண்டாந்தடி
வில் அம்பு ஏந்தி வந்தாய்
ரத்தத். தலை பற்றி நின்றாய்
தெற்றிப் பல் நெரியுதடி - உன்
அட்டகாசம் புரியுதடி
வெற்றி எட்டுத் திக்கும் எட்ட - உன்
நர்த்தனம் நடக்குதடி
காளி - பத்ரகாளி - மலை - நீலி - திரிசூலி (கருப்பில்)

தீயோரைத் தீய்த்திடவும்
தூயோரை வாழ்த்திடவும்
மாயவன் ரூபத்திலே
மதுகைடபரை வதைத்தாய்
காலத் தத்துவமே / அந்தக்
காலத்தை யும் கடந்தாய்
ஆனந்த வடிவினளே - அம்மா
மோட்ச மோஹினியே
காளி - பத்ர காளி - மலை நீலி திரி சூலி (கருப்பில்)



# 56. மஹாகாளி

சந்தம் :

தன்னா தானன தானன தானன னானா - தன
தனனை தனனை தனனை தனனை னானா

உருவின்றி செயலின்றி உயிர்க்குலம் ஒடுங்கிடும் நேரம் - இந்த
ப்ரபஞ்சம் எங்கணும் பெருவெள்ளம் ப்ரளய காலம் - அந்த
சிவமும தனியாய் தவத்தில் மூழ்க திருமால்..... தன்
அரவணைப் பள்ளியில் யோகத்தில் ஆழ்ந்து துயில்வான்

தன்னந் தனியாய் ப்ரம்மன் மட்டும்
என்ன செய்வதென தவித்தான்
கன்னங் கரிய காரிருள் கவ்வ
காளியை வேண்டித் துதித்தான்

காளி....... திரிசூலி..... மலை நீலி........ வருவாய் நீ
(உருவின்றி....காலம்)

இன்பம் அதனால் ஏற்படும் துன்பம் இரண்டும் - சேர்ந்து
வந்தன மாலின் இருசெவி வழியே அங்கே
மதுகைடபர்கள் அரக்கர்கள் எங்கே ப்ரம்மா? - உன்
கமலா ஸனத்தில் நாங்கள் அமர்வோம் என்றார்

படைப்புக் கடவுள் திகைத்தான் துடித்தான்
மாயையை எண்ணி ஜபித்தான்
திருமால் கண்ணைத் திறந்தாள் தேவி
பெரும்போர் அசுரர் மடிந்தார்

காளி........ திரிசூலி....... மலை நீலி......... நீ வாழ்க
(உருவின்றி......காலம்)

பத்து முகங்கள் நெற்றிக் கண்கள் சக்தி - தன்

பத்துக் கரங்களில் யுத்தக் கருவிகள் பற்றி

எட்டுத் திக்கும் வெற்றி முழங்க நகைத்தாள் - தன்

தெற்றிப் பற்கள் தீயைக் கக்க சிரித்தாள்

தேவர் மூவர் யாவரும் வாழ்த்த

ஆனந்த நடனம் ஆடும்

பாதம் வாழ்க பரதம் வாழ்க

பார்வதி வாழ்க வாழ்க!

காளி........ திரிசூலி....... மலை நீலி......... நீ வாழ்க.... வாழ்க!

(உருவின்றி......காலம்)





## 57. வனதுர்கா

செல்வி அவள் தேசம்
மல்லிகையின் வாசம்
தேனொழுகும் காடு
தேவி அவள் வீடு

வன துர்க்கை அவளிருக்கை சிம்மாசனம்
வழவழகு ஒரு கோடி சூர்யோதயம்
காடுமலை தாண்டி தேடிவந்தேன் வேண்டி
சாமுண்டி சண்டி
பாதமலர் கண்டேன் பக்கத்தில் சென்றேன்
நாதஒலி கேட்டேன். (செல்வி அவள்)

சங்கம் சக்ரம் வரம் அபயம்
தாயின் சூலம் ஏது பயம்
ஐம், ஹ்ரீம் ஸ்ரீம்தும் அருள் மந்திரம்
அவளின் தயவு அதை வேண்டுவோம்.

கம்பனவன் கவிதைக்கு சந்தமானாள்
என்றும்என் அன்புக்கு சொந்தமானாள்
முக்கண்ணி ஸ்ரீதேவி திரியம்பகி
மூன்றுலகும் காக்கின்ற நாராயணி
சத்தியத்தின் நித்தியமே ஸௌதாமினி
வனதுர்க்கையே வனதுர்க்கையே (செல்வி அவள்)

சும்ம நிசும்பர் தொலைந் தனரே
மது கைடபர் மறைந் தனரே
மகிஷா சூரன் மடிந்தனனே
காளி லக்ஷ்மி சரஸ் வதி

அகத்தியன் தவத்திற்கு ஆசி தந்தாள்
ஆரண்ய ராணியாய் கோயில் கொண்டாள்
பார்த்தவரை ஆட்கொள்ளும் காத்யாயனி
பருவத்தில் இளங்குமரி ஜகன் மோகினி
ஸர்வமந்த்ர ஸர்வயந்த்ர ஸ்வரூபிணி
வனதுர்க்கையே வனதுர்க்கையே (செல்வி அவள்)





# 58. சூலினி துர்கா

சூலம் ஏந்தும் சூலினி
மூன்றாகத் தோன்றும் மாலினி
திரிபுரம் எரிந்திடும்
சிவனவன் துணையென வந்தாயே ந்தினி (சூலம்)

தேகம் மேகம் வானம் தொடும் க்ரீடம்
திக்கெட்டும் கொடி கட்டுவாய்
சங்கம் சக்ரம் கதை, வில்லொடு பாசம்
அம்பு, கத்தி சூலம் சுழற்றுவாய்

சூழும் நான்கு தோழிமார் போற்றும்
காளியே கருணை காட்டுவாய்
ஸ்ரீம் ஹ்ரீம் க்லீம் ஸ்ரெளம்
தும் ஜ்வல ஜ்வல சூலினி வருவாய்

துஷ்ட க்ரஹ ஹும்பட் ஸ்வாஹா
துர்கா தேவி பக்கம் வருக
முப்பாலுக் கப்பாலும் ஜோ தியே தோன்றிடும் (சூலம்)

சூலம் சூக்ஷமம் காரணமெனும் சரீரம்
இச்சை, கிரியை ஞானசக்தியே
சத்வம், ரஜஸ், தமஸ் எனும் முக்குணம்
பூ புவ ஸீவ லோகேஸ்வரி
ஜாக்ரத், ஸ்வப்னம் ஸுஷுப்தி முந்நிலை
சூர்ய, சந்த்ர அக்னி வண்ணமே
ஸ்ருஷ்டி, ஸித்தி, ஸம் ஹாரம் செய்திடும்
சச்சிதானந்த செல்வமே

ஓம்கார நாதம் ஹ்ரீம்கார ரூபம்
சிவசக்தி ஐக்யம் நவநவமாம் தோற்றம்
ஸ்ரீ ராமன் ஜெய தேவி ரக்ஷ ரக்ஷ யோகேஸ்வரி (சூலம்)



# 59. ஜாத வேதா துர்கா

ஜாத வேதோ துர்காக இவளே
சர்வ மங்களம் தருபவள் இவளே
வேதம் கூறும் மெய்ப்பொருள் இவளே
விண்ணும் மண்ணும் நிறைந்தவள் இவளே

முத்து...... புன்னகை மின்னலிடும் முகத்தவள்
ரத்ன...... வண்ணமே மேனியளாய் ஜொலிப்பவள்
அக்னி..... தன்னிலே கன்னியென தோன்றுவாள்
எட்டு....... கைகளில் ஆயுதங்கள் ஏந்துவாள்
இவள்தான் இருளை அறவே நீக்கும் ஒளியாய் ஆகின்றாள்
(ஜாதவேதோ)

ஒரு முறை இவள்முகம் பார்த்தபின் வேறு
அதிசயம் அற்புதம் எதும் கிடையாது
அழகெனின் இவள்தான் அதற்கு மூலம்
அகில சராசரம் இவள் இடும் கோலம்
முழுமையும் இவளையே சரண் அடைந்தாலே
எழுமையும் துணையென உடன் வருவாளே

இவள்தான் தாகம் தண்ணீரும் இவள்தான்
நேரினில் தோன்றும் தெய்வம் இவளேதான் (ஜாதவேதோ)

ஜாத வேதஸே ஸுனவாம ஸோமம்
அரா தீயதோ நிதஹாதி வேதஹ
ஸதக பர்ஷததி துர்காணி விஸ்வா
நாவேவ ஸிந்தும் துரிதாத் அக்னிஹி

முருகனைச் சுமந்துமே கங்கையில் விடுத்தாள்
மூவரின் சக்தியில் ஓர் உரு எடுத்தாள்

வித்யா ஸாஸ்த்ரம் ஆனந்த சாகரம்
வாழ்க்கை முழுதும் காப்பவள் இவளேதான் (ஜாதவேதோ)



# 60. சாந்தி துர்க்கா

அமைதியைத் தருவதில் உனக்கொரு ஈடில்லை
சுமையை இறக்கிடு உமையவளே
இமவான் மகளே எழுந்திரு வரம்கொடு
என்னுடன் இருந்திடு இனியவளே

உடலும் உயிரும் உணர்வும் நீதானே
அள்ளிக் கொடுக்கும் அம்ருத கலசம்
அதனைப் பருகும் நானோ உன்வசம்
சாந்தி துர்கா தேவி சகலமும் நீதானே (அமைதியை)

எதுவந்த போதிலும் இனிஎன்ன நேரினும்
விதிவசம் ஆயினும் அணைப்பவள் நீயே
சரியென்ற போதிலும் தவறென்ற போதிலும்
நிலைமாறிப் போயினும் நினைப்பவள் நீயே

நோய்கள் யாவும் நீங்கவும்
கல்வியும் செல்வமும் ஓங்கவும்
கன்னியர் திருமணம் ஆகவும்
கவலைகள் எல்லாம் தீரவும்

உன்னுடைய கருணை அல்லால்
என் செயலில் ஏதும் இல்லை
உன்னுடைய லீலை அல்லால்
என் செயலால் ஆவ தில்லை
வா வா தாயே நிம்மதி தருவாய் அம்மா (அமைதியை)

நரசிம்மன் கோபமும் பரமசிவன் வேகமும்
துர்வாஸன் சீற்றமும் தணித்தவள் நீயே
நவரச மையமும் ஞானியர் யோகமும்

நவராத்ரி தீபமும் நாயகி நீயே
சர்வ மங்கள மாங்கல்யே
சிவே சர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம் பகே
தேவி நாராயணி நமோஸ்துதே
ஹ்ரீம்தும் துர்க்காம் தேவிம்
சரணம் அஹம் ப்ரபத்யே
தேவகணம் போற்றும் கௌரி
சாந்திதரும் அனந்த சக்தி
சாந்தி சாந்தி சாந்தி ஓம் சாந்தி (அமைதியை)





# 61. சபரி துர்க்கா

வனக் குறத்தி வேடம் கொண்டு
உமா வந்தாளே....
குந்து மணி மாலை யிட்டு
மயில் தோகை காதில் வைத்து
வில்லும் அம்பும் தோளில் தாங்கி
மரவுரியை உடுத்திக்கொண்டு
சபரி துர்க்கை ஆனாளே
சிவனின் துணை நான் என்றாளே (வனக்குறத்தி)

பாசுபத அஸ்திரத்தை
ஈசனிடம் வேண்டி நின்றான்
பாண்டவரில் வில்விஜயன்
பகலிரவாய்த் தவமிருந்தான்
பரமன் வேடனைப்போல்
பார்வதி கூடவர
முருகனைத் தோளில் வைத்து
முன்னே நடந்து வந்தான்
வரந்தரவே விளையாட்டா
சிவன் என கண்டு கொண்டான்
அர்ச்சுனனும் அடி பணிந்தான் (வனக்குறத்தி)

பூவுலகம் வாழ்வதற்கு போடும் வேஷம் எத்தனையோ
ஆதிசக்தி அம்பிகையும் ஆடுகிறாள் நம்முடனே
தூக்கம் கலைவதற்கும் நோக்கம் தெளிவதற்கும்
ஞானம் பிறப்பதற்கும் நல்வழி நடப்பதற்கும்

ஸ்ரீம் ஹ்ரீம் க்ரோம் ஐம்

ஜபம் சொல்லுவாய்
மனம் தரும் பயம் அதை தினம் தினம் நீ வெல்க என
(வனக்குறத்தி)



# 62. ஜ்வலத்துர்கா

**விருத்தம் :**

ஜ்வலத் துர்காய வித்மஹே
ஜாஜ்வல்ய மானாய தீமஹி
தன்னோ படபா நலஹ ப்ரஸோதயாத்

**பாடல் :**

ஜ்வாலா துர்கா சந்திதா னத்தில்
நாலா புறமும் ஜோதி தெரியுதே
கோடி சூரியர் கூடி னாரா....
சாங்கு சக்கரம்
கத்தி கேடயம்
தனுசு அம்பு சூலம் தாங்கி
ஜாக்ர தைஎன சுட்டிக் காட்டும் (ஜ்வாலா)

பண்டாசுர போரினிலே
ஸ்ரீ லலிதா தேவிக்கு
பாதுகாப்புத் தந்திடவே வந்தாயே

உன் தரிசனம் பூர்வ புண்யம்
பயம் அகற்றிடுமே
உனது பார்வை எனது தேவை
உனது பாதம் எனது சேவை (ஜ்வாலா)

சிந்தாமணி கோட்டையில்
ஸ்ரீசக்ர வாசலிலே
சிம்ஹவா ஹனத்தினிலே நின்றாயே

உன் மந்திரம் என்னைக் காத்திடும்
அபயம் தந்திடுமே
எனது கானம் உனது நாமம்
பாடப் பாட மதுர மாகும் (ஜ்வாலா)



# 63. தீப துர்கா

சுடர் விடுதொரு தீபம் தொலைந்தோடுது பாபம்
ஆம் ஹ்ரீம் க்ரோம் அமும் துர்கே ஏஹ்யேஹி
ஆவேஸய...... ஆவேஸய க்ரோம்தும்
துர்கே க்ரோம்ஹ்ரீம் ஆம்ஹும்பட் ஸ்வாஹா
(சுடர்விடுதொரு)

பூர்ண சந்த்ர கலையின் ஒளியில் நின்னைக் காண்கிறேன்
புதிய அமுதம் பருகி நாளும் போற்றிப் பாடுவேன்
தாயின் கருணை எண்ணி எண்ணி சந்தோஷம் பெறுவேன்
சத்தியத்தின் சங்க மத்தில் சாந்தியை அடைவேன்
ஸ்ரீ துர்கா.... தீபதுர்கா
சிரித்திடுவாய் அருள் கொடுத்திடவாய்
திருமுகம் ஒரு பெருநிதியென மனம் மகிழ்ந்திடுவேன்
உறவினில் இது பெரியது என தலை நிமிர்ந்திடுவேன்
ஆனந்தம் அற்புதம் அதிசயமே சுகமிதுவே
(சுடர்விடுதொரு)

மகிஷன் தலையை மிதித்து அவனின் மமதை மாய்த்தனை
வறுமை நீங்க விளக்கின் ஒளியில் வந்து சேர்ந்தனை
தரிச னம்தர தருணம் வந்தது தாயே வருக
ஜன்ம ஜன்ம வினைகள் தீர்ந்தது திருவே வருக
ஸ்ரீ துர்கா..... தீபதுர்கா
சிரித்திடுவாய் அருள்கொடுத்.திடுவாய்
திருவடியினில் சரணடைந்திடும் பாக்யம் பெற்றேனே
இரு விழிகளின் அருள் அமுதினை பருகி நின்றேனே
மாங்களம் பொங்குதே மஹாலக்ஷ்மி தயவிதுவே
(சுடர் விடுதொரு)



# 64. ஆஸூரி துர்கா

பலப் பல ஆசைகள் பாசங்கள்
விளைவது மோசங்கள்
தினம் தினம் கனவுகள் ஏக்கங்கள்
எல்லாம் வேஷங்கள்
ஒரு சுகமும் பெறுவதில்லை
முடிவினில் துயரமே மிஞ்சிடுதே
விடிவினை காண்பது எப்பொழுதோ
ஆஸூரீ.... துர்கா
திரிசூலி...... விரைவில் வா (பலப்பல)

அணிமணி ஆடை அழகுக் கோலம்
அரவம் பூணூலாம்
வெண்ணிற வண்ணம் சூலம் பாசம்
பதுமம் ஆசனமாம்
அமரர் அமுதம் பெற்றிடுவார்
அசுரரின் கொட்டம் அடக்கிடு வாய்
துக்க நிவாரணி எப்போதும் துணை நீ
அஸூரி..... துர்கா
ஆபத்தில்...... உதவ வா (பலப்பல)

கடுகே கடுக பத்ரே ஸுபகே
ஆஸூரி ரக்தே
ரக்த வாஸஸே அதர்வணஸ்ய துஹிதே
அகோரே கோர கர்மகாரிகே
அன்னையே ஆசைகள் அகற்றிடுவாய்
உன்னிடம் அவற்றைத் திருப்பிடுவாய்
பிறவியாம் கடலதில் ஆழாமல் தடுப்பாய்
ஆஸூரி......... துர்கா
ஆட்கொண்டு......... மீட்க வா (பலப்பல)



# 65. லவண துர்கா

காலக் கணக்குகள் உன்னிடத்தில்
கவனக் குறைவுகள் என்னிடத்தில்
நாளும் பொழுதும் பகுப்பவளே
நன்மையும் தீமையும் வகுப்பவளே
லவண துர்கா உனை நினைத்தால்
அல்லல் தீரும் செல்வம் சேரும்
ஓம் சிடி சிடி சண்டாள்யை மஹாசண்டாள்யை
அமுகம்மே வசமானய ஸ்வாஹா (காலக் கணக்குகள்)

எண்ணி முடியாத ஜீவ ராசிகள்
எத்தனை கோடியோ அத்தனைக்கும்
அன்னம் தருவாய் ஆயுள் தருவாய்
ஸ்வர்ண லக்ஷ்மியோ நீ அம்மா
எத்தனை சித்ரம் எத்தனை விசித்ரம்
எல்லாம் உந்தன் லீலா மகத்துவம்
உப்பிடு வதுபோல் அத்தனை நறுக்காய்
உலகங்கள் காக்கும் மாயாவிநோதினி (காலக் கணக்குகள்)

கல்லுக்குள் இருக்கும் தேரையும் பிழைக்கும்
கருப்பையுள் இருக்கும் குழந்தையும் நிலைக்கும்
எல்லாம் அறிந்தவள் எதையும் அளப்பவள்
எது எது எப்படி அப்படி வைப்பவள்
சொல்லுக்குள் அடங்கா சுந்தர வதனி
துஷ்ட மகிஷா சூர மர்த்தினி
எல்லையில் லாத அமிர்த வர்ஷணி
அல்லும் பகலும் ஆனந்த நர்த்தனி (காலக் கணக்குகள்)



# 66. வன துர்கை

ஆரண்ய வனம் - அவள்
ஆலய தலம்
தாமரை மலரினில் தாயின் தரிசனம்
முழு நிலவின் குளிர் ஒளி வதனம்
இருவிழி நடுவினில் மூன்றாம் நயனம்
(ஆரண்ய வனம்)

தலையினில் சந்திர பிறை முடிந்தாள்
செவிகளில் குண்டலம் அணிந்திருந்தாள்
கடகம் நவமணி பொலிந்திருந்தாள்
அழகுக்கு அழகாய் நிறைந்திருந்தாள்
வரம்தரும் நிலையினில் அமர்ந்திருந்தாள்
அருகினில் வருகென அழைத்திருந்தாள்
அஞ்சேல் அபயம் என மொழிந்தாள் (ஆரண்ய வனம்)

மின்னலை போலொரு கொடி இடையாள்
அன்னத்தை போலொரு எழில் நடையாள்
கன்னங்கள் சிவந்திட அவன் சிரித்தாள்
கையினில் சக்கரம் அதை எடுத்தாள்

சங்கின் நாதம் முழங்கிடுவாள்
சிங்கத்தில் பவனி எழுந்தருள்வாள்
மங்கள குங்குமம் வழங்கிடுவாள்
(ஆரண்ய வனம்)



# 67. சூலினி துர்கா

சூலினி ஜ்வல சூலினி ஜகன் மோஹினி சுப மாலினி

சூலினி ஜ்வல சூலினி ஜகன் மோஹினி சுப மாலினி
என்னைக் கண்பாராயோ
நீ பக்கம் வந்தால் ஒரு துக்கம் இல்லை என்
முன்னாலே அம்மாநீ வாராயோ
அபயம் அபயம் ஜெய விந்த்ய வாஸினி (சூலினி)

தாயுன் செந்தூரம் பகையைப் பந்தாடும்
தாமரை பாதாரம் ஆதாரம் ஆகும்
சந்தன அக்ஷதையால் அம்மாவை அர்ச்சிப்பேன்
செவ்வாழை பழம் வைத்து தினம் தினம் பூஜிப்பேன்
நெற்றி நடுவினிலே ஒரு பொட்டு வைப்பாயே
வெற்றி தருவதற்கே திரிசூலம் எடுப்பாயே
உனையே நினைந்தேன் அருளில் நனைந்தேன்
புன்னகை பூத்திடம்மா - அம்மா (சூலினி)

படைப்பது காப்பது அழிப்பது எல்லாம் நீ
பயங்கர ஆயுதங்கள் சுழற்றும் துர்கா நீ
மேகம் உன்மேனி சிம்ம வாஹினி
வானத்தைத் தொடுகின்ற விஸ்வரூபிணி
மூன்றாய் இருப்பதெல்லாம் முடிவில் ஒன்றாகும்
நான்காம் நிலைகாட்டி நாதாந்தம் விளையாடும்
எலுமிச்சை கனியால் இடரைக் களைவாய்
இதயத்தில் இருப்பாயே - அம்மா (சூலினி)



# 68. ஜாதவேதோ துர்கா

ஜாதவேதோ துர்கா வதனம் சிவனின் செம்மைநிறம் - அந்த
தாயின் கரங்கள் ஈரொன்பதும் மாலின் பசுமைநிறம்
தேவி கூந்தல் யமனின் தேஜஸ் செவிகள் வாயு நிறம் - அவள்
நாசி வண்ணம் குபேரன் நிறம் நயனம் அக்னி நிறம்
ப்ரஜாபதி ஒளி பல்லின் வெண்மை அருணன் செவ்விதழே
ப்ரம்ம விஷ்ணு ஹரனின் ஜோதி அன்னை ஆயினளே

ஜாத வேதோ துர்கா தேவி சரணம் சரணம் அம்மா

சந்த்ர கலையை தலையில் தாங்கி எதிரில் வந்தாளே
சக்தி கேடயம் கதையை ஏந்தி காட்சி தந்தாளே
அம்பு பூட்டி வில்லை மீட்டி பகையை வென்றாளே
ஆள் காட்டி விரலைத் தூக்கி அபயம் என்றாளே

யாகத்தில் தீயின் ரூபம்
வேதத்தின் சாரம்
யோகத்தில் ஞான தீபம்
ப்ரணவ நாதம்
வாரி வழங்கும் காமதேனு பாசம் வீசி நேசம் ஆனாள்


ஜாத வேதா துர்கா தேவி சரணம் சரணம் அம்மா

பரமசிவனின் நெற்றிக் கண்ணில் தெறித்த சுடர்களையே
பற்றிக் கொண்டு கங்கை ஆற்றில் விட்டு வந்தனளே
சரவணத்தில் முருகப் பெருமான் தவழக்கண்டாளே
சரணம் என்பார் இதயக் குகையில் நடனம் ஆடினளே

ஆபத்தில் காக்கும் தெய்வம்
ஆழியாத செல்வம்

சோகத்தை நீக்கும் சொந்தம்
நீங்காத பந்தம்
நினைத்த தெல்லாம் நடத்த வந்தாள்
நித்தம் நித்தம் பக்கம் நின்றாள்

ஜாத வேதோ துர்கா தேவி சரணம் சரணம் அம்மா
நாளும் நீஎன் துணையிருக்க வாழ்கிறேன் அம்மா





# 69. ஸ்ரீ சாந்தி துர்கா

தேவி நின் பூமுகம் முழு நிலவோ
சாந்தியின் பூரண ஒளி மயமோ
கண்கள் கருணை மலர் மழையோ
பண்கள் தவழும் இசைக் கடலோ
மோனம் ஞானம் யோகம் மாதவமோ
துர்கா உன் பொற்பாதம்
எப்போதும் சங்கீதம் (தேவி நின்)

சங்கம் சக்கரம் அம்புவில் சூலம்
அம்ருத கலசம் ரத்தின பாத்ரம்
கத்தி கேடயம் கதையினை ஏந்தி
அபய வரம் தரும் அம்பிகையே
துர்காம் தேவிம் ஓம்ஹ்ரீம் தும்என
தித்திக்குமே உன் த்யானம் (தேவி நின்)

சிவனின் சினமும் நரசிம்மன் கோபமும்
தணித்தவள் நீ தானே
துர்வாஸர் சீற்றம் மாற்றிய துர்கா
அடைக்கலம் நீதானே
அமைதியின் உருவே பரமேஸ் வரியே
இடையூறெல்லாம் போக்கிடுவாய்
நவரஸ நடுவே நன்மையின் வடிவே
வா வா நிம்மதி தந்திடவா
சாந்தி துர்கா தாயே வா (தேவி நின்)



# 70. தீப துர்க்கை

தீப துர்க்கை உன் தரிசனமே
ஜன்ம சாபல்யம் அது நிஜமே
விளக்கின் ஒளியில் கலக்கம் தீரும்
மூடிய பனிப்புகை ஓடியே போகும்
சத்து நீ அம்மா சித்து நீ
சத்து நீ சித்து நீ
ஆனந்தம் ஆனதோர் அற்புத சக்தி நீ (தீபதுர்க்கை)

பதினெட்டுக் கைகளில் படைக்கலமே
பகவதி நானுந்தன் அடைக்கலமே
மறவேனே உனை ஒரு கணமே
பிறவேனே இனி நிச்சயமே
நிரந்தரம் சுகந்தரும் பழரசமே
நிறைந்தெங்கும் சுடர்விடும் ஒளி மயமே
யோகியர் ஞானத்தில் நீதானே லயமே (தீபதுர்க்கை)

சிங்கத்தில் அமர்ந்த மாமறையே
செக்கச் சிவந்த தாமரையே
சங்கு சக்கரம் தாமரையே
வில்லம்பு சூலம் தோன்றிடுதே
மங்களம் பொங்கி வழிந்திடுதே
இருகரம் அபயம் வரம் தருதே
மஹேசன் துணையே இதய ஜோதியே (தீபதுர்கை)



# 71. சபரி துர்கா

சபரி துர்கா உன்னை வேண்டியே வந்தேனே
சங்கரி சிரிப்பைக் கண்டே மெய் மறந்து நின்றேனே
வேடச்சி ரூபத்திலே வேஷத்தைப் பார்த்தேனே
அம்மா அம்மா அம்மா
சிவனை போலநீ மான்தோல் போர்த்தாயோ
கழுத்துச் சரட்டிலே புலிப்பல் கோத்தாயோ

அம்மா இந்தக் கோலம் ஏனோ
சும்மா ஒரு ஜாலம் தானோ (சபரி துர்கா)

அர்ச்சுனன் செய்யும் தவம் அதைநீ பார்க்கவோ
சோதனை செய்ய எண்ணி வம்புக்கு இழுக்கவோ
பாசுபத அஸ்திரத்தை எடுத்துச் கொடுக்கவோ
பாண்டவர் போரினிலே வெற்றியைச் சேர்க்கவோ
முருகனை தூக்கிக்கொண்டு முன்னே போகிறாய்
கருணை மழை பொழிவதற்கோ கௌரி செல்கிறாய்
பார்வதி உன்னைக் கண்டால் காரியம் பலிக்கும் அம்மா
அம்மா அம்மா அம்மா
தேவி உன் பார்வை போதும் வேறென்ன வேண்டும் அம்மா
(சபரிதுர்கா)

குந்துமணி மாலை உந்தன் கழுத்துக்கு அழகு
நீலமயில் தோகை உந்தன் காதுக்கு அழகு
வில்லும் அம்பும் ஏந்தியது கைகளுக் கழகு
மரவுரி தரித்ததுவோ இடுப்புக்கு அழகு
கைவீசி நடக்கம் போது கண்கள் துள்ளுதே
கால்சிலம்பு ஒலிக்கும் போது நெஞ்சை அள்ளுதே
காளியே உன்னைக் கண்டால் கவலைகள் பறக்குதம்மா
அம்மா அம்மா அம்மா
நீலியே உன்னைக் கண்டால் நிம்மதி பிறக்குதம்மா (சபரி துர்கா)



# 72. ஜ்வாலா துர்க்கை

ஜ்வாலா துர்கா சந்நிதி வாசல்
அக்கினி சூழ்ந்திடுதே - அதைத்
தாண்டியே வந்தால் வந்தவர் பாவம்
நெருப்பில் வெந்திடுதே
அம்மா என்னைப் பாராயோ
ஆறுதல் சொல்லாயோ
ஆவேசம் ஏன் அநுக்ரஹம் தா (ஜ்வாலா)

பண்டா சூரன் சேனை உன்னால்
பஸ்பம் ஆனது
அம்பிகை சக்தி அவளின் முகத்தில்
அவதரித்தவள் நீ
எப்பேர்ப்பட்ட கோட்டையை யும்நாம்
தாண்டிப்போய் விடலாம் - அம்மா அம்மா அம்மா
ஏழு கடலும் நீந்த முடியும்
தீ நீ அப்படியோ
தாயேஉன் பார்வை கோபாக்கினி
சரணம் என்றாலோ அன்புக் கனி (ஜ்வாலா)

அன்பு கத்தி கேடயம் சூலம்
வில்லும் ஆயுதம்
சங்குடன் சக்ரம் ஏந்தும் கைகள்
என்னைத் தாங்கிடும்
சுட்டிக் காட்டி எச்சரித்திடுவாய்
சூட்சுமம் என்னம்மா - அம்மா அம்மா அம்மா
சொந்தம்என அருகில் வந்தபின்
சொல்லிட வேண்டும் அம்மா
தாயே உன் தயவு சிந்தாமணி
நாளும்என் இதய மனோன்மணி (ஜ்வாலா)



# 73. ஆஸுரி துர்கா

நிறைவேறுமா ஆசை நிறைவேறுமா
கணந்தோறுமே நிலை தடுமாறுதே – அம்மா
இதுதான் என்றோர் குணம் அதுதான் என்றோர் மனம்
ஒரு நாள் நன்றானது மறுநாள் தீதானது
கானலில் அலைந்திடும் மானே ஆனதே
கலைந்திடும் கனவே ஒரு சுகம் இல்லையே (நிறைவேறுமா)

நிற்காத பம்பரம்போல் வீணாகச் சுழல்வேன்
நீதான தடுத்தென்னைக் காப்பாற்ற வேண்டும்
தஹித்திடும் நெஞ்சம் அதைத் தணித்திடு தாயே
நினைப்பினை வசமாக்கித் திருப்பிடு உன்பக்கம்
எனதென எண்ணாமலே உனதெனும் எண்ணம்கொடு
எல்லாம் உன்னாலன்றி என்னால் ஏதும் இல்லை
(நிறைவேறுமா)

வெள்ளை நிறத்தவளே வெள்ளைமனம் கொடம்மா
தாமரை அமர்ந்தவளே சாந்தியைக் கொடம்மா
பாசக் கயிற்றாலே பக்கத்தில் இழுப்பாய்
ஆஸுரி துர்காதாயே அடைக்கலம் தருவாய்
பாம்பினை அணிந்தவளே பயத்தினைப் போக்கிடுவாய்
சூலத்தைச் சுழற்றியே நீ தீமையை நீக்கிடுவாய்

நிறைவேறுமே ஆசை நிறைவேறுமே
நலமாகுமே எலலாம் நடந்தேறுமே
இதயம் அன்னையிடம் இருந்தால் ஏது பயம்
அருளும் குணம் கொண்டாள் ஆஸுரி துர்காம்பா

நிறைவேறுமே ஆசை நிறைவேறுமே
நலமாகுமே எல்லாம் நடந்தேறுமே



# 74. லவண துர்கா

அருட்கடலாகிய அன்னையே உன்னிலே
கலப்பது எப்போது
அப்படிக் கலந்தபின் உப்புப்போல் கரைந்தபின்
எனக்கென ஒன்று ஏது (அருட்கடலாகிய)

ஆறு சுவைகளும் அளவாய் இருந்திடின்
அதுவே விருந்தாகும்
அத்து மீறினால் உப்புக் கூடினால்
யார் தான் உண்ணலாகும்
காமக்ரோத லோபம் மதம் மோகம் மாச்சர்யம்
ஆறும் அடங்க வேண்டும்
தேவி லவண துர்கா பார்வையில் அவை எல்லாம்
தேய்ந்து போக வேண்டும். (அருட்கடலாகிய)

சங்கு முழங்கு சக்கரம் சுற்றிடு
கையிலே கத்தி ஏந்து
வந்த பகையினை விரட்டி ஓட்டிடு
சூலத்தைச் சுழற்றி விட
நெற்றிக் கண் திறந்து நீதியைக் காத்திடு
நிம்மதி தந்துவிடு
சித்தம் ஒருமித்து நித்தம் உனை நினைக்க
சக்தி நீ வழிகாட்டு (அருட்கடலாகிய)



# 75. விஜயவாடா அருள்மிகு கனக துர்கா

வெற்றிச் சங்கு முழங்குது உந்தன் கோயில் வாயிலிலே
வீர முரசு அதிருது அந்த விஜய வாடாவினிலே - அம்மா
(வெற்றிச்சங்கு)

பத்தெட்டுக் கரங்களால் மிகஷனை வதைத்தாய்
பாதத்தால் மிதித்தாயே
யுத்தம் முடிந்ததும் க்ருஷ்ணா நதிக்கரை
ஓய்வு கொண்டாயே
சுற்றி நின்றே துதித்திடும் யாவர்க்கும்
சொர்ணம் பொழிந்தாயே
சுந்தரக் கோலம் என்றென்றும் காண
அருள் புரிந்தாயே - தாயே - (வெற்றிச்சங்கு)

துர்கா உன் தோற்றம் கண்டவர் வாழ்வில்
துயருக்கு இடமில்லை
தொழுதிடத் தொழுதிட கனக மழை பெய்யும்
சந்தேகமே இல்லை
எப்போதும் நின்பாதம் நெஞ்சினில் வைப்பார்க்கு
எந்தக் குறையும் இல்லை
அஷ்ட ஐஸ்வர்யம் சகல சௌபாக்யம்
மகிழ்ச்சிக்கு அளவில்லை - அம்மா - (வெற்றிச்சங்கு)



# 76. அஞ்சலி

அன்னையே வணங்குகிறோம் - நாளும்
அஞ்சலி செலுத்துகிறோம்
அன்பு மயமான ஆதி சக்தியே
அஷ்டா தசபுஜ துர்கா லக்ஷ்மியே (அன்னையே)

வெஞ்சமர் புரிந்தாய் வீரம் விளைவித்தாய்
நஞ்சினம் கொடிய மகிஷனை வதைத்தாய்
அஞ்சேல் என்றே அபயம் தந்தாய்
அமரும் அசுரரும் திருந்த வழி செய்தாய் (அன்னையே)

மூவரும் முனிவரும் போற்றிடும் தேவி
தேவ கணங்களின் சங்கம சக்தி
நல்லவர் இல்லத்தின் செல்வி லக்ஷ்மி
எல்லோர்க்கும் புகலிடம் நீயே தாயே (அன்னையே)

யாகங்கள் போற்றும் ஸ்வாஹா நீயே
மூதாதையர் மகிழும் ஸ்வதாவும் நீயே
வேத வடிவே பகவதி கௌரி
பேரழகே எங்கள் வாழ்வின் ஒளியே (அன்னையே)

நான்கு திக்கிலும் உந்தன் சூலம்
தீங்கு வராமல் காக்கட்டும்
நாளும் பொழுதும் உந்தன் நினைவே
நன்மைகள் யாவும் சேர்க்கட்டும் (அன்னையே)



# 77. இராகுவின் காலம்

மங்கல வாரம் ராகுவின் காலம்
அம்பிக்கை துர்கா பூஜையின் நேரம்
குங்குமம் கொடுத்திட வேண்டிடுவோம்
பயமேன்..... ஜயமே
தாயே வருக தயையே புரிக
சந்நிதி வந்தபின் என்மனம் உன்னிடமே - அம்மா
(மங்கள வாரம்)

கருநிறம் கருவிழி கொண்டவளே
கலைமதி தலையினில் வைத்தவளே
எதிரியை பார்வையில் எரிப்பவளே
ஒளி தந்து உலகெலாம் காப்பவளே
அழகே உன்னிடம் அடைக்கலமே
அருளே ஆயிரம் படைக்கலமே
துர்கே துர்கே ரக்ஷணி ஸ்வாஹா
பயமேன்...... ஜயமே
ஜய த்வம் தேவி சாமுண்டி சண்டி
செல்லும் வழியினில் துணையாய் வந்திடம்மா.... அம்மா
(மங்கள வாரம்)

கருணையே வடிவமாய் நின்றவளே
கலைகளை வழங்கிடும் கலைமகளே
திருவளர் செல்வியே அலைமகளே
ஜயம் ஜயம் என்றிடும் மலைமகளே

மூன்று சக்தியும் சேர்ந்தவளே
முதலாய் முடிவாய் அமைந்தவளே
ஜெயே விஜயே சரணம் சரணம்

பயமேன்.... ஜயமே
துர்கா துர்கா ஜயமே தருவாய்
என்றும் நெஞ்சினில் தங்கிட வந்திடம்மா.... அம்மா

(மங்கள வாரம்)





# 78. பயம் நமக்கில்லை

துர்கை என்றொரு சக்தியைப் போற்றுவோம்
துக்கம் நமக்கில்லை
பக்கம் வந்தவள் நிற்பது சத்தியம்
பயம் நமக்கில்லை

சங்கு முழங்கும் சங்கரி அவள் துணை
சங்கடம் இனி இல்லை
சக்கரம் சுழற்றிடும் சாம்பவி அவள் மனம்
சாந்தி யின் எல்லை (துர்கை என்றொரு)

கத்தி கேடயம் வில் அம்பு சூலம் பகை முறித்திடுமே
கால் சலங்கையின் நாதங்கள் வாழ்வினில்
இனிமை சேர்த்திடுமே
புத்தி அற்றவர் மகிஷன் போல் மிதிபட புன்னகை பூப்பாள்
சக்தி சக்தி என்றிடும் அன்பர்கள் பூஜைகளை ஏற்பான்
(துர்கை என்றொரு)

அன்பு வைத்தவர் நெஞ்சினில் ஆடிட அன்னை வந்திடுவாள்
அபயம் என்பவர் துயரம் நீங்கிட அடைக்கலம் தருவாள்
முன்பு செய்தது புண்ணியம. ஆதலால் முன் நடந்திடுவாள்
பின்பு விளைகின்ற பாவங்கள் ஓடிட பின்னி எறிந்திடுவாள்
(துர்கை என்றொரு)

காட்டு வெளியிலும் காவல் நானென காட்டும் பண்புடையாள்
கடல் நடுவிலும் புயல் வந்த போதிலும் கவலை போக்கிடுவாள்
நேற்றும் இன்றும் நாளையும் என்றும் நிம்மதி அவளே
போற்றி போற்றி போற்றி அவள் பதம் வெற்றி பெற்றிடவே
(துர்கை என்றொரு)



# 79. துர்கை வருகிறாள்

**விருத்தம் :**

வழிபடும் அடியவர் இடர்களை
பொடிபடச் செய்திடும் பூரணி
மகிஷனின் உடலது மிதிபட
திருவடி பதித்திடும் நாரணி
முருகனை ஏந்திய அக்னி - அவள்
முப்பெரும் சக்தியின் காரணி
கன்னிகுமாரி காத் யாயனி
சிம்ம வாஹினி சூலினி

**பாடல் :**

எட்டுத் திக்கையும் இடையில் உடுத்திய சக்திவருகிறாள்
பக்தி கொள்பவர் பக்கம் நின்றிட துர்கை வருகிறாள்
சித்தம் தெளிந்திட செல்வம் வழங்கிட தேவி வருகிறாள்
சத்தி யத்தினைக் காப்பதற்கென சண்டி வருகிறாள்
சக்தி வருகிறாள் - நவ - துர்கைவருகிறாள். ஓம் சக்தி ஓம்!

சங்கு சக்கரம் அம்பு வில்லுடன் சூலம் ஏந்தினாள்
தண்டாயுதம் வஜ்ராயுதம் கமண்டலம் தாங்கினாள்
பச்சை மரகதம் பத்மராகத்தின் ஒளியில் தோன்றினாள்
பவள இதழ்களில் முத்து வரிசைகள் பார்வை வழங்கினாள்
அபயம் தருகிறாள் - நம் - அன்னை வருகிறாள். ஓம் சக்தி ஓம்!

புரட்டாசி மாதம் வளர்பிறைக்காலம் நவராத்ரிநேரம்
புனித யாகத்தில் தீயின் ஜ்வாலையில் சிரித்திடும் கோலம்
சகஸ்ர நாமமும் வேத கோஷமும் சாமுண்டி கீதம்
சகல பாக்யமும் தருவதற்கென அவளின் அவதாரம்

பவனிவருகிறாள் - நம் - பவானி வருகிறாள். ஓம் சக்தி ஓம்!
ஓம் சக்தி ஓம்! ஓம் சக்தி ஓம்! ஓம் சக்தி ஓம்!



# திருமகள் தரிசனம்





# 80. அழைப்பு

அழைத்து வா நீ அழைத்து வா
அக்னி தேவா லக்ஷ்மியை நீ அழைத்து வா - அவள்
அழகு முகம் காண துடிக்கிறோம்
அழைத்துவா நீ அழைத்து வா (அழைத்து வா)

ஹோம குண்டம் அமைத்தோம்
யாகத் தீ வளர்த்தோம்
வேத மந்தரம் ஜபித்தோம்.... விரைந்து வா
ஸ்ரீ சூக்தம் படித்தோம்
நோன்புகளை முடித்தோம்
ஸ்ரீ தேவியை நினைத்தோம்.... அழைத்து வா
அழைத்து வா நீ அழைத்து வா (அழைத்து வா)

நிலவின் ஒளி போன்று குளிர்பவளை குளிரச் செய்பவளை
நீல விழி காட்டி அழைப்பவளை அழைக்கச் செய்பவளை
மலர்களெலாம் சேர்ந்து மணப்பவளை மணக்கச் செய்பவளை
உலகமெலாம் போற்றிப் புகழ்பவளை புகழச் செய்பவளை
(அழைத்துவா)

வேத ஸ்வரூ பத்தை
விஷ்ணு பத்னியை அழைத்து வா
ஏழிசை கானத்தை
ஞான யோகத்தை அழைத்து வா
பாற்கடல் அமுதத்தை
பங்கயச் செல்வியை அழைத்து வா
காக்கும் தெய்வத்தை
கருணை வெள்ளத்தை அழைத்து வா
அழைத்து வா.... நீ அழைத்து வா.... (அழைத்து வா)



# 81. லக்ஷ்மி வாழும் இடம்

**விருத்தம் :**

வெண்சங்கு நடுப்பகுதி வீற்றிருக்கும் தேவியவள்
விடிகின்ற பொழுதினியே விளக்கமவள்
சந்திரனின் காந்தி அவள் சாந்தி அவள்
சாஸ்திரங்கள் கூறுகின்ற சாரம் அவள்

**பாடல் :**

செங்கமல மலர் மேலே சண்பகமோ - குளிர்
சந்தனமோ
தங்கமதில் குழைத்தெடுத்த குங்குமமோ - எழில்
சங்கமமோ
மங்காத முழுநிலவு திருமுகமோ - அது மலர்வனமோ
மாறாத கருணை மழை பொழிந்திடுமோ - அருள்
வழங்கிடுமோ
(செங்கமல)

திருப்பாற் கடல் தந்த தேன முதல் - இந்த
செங்குமுதம்
திருமால் மார்பினிலே வளர் மச்சம் - அது
ஸ்ரீ வத்ஸம்
இவள் தான் உலகனைத்தும் ஆட்டுகிறாள் - வளம்
கூட்டுகிறாள்
திருவிளக்கின் சுடராக சிரிக்கின்றாள் - உயிர்
வளர்க்கின்றாள்
(செங்கமல)

பசுவின் பாலாக இவள் சுரப்பாள் - பல
நலம் கொடுப்பாள்
பத்தினிப் பெண் முகத்தில் விழியாவாள் - மழலை
மொழியாவாள்
வில்வம் நெல்லியிலே மருந்தாவாள் - சுவை
விருந்தாவாள்
நல்ல கவிதையிலே சொல்லாவாள் - கதிர்
நெல்லாவாள்
(செங்கமல)





# 82. ஒளி அமுதம்

மங்களம் பொங்கிடும் தங்க முகம் - எங்கள்
மஹா லஷ்மியோ ஒளி அமுதம்
குங்குமச் செவ்வாய் செங்குமுதம் - அள்ளிக்
கொடுத்துச் சிவந்தது தாயின் கரம்
(மங்களம்)

அறம், பொருள், இன்பம், வீடு எனும் - அந்த
அனைத்தையும் அன்னை தந்திடுவாள்
யானைகள் இருபுறம் சூழ்ந்திடவே - செந்
தாமரை மலர்மேல் அமர்ந்திடுவாள்
(மங்களம்)

என்றும் அவளால் சந்தோஷம் - அவள்
இருக்கும் இடமெலாம் ஐஸ்வர்யம்
செங்கோல் ஏந்தி வலம் வருவாள் - அவள்
திருவடி பணிந்தால் நலம் தருவாள்
(மங்களம்)

திருமால் மார்பில் இடம் பெறுவாள் - தெய்வத்
திருப்பாற் கடலில் வாழ்ந்திடுவாள்
கருணை என்பது அவள் உருவம் - அதைக்
காண்ப தென்பது பூர்வதவம்
(மங்களம்)



# 83. கொலுபீடம்

நவரத்னம் இழைத்த தங்கக் கலசங்களில்
நதிகள் தவழ்கின்றன
அஷ்டதிக் கஜங்கள் அவற்றைச் சுமந்து
ஆடி வருகின்றன

அம்மா லக்ஷ்மி எழுந்தருள்க
அபிஷே கங்கள் ஏற்றிடுக (நவரத்னம்)

கடலின் முழக்கமோ வேத கோஷம்
ரிஷிகள் முனிவர் வந்தார்
கந்தர்வர்கள் யாழை மீட்டி
கானம் பாடு கின்றார்
தேவ மாதர்கள் தோகை மயிலென
நாட்டியம் ஆடு கின்றார்
திருமக ளே உந்தன் தரிசனம் காண
யாவரும் கூடு கின்றார்

அம்மா லக்ஷ்மி அமர்ந்திடுக
அலங்காரங்கள் ஏற்றிடுக (நவரத்னம்)

நீலவானம் பொன்னாடை போர்த்த தேடி வந்துள்ளாள்
பூமி தேவி பரிமளப் பூக்களால் மாலை தொடுக்கின்றாள்
நான் முகன் நவமணி ஆபரணங்கள் நல்கிட காத்துள்ளான்
நாராயணன் உன்னை பார்த்துப் பார்த்து பூரித்து நிற்கின்றான்

அம்மா லக்ஷ்மி வந்திடுக
அருட் ப்ரஸாதம் தந்திடுக (நவரத்னம்)



# 84. அழகின் இலக்கன

அமுதோடு பிறந்த திரு
நிலவோடு வளர்ந்த உரு
அழகின் இலக்கணம் இது
திருப்பாற் கடல்தந்த
ஒளிமுத்து குளிர் முத்து
திருமாலின் பெரும் சொத்திது - அவன்
மணி மார்பில் அணியானது (அமுதோடு)

செந்தாமரை மலர் மீதினில்
நின்றாடிடும் மயிலோ இது
தீட்டாத சித்திரமோ இது
கண்டார் மனம் திண்டாடிடும்
கொண்டாடிடும் கூத்தாடிடும்
நந்தவனம் நடந்து வந்தது - சுடர்
நக்ஷத்திரக் கூட்டம் குவிந்தது (அமுதோடு)

மின்னல் ஒரு பெண்ணானது
மீன்கள் இரு கண்ணானது
கன்னல் அவள் மொழியானது
கைகள் கொடி மலரானது
வண்ணம் எழில் வடிவானது
வானம் அவள் இடையானது
பொன்மாரி பொழிகின்றது புன்னகை
பூமாரி பொழிகின்றது (அமுதோடு)



# 85. திருமகளின் உலா

உலகம் - ஓர் அழகுத் திருவிழா - அதில்
திருமகள் உந்தன் தேர்உலா
(உலகம்)

அருவியின் ஆட்டம் ஒரு பக்கம் - கடல்
அலைகளின் கூத்து ஒரு பக்கம்
மலைகளின் மாட்சி ஒரு பக்கம் - இந்த
மண்மகள் பசுமை ஒரு பக்கம்
கதிரும் நிலவும் வரும் போகும்
காட்சிகள் யாவும் ஒழுங்காகும்
எழில் வீற்றிருக்கும் இடமெல்லாம்
இலக்குமி உந்தன் அருளாகும்
(உலகம்)

காலை நேரம் மலர்ந்தவுடன்
கண்ணில் தெரிவது நீ தானே
கடும்பகல் உழைப்பின் களைப்பெல்லாம்
களிப்பாய் மாற்றுவதும் நீ தானே
மாலைப் பொழுதில் திருவிளக்கின்
மங்களச் சுடரும் நீ தானே
தாயே உந்தன் தயவின்றி
வாழ்வில் சுகங்கள் வாய்ப்பதுண்டோ
(உலகம்)



# 86. வேதவல்லித் தாயார்

இருயானைகள் புடைசூழவே அமர்ந்தாள் அந்த திருமாமகள்
திருவல்லிக் கேணியிலே
பெரு நான்மறை கொடியானதோ திருநாமமே தித்திக்குது
வேதவல்லி அம்மா / (அம்மா)
(இருயானைகள்)

பொன்னை எல்லாம் வார்த்தெடுத்து
பூவாக அதைத்தொடுத்து
பெண்ணி வள்தான் என்று சொன்னால்
அன்னை உருவமே
அம்மா அழகே அமுதே தமிழே
மண்ணுக்குப் புகழ் சேர்க்க வந்தாயே நிலவே
(இருயானைகள்)

கருணை மழை கண்களிலே
கமல மலர் கைகளிலே
அபய வரம் தருபவளே
அன்பின் வடிவமே
தாயே தயவே ஏழை உயிரே
வாழ்வுக்குப் பொருள் சொல்லும் வற்றாத நிதியே
(இருயானைகள்)



# 87. கலைவாழ நிலையானாள்

தாயே தனலெட்சுமி - அருள்
வாயே மகாலெட்சுமி - என்றன்
(தாயே)

தூயசெந் தாமரை மேய உன் தாளினை
வாயாரப் பாடியே வாழ்த்தி வணங்குகிறேன்
(தாயே)

ஆய கலைகள் பல அறிந்திருந் தாலும்உன்
அருளிலை யேல் அவை மலர் வதுண்டோ அம்மா
நாயேனைக் கடைக்கணித்தே ஆள்வையேல் நாள்தோறும்
நற்றமிழ்ப் பாமாலை பற்பல நானிசைப்பேன்
(தாயே)

ஓயாத கவலையெல்லாம் ஓடிட வழிகாட்டு
உன்திருப் பாதமலர் சூடிட அருள்கூட்டு
தேயாத பெருஞ்செல்வம் நாடிடக் கைநீட்டு
தினந்தினம் நின்புகழைப் பாடிட எனைமீட்டு
(தாயே)



# 88. யானைமணி ஒலி

யானை மணி முன்னொலிக்க
குதிரை வீர நடைநடக்க
சேனை படை புடை சூழ
தேவி வருகிறாள் - ஸ்ரீ
தேவி வருகிறாள் - தங்கத்
தேரில் வருகிறாள் (யானை மணி)

புன்முறுவல் பூத்தமுகம்
பொன் மகளின் சாம்ராஜ்யம்
கண்ணின் ஒளிக் காந்தமதே
நீங்காத சந்தோஷம்
அன்னையவள் சந்நிதியே
சங்கநிதி பத்மநிதி
அன்பு மனத் தாமரையே
அவள் விரும்பும் நறுமலரே (யானை மணி)

ஸித்த லக்ஷ்மி மோஹலக்ஷ்மி
ஜெய லக்ஷ்மி வரலக்ஷ்மி
ஸ்ரீ ரங்க நாயகியாள்
பாற்கடலில் அவதரித்தாள்
முக்கண்ணி நாராயணி
விஷ்ணுபத்னி பத்மினி
எப்போதும் மகிழ்ச்சியையே
தப்பாது தருபவளே (யானை மணி)



# 89. காலைக் கோலம்

வேதங்கள் துதிபாடும் விடிகாலம்
தாமரைப் பூவில் திருக்கோலம்
பாரி ஜாத மலர் தூவி
கங்கா வந்தாள் நீராட்ட (வேதங்கள்)

யானைகள் மாலைகள் சூடிடவே
அரம்பையர் நடனம் ஆடிடவே
வாணி வீணை வண்ணங்கள் மீட்ட
தேவி ஸ்ரீ தேவி அலங்காரம் (வேதங்கள்)

நீல வானம் பட்டுடுத்த
பூமி பரிமளப் பரிசளிக்க
நட்சத்ர மணிமாலை கழுத்தசைய
கஜலக்ஷ்மி அழகுக்கு ஈடேது (வேதங்கள்)





# 90. ஆனந்தக் காட்சி

ஆனந்தக் காட்சி அம்மா - உன்
அலங்காரத் திருக்கோலம்
எந்நாளும் வைபோஹம் (ஆனந்த)

நீதானே இகலோக வாழ்விற்கு ஆதாரம்
நிம்மதியை பெறுவதற்குன் சந்நிதியே சந்தானம்
(ஆனந்த)

தாயுந்தன் கடைக்கண்ணின் தயவால் தான் சந்தோஷம்
தானங்கள் தர்மங்கள் சகல சௌபாக்யம்
ஸ்ரீதோவி சிரித்தால் தான் தேடி வரும் ஐஸ்வர்யம்
தரிசனத்தில் கிடைப்பது தான் தெவிட்டாத சௌந்தர்யம்
(ஆனந்த)





# 91. சௌந்தர்ய தேவதை

தாமரைப் பூவினில் மேவி யிருப்பாள் சௌந்தர்ய தேவதையாள்
அவள்

தண்ணருள் பொழிந்தால் இன்னல்கள் அகலும் சாந்தியைத்
தந்திடுவாள்

நாரா யணன்திரு மார்பினில் லக்ஷ்மி நாளும் வளர்ந்திடுவாள்

நல்லவர் வெள்ளை உள்ளங்கள் தோறும் நாடி நடந்திடுவாள்

(தாமரைப் பூவினில்)

காலையும் மாலையும் வாசலில் கோலம் சார்ந்திடும் வீடுகளில்

சந்ததம் அவள்புகழ் மந்திரம் சொல்லிடும் அந்தணர் ஏடுகளில்

பால்தரும் பசுவினில் பத்தினி தாலியில் பச்சைக் குழந்தையிடம்

பாவையர் விழியினில் பாவலர் மொழியினில் நாயகி திருநடனம்

(தாமரைப் பூவினில்)

பாற்கடல் அமுதம் பகிர்ந்து கொடுத்து பசுமை வளர்த்திடுவாள்

பக்தியும் சித்த சுத்தியும் கொண்டவர் பார்வையில் நிலைத்திடுவாள்

யார்க்கும் எதுவும் அவள் மனம் வைத்தால் அள்ளிக் கொடுத்திடுவாள்

அஷ்ட ஐஸ்வர்யம் கொட்டி வழங்கி அன்புக்கு அகப்படுவாள்

(தாமரைப் பூவினில்)




# 92. எங்கும் உன் எழில்

எங்கும் உன் எழிலே - அம்மா
யாவும் உன் செயலே - அம்மா (எங்கும்)

கடல்தரும் அமுதே கலைநிறை நிலவே
புவியின் அசைவே பொருள் தரும் திருவே (எங்கும்)

நாளும் எங்களின் தேவைகள் நீயே
வாழ்வில் இன்பம் தரும் என் தாயே (எங்கும்)

செந்தா மரைவளர் நந்தா ஒளியே
திருமால் நெஞ்சில் தவழ் மென் கொடியே (எங்கும்)





# 93. திருமகள்

மஹாலக்ஷ்மி திருமால் மார்பில் உறை தேவி
மகிழ்ச்சியைத் தருபவளே - உலக
வளர்ச்சியை அருள்பவளே (மஹாலக்ஷ்மி)

நிலவுடன் பிறந்த நித்யகல் யாணியே
நினைத்ததை நிறைவேற்றும் நிகரற்ற பேரழகே
(மஹாலக்ஷ்மி)

கலா சொரூபிணி கமலமலர்த் திருவே
காஞ்சனையே கனியே கடல் தந்த கண்மணியே
உலா வரும்செல்வம் உன் கடைக்கண் ஒளியே
உயிர்க்குயிரே அமுதே கனகமணிக் கொடியே
(மஹாலக்ஷ்மி)

ஆதிலக்ஷ்மி எதற்கும் ஆதாரம் நீதானே
அஷ்டலக்ஷ்மி யாக அபயம்தரும் தேனே
ஜாதி முல்லை மணமே சந்தனத்தின் குணமே
சகலசௌ பாக்கியம் நல்கும் தங்கமே சங்கீதமே
(மஹாலக்ஷ்மி)



# 94. ஆனந்தம் உன் நாமம்

ஆனந்தம் உன் நாமம்.... அமிர்தம்
தேனினும் இனிதாகும்.... மதுரம் (ஆனந்தம்)

பக்தர்கள் நெஞ்சில் படர்ந்திடும் நாதம்
பாவலர் நாவினில் ஏழிசை கீதம் (ஆனந்தம்)

காரிருள் அகற்றிடும் சூரிய காந்தி
கருணைத் திருக்கரம் அருள்வது சாந்தி (ஆனந்தம்)

ஐஸ்வர்யம் யாவும் அளிப்பாய் லக்ஷ்மி
அகலா தென்னுடன் இருப்பாய் லக்ஷ்மி (ஆனந்தம்)

எத்தனை நான்தவம் நேர்எதிர் வந்தாய்
இதய கமலம் ஏந்திட நின்றாய் (ஆனந்தம்)





# 95. பாலையில் சோலை

நேரினில் நீ வருவாய் தாயே
நிம்மதியைத் தருவாய் தாயே

(வேகமாய்)

பாலையில் சோலைநீ பாசத்தை காட்டு
பூர்வ ஜென்மத்தின் வினைகளை ஒட்டு

(வேகமாய்)

சாந்தி உன் பார்வை தரும் அருள் போதம்
சரணா கதம் உன் தாமரைப் பாதம்

(வேகமாய்)

காம தேனு, சிந்தா மணி செல்வம்
யாவும் தருமே லக்ஷ்மி கடாட்சம்

(வேகமாய்)





# 96. மாலின் மாலை

மங்களம் சுப மங்களம்
மஹாலக்ஷ்மி..... (மங்களம்)

ஜமந் நாரணன் மார்பினில் ஆரம் நீ
திருப்பாற் கடல் தந்த திவ்ய ஸ்வரூபிணி (மங்களம்)

கரத்தினில் மாதுளை கதாயுதம்
பான பாத்திரம் கத்தி பொற்கலசம்
பட்டு பீதாம்பரம் சகல ஆபரணம்
தங்கத் தாமரையில் தாயின் தரிசனம்
அஷ்டலக்ஷ்மி என்றே அழைத்திடும் அநுக்ரஹம்
சகல செள பாக்யமும் தரும் தாள் சரணம்
(மங்களம்)





# 97. விழி மழை

திருவே......

உன் விழிகள் பொழியும் மழையில் நனைந்தேன்

இனி வரும் நாள் இனிமை - புது

வசந்தம் பசுமை

சுபமங்கல வீணையில் இன்னிசை கேட்டிடுதே

ஸ்ரீ மஹாலக்ஷ்மி (திருவே)

பூரண நிலவோடும் அமுதோடும் பிறந்தாய்

மாலவன் மார்பினிலே அணியாகத் திகழ்ந்தாய்

உலகம் உன தருளாணையின் வழியே சுழலும்

அழகின் துளி ஒளியாய் வரும் விரவிப் படரும்

உயிரின் நடனம் உனது கானம் தான்...

சுகம் நிரந்தரம் உந்தன் பதம் தரும்

(திருவே)

தேவரும் மூவரும் பாராட்டத் திகழ்ந்தாய்

செந்தா மரை மேலே வந்தே நீ அமர்ந்தாய்

தங்கம் உனதங்கம் எழில் பொங்கும் வதனம்

சிங்கம் உன தருகே வந்து கொஞ்சிக் குலவும்

எங்கும் எதிலும் உந்தன் ஆட்சிதான்.....

ஒரு கற்பகம் என் பொற்பதம்

(திருவே)



# 98. சீரும் பேரும்

சீரும் பேரும் செல்வம் யாவும்
வாரித் தந்திடு - அருள்
வழங்க வந்திடு - உந்தன்
மனம் கனிந்திடு (சீரும்)

நேரில் உன்னை காணும் பேறு
பூர்வ புண்ணியமே - லக்ஷ்மி
வாழும் வீடு ஆனந்தக் கூடம்
நாளும் மங்களமே
அன்பு பொங்குமே - மன
அமைதி நிலவுமே
உறவுகள் வளர்ந்திடும் சுகலயம்
கலைகளின் மண்டபம் (சீரும்)

நீரினில் தாமரைப் பூவினில் திருவடி
மறைந்ததை வெளிப்படுத்து - இடை
மேகலை அசைந்திட சிலம் பொலி முழங்கிட
நடந் தெனை நிலைப்படுத்து
உனது நாட்டியம் அது சகல பாக்கியம்
என்றும் என் இல்லத்தில் தங்கிடு
இதயத்தில் நின்றிடு (சீரும்)



# 99. கோடி மின்னல்

கருமேகம் திரண்டு வரும் கொடி மின்னல் கோடி
திருமாலும் நீயும் சேர்ந்த கோலமென்று சொல்லவோ
கொள்ளை அழகைச் சொல்லவோ
பொன்னூஞ்சலில் நீ ஆடுவாய்

போவதுவும் வருவதுவும் நின் செயலோ

போகாமல் என்னிடமே நீங்காமல் இருந்திடம்மா

தாயே தயைபுரி வேண்டுகிறேன் - என்

தாயே தயை புரி வேண்டுகிறேன் (கருமேகம்)

அண்ட சராசரம் யாவும்
ஆடி விளையாடும் மேடை
பந்துக ளாகவே கோளம்
பாவை உன் கைபட ஏங்கும்

உன் வரவால் சொர்க்கம் கூடவரும் - நல்ல

உறவுகள் ஆயிரம் தேடி வரும் (கருமேகம்)

எது வேண்டும் என்றாலும் கிடைக்கும்
எண்ணிய தெல்லாமே நடக்கும்
திருவே உன் திருப் பாதம்
புவிமேல் பட்டாலே போதும்

உன் கடைக் கண் பார்வை எனைக் காக்கும்

வரும் இடுக்கண் யாவும் பொடியாக்கும்

(கருமேகம்)

# 100. கொலு அமர்ந்தாய்

கொலுவீற் றிருக்க வருவாயே - எங்கள்
குடும்பம் வாழ அருள்வாயே
அழகின் நிறைவாய் திகழ்வாயே - ஸ்ரீ
மஹா லக்ஷ்மியே என் தாயே (கொலுவீற்றிருக்க)

மஞ்சள் நீரால் நீராட்டி
மங்கள ஆரத்தி உடன் காட்டி
சந்தனம் பால் தயிர் அபிஷேகம்
தங்க மேனியில் ஒளி வெள்ளம்
கங்கா நதியின் அலை துள்ளும் (கொலுவீற்றிருக்க)

சிவப்புப் பட்டுடை உடுத்திவிட்டு
சிம்மா சனத்தில் அமர்த்தி வைத்து
கருப்புப் பொட்டினைக் கன்னத்திலே
கண்படும் என்றே இட்டோமே - உன்
கால்படும் இடத்தை தொட்டோமே (கொலுவீற்றிருக்க)

விழியில் இரண்டு பொன் வண்டு
விளையா டிடவே அதைக் கண்டு
மொழிதடு மாறி மெய்சிலிர்த்தோம்
வழிகாட் டிடவே வா, அம்மா
புகழ் சேர்த் திடவே வா அம்மா (கொலுவீற்றிருக்க)

மாலை சூட்டி சீராட்டி
மந்திரம் சொல்லி பாராட்டி
ஊஞ்சலில் வைத்து தாலாட்டி
உள்ளம் நெகிழ்ந்தோம் வா, அம்மா
உலகம் காப்பது நீ அம்மா (கொலுவீற்றிருக்க)



# 101. ஆனந்தப் பண்

தாயின் பெயரை சொல்லச் சொல்ல
சந்தோஷம் மலரும் - ஸ்ரீ
தேவி அவளின் கருணைப் பார்வை
செல்வங்கள் குவியும் (தாயின்)

செம்பவள இதழ்திறந்து
முத்துக்களை அவள் உதிர்ப்பாள்
செங்கமலக் கரம் நீட்டி
ரத்தினத்தில் மலர் தொடுப்பாள்
சங்குக் கழுத்தசைந்தால்
சங்கநிதி பதுமநிதி
தங்க இடை அது நெளிந்தால்
மங்களங்கள் பொங்கி வரும் (தாயின்)

அம்மாவின் சந்நிதியில்
ஆனந்தப் பண்ணொலிக்கும்
அண்டங்கள் அத்தனையும்
அர்ச்சனைகள் செய்திருக்கும்
ஒரு கோடி தாரகைகள்
திருவடியை தரிசிக்கும்
ஒப்புவமை இல்லாத
அற்புதக் களஞ்சியமே (தாயின்)



# 102. பெயரே பெருமிதம்

நீ இருக்கும் இடம் எல்லாம் குதூஹலம் - உன்
பேர் சொல்லும் போதெல்லாம் பெருமிதம்
வாழ்வினிலே வளமெல்லாம் வழங்கிடுவாய் - என்றும்
வற்றாத பொய்கை என விளங்கிடுவாய்
(நீ இருக்கும்)

பாற்கடலின் அமிழ்தம் உந்தன் உடன் பிறப்பு - சகல
பாக்யங்கள் தருவதெல்லாம் நின் பொறுப்பு
சேர்ப்பதுவும் பிரிப்பதுவும் உன் விருப்பு - இந்த
ஜெகத்தையே மயக்குகின்ற புன் சிரிப்பு (நீ இருக்கும்)

நாளும் உன் கூட்டுறவு மனோஹரம் - மிக
நல்ல குணங்கள் எல்லாம் லக்ஷ்மி ஹரம்
காலை எழும் கதிர் ஒளி நின் தங்க நிறம் - ஒரு
களைப் பில்லை கவலை இல்லை உந்தன் வரம்
(நீ இருக்கும்)

அழகெல்லாம் உந்தனிடம் அடைக்கலம் - நீ
அருகிருந்தால் அதுதான் படைக்கலம்
மஹாலக்ஷ்மி உன் தயவை வேண்டுகிறேன் - இனி
மற்றதை நான் எளிதாகத் தாண்டுகிறேன்
(நீ யிருக்கும்)



# 103. கமலமயம்

திருமுகம் கமலம் செவ்வாய் கமலம்
மலர்விழி கமலம் அருணோதயம்
இருகரம் கமலம் இருப்பிடம் கமலம்
லக்ஷ்மி என்றாலே பத்ம மயம் (திருமுகம்)

அழகின் சிகரம் ஆனந்த சாகரம்
அம்மா எங்கள் நமஸ்காரம்
அபயம் வரதம் அருளும் கோலம்
புனிதம் பூரண சந்த்ரோதயம் (திருமுகம்)

மங்களம் எதற்கும் மங்களம் ஊட்டும்
மங்களம் திவ்ய சுபமங்களம்
சிந்தா மணிஉன் கருணா கடாக்ஷம்
தந்திடும் சகல சௌபாக்யம் (திருமுகம்)





# 104. தங்க மழை பொழிக

மங்களம் எல்லாம் பெற
மஹாலக்ஷ்மி அம்மா நீ
தங்கு தடையின்றி வரவேண்டும்
சகல சம்பத்தையும் தரவேண்டும்
எங்கள் இல்லம் செழிக்க
இன்பம் எல்லாம் கொழிக்க
தங்கமழை இங்கு பெய்ய வேண்டும்
தாகம் தீர்ந்து நாங்கள் உய்ய வேண்டும்
(மங்களம் எல்லாம் பெற)

அங்கிங் கெனாதபடி எங்கும் நிறைந்தவளே
அஷ்ட லக்ஷ்மியாக வளர்பவளே
சிங்காரப் புன்னகையால் ஜகமெலாம் காப்பவளே
திருவிளக்கில் சுடர்வபவளே திருமகளே – என்றும்
தித்தித் திருப்பவளே அலைமகளே
(மங்களம் எல்லாம் பெற)

திருமால் வலமார்பில் அடையாள மாய் நின்றாய்
வடிவே வனப்பே பல்லாண்டு
அனைவரும் உன்பாதம் சரணாகதி அம்மா
ஐஸ்வர்யமே அமுதே பல்லாண்டு – பல்
ஆயிரம் ஆயிரம் பல்லாண்டு
(மங்களம் எல்லாம் பெற)



# 105. ஸ்ரீ

தர்மமும் மோக்ஷமும் தருகின்ற ப்ரம்மஸ்ரீ
அர்த்தமும் காமமும் அருள்கின்ற ராஜஸ்ரீ
கல்வியும் கலைகளும் கனியச் செய் வித்யாஸ்ரீ
செல்லும் இடமெலாம் சேர்த்திடுக வெற்றி (தர்மமும்)

செல்வங்கள் நல்கிடும் ஸ்ரீ சம்பத் கௌரி
மாங்கல்ய பலம் வழங்கும் மங்கள கௌரி
சக்தியைக் கொடுத்திடும் கஜகௌரி அருள்புரி
சந்தான பாக்யம் தழைக்கட்டும் வருத்த கௌரி
(தர்மமும்)

திருமால் கருணைக்கு துணைபுரி துளசி கௌரி
சிவநாமம் ஜபிக்கின்றோம் கேதார கௌரி
அழகு பொலியச்செய் லாவண்ய கௌரி
ஐஸ்வர்யம் அளிப்பவளே சௌபாக்ய கௌரி
(தர்மமும்)

புனிதம் கூட்டுகின்ற பதரி கௌரி
பொற்பாதம் காட்டுகின்ற ரம்பா கௌரி
யமபயம் ஓட்டுகின்ற சாவித்ரி கௌரி
இசை மலர் தொடுப்பாயே வசந்த கௌரி (தர்மமும்)



# 106. கமல வல்லி

கைகள் தாமரைப்பூ
கைகளில் தாமரைப்பூ
மெய்யும் தாமரைப்பூ
விழிகளும் தாமரைப்பூ

பத்மப்ரியே பத்மினி பத்மஹஸ்தே பத்மாலயே பத்மதலாயதாக்ஷி
விச்வப்ரியே விஷ்ணு மனோனுகூலே த்வத்பாத பத்மம் மயி ஸந்நிதந்ஸ்வ

உள்ளம் தாமரைப்பூ - உன்
உலகம் தாமரைப்பூ
வெள்ளைச் சிரிப்பதுவும்
விரிந்த தாமரைப்பூ

பத்மானனே பத்மோரு பத்மாக்ஷி பத்மஸம்பவே
த்வம்மாம் பஜஸ்வ பத்மாக்ஷி யேந ஸௌக்யம் லபாம் யஹம்

கள்ளம் அற்றமுகம்
அதுவும் தாமரைப்பூ
செல்வத் திருமகள் நீ
அமர்ந்ததும் தாமரைப் பூ

மஹா தேவ்யைச வித்மேஹ விஷ்ணு பதன்யை சதீமஹி
தந்நோ லக்ஷ்மி : ப்ரசோதயாத்

ஆயிரம் விண்பூக்கள் நீயோ நிலவுப்பூ
தாயே வேண்டுகிறேன் - உன் - தயவாம் அன்புப் பூ

ஸர்வ மங்கல்ய மாங்கல்யே சிவே ஸர்வார்த்த ஸாதிகே
சரண்யே த்ரயம்பகே தேவி நாராயணி நமோஸ்துதே



# 107. பதினாறு பேறுகள் தருபவள்

பதினாறு பேறுகளும் தரவல்ல தனிசக்தி
உனக்குத்தான் உண்டு லக்ஷ்மி - நின்
பார்வைக்கு ஈடில்லை அழியாத ஐஸ்வர்யம்
மழையாகப் பொழிகின்ற லக்ஷ்மி

லக்ஷ்மி ..... ஸ்ரீ ..... மஹாலக்ஷ்மி

(பதினாறு)

தரவேண்டும் என நினைத்துத் தலை அசைத்தால் தரித்திரனும்
குபேரனுக் கீடாவான் உண்மை - நீ
சற்றே முகம் சுளித்தால் தலைமுறைக்கு வைத்த சொத்து
உப்பாகக் கரைவதுவும் உண்மை

லக்ஷ்மி ..... ஸ்ரீ ..... மஹாலக்ஷ்மி

(பதினாறு)

திருமாலின் திருமார்பில் அடையாளமாய் அமர்ந்து
பரிபாலனம் செய்யும் திருவே - நீ
செந்தாமரைச் செண்டால் சீராகத் தட்டி எனை
நன்றாக்கி நலம் அருளும் தாயே

லக்ஷ்மி ..... ஸ்ரீ ..... மஹாலக்ஷ்மி

(பதினாறு)



# 108. மலரினும்மெல்லியள்

மலரினும் மெல்லியள் என்பத னாலோ
மலர்மேல் நிற்கின்றாய் - தாமரை
மலர் மேல் நிற்கின்றாய்
இதயம் உள்ளவள் என்பதனாலோ
மார்பில் உறைகின்றாய் - மாலவன்
மார்பில் உறைகின்றாய்

மஹாலக்ஷ்மி நீ (மலரினும்)

நிறைகுணம் அமைந்தவள் என்பதனாலோ
கடலில் தோன்றி வந்தாய் - திருப்பாற்
கடலில் தோன்றி வந்தாய்
நிம்மதி தருபவள் என்பத னாலோ
புன்னகை புரிகின்றாய் - என்றும்
புன்னகை புரிகின்றாய்

மஹாலக்ஷ்மி நீ (மலரினும்)

அஞ்சா நெஞ்சம் அளிப்பவள் என்றோ
யானைகள் சூழநின்றாய் - இரு
யானைகள் சூழநின்றாய்
அஷ்ட ஐஸ்வர்யம் கொட்டித் தருவதற்கோ
எட்டுருவும் கொண்டாய் - அஷ்ட
லக்ஷ்மி என வந்தாய்

மஹாலக்ஷ்மி நீ (மலரினும்)



# 109. தரிசனம்தா

ஏன் இத் தாமதம் மௌனமே
என் தாயின் புன்னகை வேண்டுமே

தாமரை..... பாதமே..... தஞ்சமே
ஏழையைக் காக்கவே வேண்டுமே

(ஏன் இத் தாமதம்)

உனக்கொரு குறையில்லை மகராணியே
எனக் கென ஏதும் இல்லை அறிவாயே நீ
கல்லையும் கனியாக்கும் உன் பார்வையே
கடைக்கண் ஒளி காட்டு அது போதுமே

(ஏன் இத் தாமதம்)

திருமகள் நீயின்றி செயல் ஏதம்மா
பிழைகளை மன்னித்து அருள்வாயம்மா
வாடிடும் பயிருக்கு மழை தேடினேன்
நாடினேன் உனைத்தானே கதி நீயம்மா

(ஏன் இத் தாமதம்)



# 110. ஸ்ரீதேவி

லக்ஷ்மி வருகின்ற நேரம்
லக்ஷ தீப அலங்காரம்
அஷ்ட ஐஸ்வர்யம் எங்கும்
கொட்டிக் கிடக்கின்ற கோலம் (லக்ஷ்மி)

தங்கம் பூப்பூத்த காட்சி - அவள்
அங்கம் அணி மணியின் மாட்சி
சிங்கம் உறுமும் ஒலி கேட்கும் - இளந்
தென்றல் வரவேற்று வாழ்த்தும் (லக்ஷ்மி)

காலம் வசந்தமாய் மாறும் - அவள்
காலின் சிலம் போசை கீதம்
வேதம் போற்றுகிற செல்வம் - இதோ
விரைந்து வருகின்றாள் இல்லம் (லக்ஷ்மி)

இனிய நாதசுரம் முழங்க - நாம்
விரும்பிக் கேட்டதெல்லாம் வழங்க
கமல மலர் மாடம் விளங்க - அந்தக்
கமல மலர் வந்து அமர்க (லக்ஷ்மி)

லக்ஷ்மி வந்துவிட்ட நேரம்
லக்ஷ தீப அலங்காரம்
அஷ்ட ஐஸ்வர்யம் எங்கும்
கொட்டிக் கிடக்கின்ற கோலம் (லக்ஷ்மி)

# 111. தயாசாகரம்

உன் தயவால் தான் உலகம் வாழ்வது
அன்னையே திருமகளே
கண்ணுக்கு இமைபோல் காப்பது நின் அருள்
கருணைப் பெருங்கடலே - அம்மா (உன் தயவால் தான்)

பூவினில் நின்றாடும் பூவே - புது
பொலிவினை தருவாயே தாயே
அமுதுடன் பிறந்தாயே - பேர்
அன்பினில் சிறந்தாயே - என்

நெஞ்சினில் நிறைந்தாயே - அம்மா! (அன் தயவால் தான்)

வாசலிலே கோலமிட்டே
நான் உன்னை வரவேற்பேன்
வடிவழகே வளை குலுங்க
நடை பயின்றே நீ வருக
பொன் தருக புகழ் தருக
இன்னிசை யால் உனைப்பாடி இன்பமுற அருள் புரிக

அபய நாயகி அம்புஜ வல்லி
ஆசிகள் தந்திடுக
அனு தினம் நினது சரண கமலங்கள்
மனதினில் தங்கிடுக

எடுத்த காரியம் யாவினும் வெற்றி
என்றே சொல்லிடுக
இனி நான் உந்தன் அடைக்கலம் தாயே
லக்ஷ்மி வந்திடுக
லக்ஷ்மி வந்திடுக
லக்ஷ்மி வந்திடுக - மஹா
லக்ஷ்மி வந்திடுக



# 112. தாமரையில் தாமரை

**விருத்தம் :**

நெஞ்சின் அரவிந்தம்
நீதான் என்வசந்தம்
சந்தனத்தின் சுகந்தம்
தாய்உன் திருப்பாதம்

**பாடல் :**

தாமரை மலருக்குள்
தாமரை மலர்களை
ஸ்பரிஸிக்கக் கூடாதா - நான்
ஸ்பரிஸிக்கக் கூடாதா
தண்ணீர் தடாகத்தில்
தங்கத் தடாகத்தை
தரிசிக்கக் கூடாதா - நான்
தரிசிக்கக் கூடாதா

தாயே தனலக்ஷ்மி - அருள்வாய் மகாலக்ஷ்மி (தாமரை)

ஆயிரம் சூரிய ஒளி வந்து மின்னிடும்
அன்பு முகம் எங்கே - உன்
அன்பு முகம் எங்கே - அதை
காண என் கண்ணுக்கு தனி ஒளி தந்திடு
பேரின்பம் தான் இங்கே - அம்மா
பேரின்பம் தான் இங்கே

தாயே தனலக்ஷ்மி - அருள்வாய் மகாலக்ஷ்மி (தாமரை)

நெகிழ்ந்திடும் நீரில் நீ நிற்கின்ற காட்சியை
என் நெஞ்சுக்குத் தந்துவிடு
நெஞ்சுக்குத் தந்துவிடு - உன்
நீல விழிப் பார்வை கால முழுதும் காண
கண்ணுக்குள் வந்து விடு
என் கண்ணுக்குள் வந்துவிடு
தாயே தனலக்ஷ்மி - அருள்வாயே மஹாலக்ஷ்மி (தாமரை)

சந்திர னோடும் அமு தோடும் பிறந்த
சுந்தரச் சுடர் விளக்கே - நெஞ்சில்
வந்திடு மணி விளக்கே
இந்திரை என்னும் சண்பக வனமே
எந்தன் குல விளக்கே - அம்மா
எந்தன் குல விளக்கே
தாயே தனலக்ஷ்மி - அருள்வாயே மஹாலக்ஷ்மி (தாமரை)





# 113. லக்ஷ்மி வாழிடம்

பால் தரும் பசுவில்
பங்கஜ மலரில்
யானையின் மத்தகம் அதனில்
மாலவன் மார்பில்
வில்வ தளத்தில்
பத்தினி நெற்றி வகிட்டில்
சாமந்திப் பூவில்
வாழ்ந்திடும் தேவி
தனலக்ஷ்மி தாயே வருக
ஸ்ரீ ரங்க நாயகி
திருவிழிப் பார்வை

செல்வங்கள் அனைத்தையும் தருக - வருக (பால்தரும்)

பழகிடும் கிளியே நவமணி ஒளியே அழகுக்கு அழகே வருக
கருணையின் வடிவே கலைகளின் முடிவே வைகறை
விடிவேவருக
நீயின்றி உலகினில் வாழ்வுக்குப் பொருளில்லை சோர்வுகள்
அகற்றிடவருக
தேவைகள் யாவையும் வாரி வழங்கிடும் சிந்தாமணியே வருக வருக
(பால்தரும்)

ஸ்ரீம் எனும் மந்திரம் ஓதிடும் உள்ளம் சீர்பெறச் செய்வாய் வருக
நாமகள் பாடிடும் கானங்கள் கேட்டே நலங்கள் அருவாய் வருக
தேனினும் இனியஉன் செவ்விதழ் விரிய பூஉதிர் புன்னகை புரிக
திவ்யம் பவ்யம் மோஹனம் மதுரம் திருமுகம் காட்ட எழுக வருக
(பால்தரும்)



# 114. கோமளவல்லி

கோமளம் .......
ஸ்யாமள வண்ணனின் மேனியில் உந்தன்
குங்குமம்
தரும் மங்களம் .....                    (கோமளம்)

மோஹனம் ......
உந்தன் பார்வையில் பட்டிடும் யாவையும் பெற்றிடும்
ஸாபல்யம்
ஜன்ம ஸாபல்யம் .....                    (மோஹனம்)

ஆனந்தம் ......
அதி அற்புதமான உன் பொற்பதம் கண்டவர்
அநுபவம்
உன் அநுக்ரஹம் .....                    (ஆனந்தம்)

சீர்தனம் ......
உன் சேவையில் களிப்பவர் யாவரும் பெறுவது
பாக்கியம்
சௌபாக்கியம் .....                    (சீர்தனம்)

திருமகள் நீ செயும் உபகாரம்
நன்றியுடன் எந்தன் நமஸ்காரம்
நமஸ்காரம் லக்ஷ்மி நமஸ்காரம்
நமஸ்காரம் அம்மா நமஸ்காரம்

# 115. சந்தானலக்ஷ்மி

சந்தானம் தந்திடு
சந்ததி காத்திடு
தாயெனும் பெருமைக்கு
தகுதியை சேர்த்திடு
தயவு காட்டிடு (சந்தானம்)

கனிவேண்டும் என்றேதான் விதையை ஊன்னுகின்றார்
வழிவழி குலம்தழைக்க ப்ரார்த்தனை செய்வார்
பாலூட்டி சீராட்டி பாராட்டு கின்றார்
ஆராரோ ஆரிரரோ தாலாட்டு கின்றார்

பிள்ளைகள் இல்லாத வீடொரு வீடா
செல்வம் பலகோடி சேர்த்தென்ன லாபம்
மக்களின் மழலைமொழி கேளாத போது
மலடியை மதிப்பாரோ மகிழ்ச்சியும் ஏது (சந்தானம்)

கூந்தலே மணிமுடியாய் கொண்டை முடித்தாய்
அபயம் வரதமொடு கங்கணம் தரித்தாய்
பூரண கும்பமதை ஏந்தியே சிரித்தாய்
முத்திழைத்த பட்டு உறை கத்தியை பிடித்தாய்

இருபுறமும் தோழியர்கள் சாமரம் வீச
விளக்கொளியில் நின்விழிகள் வேடிக்கை பேச
முருகனை நிகர்த்த ஒரு குழந்தையைத் தாங்கி
வரந்தரவே வந்தாயே சந்தான லக்ஷ்மி (சந்தானம்)

வெண்தாமரை வீற்றிருக்கும் வேதவல்லி
விரிமார்பில் கச்சணிந்த சுந்தரவல்லி

அண்டமெலாம் ஆளுகின்ற ஆனந்தவல்லி
செங்கோலால் காப்பாற்றும் மங்களவல்லி

யோகமெலாம் அளிப்பவளே யோகவல்லி
போலமெலாம் புகட்டிடும் ஓர் புனிதவல்லி
யாகத்தில் வருபவளே ஹம்ஸவல்லி
அறம்வளர்க்கும் நாயகியே அமிர்தவல்லி (சந்தானம்)






# 116. தான்யலக்ஷ்மி

இந்த பூமித் தாயின் புன்னகை உன்னாலே
பூப்பதும் காய்ப்பதுவும் - உன்
பொற்கரம் அதனாலே - நான்
நிற்பதும் அதனாலே
பச்சை வயல்வெளியில் நெற்கதிர் மணியினில்
பாலை நீ பொழிவாய் - பல
தானியங்கள் தருவாய் - தான்ய
லக்ஷ்மி நீ வருவாய் (இந்த பூமி)

நவமணி மகுடம் வலக்கரம் பதுமம்
கரும்பை ஏந்துகிறாய் - சுவை
விருந்தை வழங்குகிறாய் - எந்
நாளும் வெண்மை பட்டுடை உடுப்பாய்
சக்தியை நீ கொடுப்பாய் - மனச்
சாந்தியை நீ அளிப்பாய் - என்றும்
சந்தோஷம் அளிப்பாய் (இந்த பூமி)

குலை வாழையும் கொத்து மஞ்சளும்
குனிந்தே வரவேற்கும் - உனை
புகழ்ந்தே பாராட்டும் - உன்
கோலப் பாதம் பதிகவே நாளும்
குடிசையும் மாறிவிடும் - ஒரு
கோபுரம் ஆகிவிடும - எங்கள்
தாகம் தீர்ந்துவிடும் (இந்த பூமி)

மலையும் நதியும் வளங்கள் கொழிக்கும்
கடலும் கவிபாடும் - நல்ல
காவியம் உருவாகும் - உன்
வளையல் ஒலியில் கலைகள் வளரும்
வழிகள் பிறந்துவிடும் - எங்கள்
வாழ்வு மலர்ந்துவிடும் - அந்த
வானம் இங்குவரும் (இந்த பூமி)



# 117. வீரலக்ஷ்மி

பொன்மய மானது உன்திரு மேனி
கண்கொளாக் காட்சி கண்டேன் - நான்
கண்கொளாக் காட்சி கண்டேன்
தங்கத்தில் சேலை வெற்றி மாலை
சிங்கத்தில் ஏறி வந்தாய்
ஜெயம் ஜெயம் என்றே மொழிந்தாய்
ஜெய வீரலக்ஷ்மி நீ வந்தாய்

எட்டுத் திக்கிலும் கொட்டுது முரசம்
வெற்றித் திருவே வருக வருகே (பொன் மயமானது)

சங்கு சக்ரம் வில் அம்பு சூலம்
கபாலம் ஏந்தும கரங்கள்
அபயம் வரதம் அருள்தரும் கோலம்
பனைமரம் ஒன்பது சூழும்
எதிரிகள் சேனை தறிகெட்டு ஓடும்
இன்னல யாவும் தீரும்
குதிரைகள் காலடி ஓசை அதிரும்
பகையோ தூள் தூளாகும்

எட்டுத்திக்கிலும் கொட்டுது முரசம்
வெற்றித் திருவே வருக வருகவே (பொன் மயமானது)

உற்றார் உறவினர் உன்னை அன்றி
மற்றோர் யார் தாயே
கற்றது எல்லாம் கைம்மண் அளவு
பெற்றதெல் லாமே பொய்யே

பெற்றோர் பலரே பிறவிகள் பலவே
உற்றேன் உனக்கே அடிமை
பற்றிய பின்னே மற்றெதும் வேண்டேன்
தைரியம் எல்லாம் தருமே

எட்டுத் திக்கிலும் கொட்டுது முரசம்
வெற்றித் திருவே வருகவே (பொன் மயமானது)





# 118. விஜயலக்ஷ்மி

வதனம் அமுதம் புனிதம் மதுரம் - எந்த
விருப்பும் வெறுப்பும் வெளிப்படாது சிரிக்கிறாய்
சபையினிலே புகழ்மாலை தருபவளே
சங்கநிதி பதுமநிதி சந்நிதி

(வதனம்)

அலைபோல சுருள்கூந்தல் அழகுதான் - அதில்
மணிமகுடம் ஒளிவீசும் பொலிவுதான்
அணிமனிகள் அசைந்தாட வருகிறாய் - உன்
சிலம்பொலியால் நலங்களெலாம் தருகிறாய்

சிங்கத்தின் கர்ஜனையில்
தீயதெலாம் ஓடிவிடும்

ஜெகமாளும் மகராணி வருவாய்நீ வருவாய்நீ

(வதனம்)

என்கரங்கள் எட்டுவகை ஆயுதங்கள்
எண்ணியதும் தோன்றிடுக விஜயலக்ஷ்மி
சுடர்கின்ற வாளோடு கேடயமும்
சுழல்கின்ற சக்கரமும் அங்குசமும்

வெண்சங்கும் பாசமதும் ஏந்திவந்து
அபயவரம் அளிக்கின்ற அலைமகளே
வாழிய வாழிய வாழியவே

(வதனம்)



# 119. மஹாலக்ஷ்மி

அன்பு மலரால் ஆராதனை செய்தேன்
அன்னை உன்னை சரணடைந்தேன்
எந்தன் இதயத் தாமரை மலரிலே
தங்கி அருளவே வேண்டுகின்றேன் (அன்பு)

யானைகள் இரண்டு அர்ச்சனை செய்கின்ற
அழகினில் நானும் ஆழ்கின்றேன்
அறம் பொருள் இன்பம் வீடெனும் நான்கும்
கரங்கள் கமலங்கள் காண்கின்றேன் (அன்பு)

வெள்ளை உடையும் உன் விழியின் அருள்நோக்கும்
கொள்ளை கொளச் செய்யும் மஹாலக்ஷ்மி
கல்வி புகழ் ஆற்றல் கனம் தனம் எல்லாமே
செல்வி நீ தரும்பிச்சை மஹாலக்ஷ்மி (அன்பு)





# 120. தனலக்ஷ்மி

**விருத்தம்:**

எல்லாம் செயல் கூடும்
இன்பமே நாளும் நாளும்
தனலக்ஷ்மி தயவினாலே
சரித்திரம் படைக்கலாமே

**பாடல்:**

தாயினும் இனியவளே தண்ணருள் பொழிபவளே
நீயின்றி வாழ்வேது லக்ஷ்மி - தனலக்ஷ்மி
வாழ்வதில் பொருள்உண்டு என்றால் பொருள் வேண்டும்
வழங்குவாய் உடன் வழங்குவாய்

(தாயினும்)

ஸ்வர்ணம் உன்மேனி நவரத்ன மனிமகுடம்
சுகமாய் வீற்றிருக்கும் சுந்தரி
பூரண கும்பத்தை ஏந்திய பொற்கொடி
நீல விழிகாட்டி ஆதரி - எனை ஆதரி

(தாயினும்)

தாமரை தாம்பூலம் சங்கு சக்கரங்கள்
வில் அம்பு கண்டிகை கைகளிலே
அணிகளின் ஊர்கோலம் அசையும் திருமார்பு
மணிவண்ணன் துணைவியே நீ மனம் இரங்கு - உன்
மனம் இரங்கு

(தாயினும்)



# 121. ஸ்ரீ விஜயலட்சுமி

வெற்றி எட்டுத் திக்கும் எட்ட விஜயலக்ஷ்மி வருகிறாள்
எட்டுக் கைகள் அபயம் வரதம்அருளை வாரித் தருகிறாள்
கத்தி பாசம் சக்ரம் ஏந்தி சங்குமுழங்கி வருகிறாள்
அங்குசம் கேடயம் ஆயதக்கோலம் அன்னை பவனி வருகிறாள்
(வெற்றி)

சக்ர வாரம் விரதம் இருக்கும் பெண்கள் முகத்தில் தெரிகிறாள்
சுமங்கலி பூஜை செய்திடுவோரின் மனையைத் தேடி வருகிறாள்
உத்தம பத்தினி வாழும் வீட்டில் எப்போதுமே இருக்கிறாள்
சத்தியம் தவறா மாந்தருக்கு நித்தமும் கை கொடுக்கிறாள்
(வெற்றி)

ஸ்ரீதேவி இவளை வேண்டதேரில் ஏறி வருகிறாள்
போர்முகத்தில் நேரில் நின்று வீரம் காட்ட வருகிறாள்
விஜயலக்ஷ்மி கால்சலங்கை ஜெயம் ஜெயம் எனச் சொல்லுமே
வெற்றிமகளின் ராஜரூபம் நெஞ்சைக் கொள்ளை கொள்ளுமே
(வெற்றி)

கார்கூந்தலை வாரிமுடித்தாள் மாணிக்க மகுடம் தரித்தாள்
கோமளமேனி ஸ்யாமள வண்ணம் கொள்ளை அழகுகொழித்தாள்
சிம்மாசனக்கோலம் தேவி செங்கோல் தனைப் பிடித்தாள்
அன்னப் பறவை சிறகை விரிக்க அமர்ந்து மெல்லச் சிரித்தாள்
(வெற்றி)



# 122. தான்யலக்ஷ்மி

வாழைப் பழக்குலை
நெற்கதிர் தானியம்
தேனூறும் செங்கரும்பு
தாமரை மலரோடு
அமிர்த திருக்கலசம்
தேவியின் கரங்களிலே
சோலைகள் சூழ்ந்திடும்
வயல்வெளி வரப்பிலே
ஓடோடி வருகின்றாள்
தாகத்தைத் தீர்த்திடும்
சாகம்பரி என்பாள்

தானிய லட்சுமியே - நம்மை
காப்பாற்றும் உத்தமியே (வாழை)

பின்னல் சடையிட்ட
தலையில் மணி மகுடம்
மின்னல் உதிர்த்திடுதே
அன்னை திருமேனி
முல்லை மலர்ச்சோலை
வண்ணம் காட்டிடுதே
உண்ணென்று சொல்கிறாள்
ஊட்டியும் விடுகிறாள்

அம்மா தான்யலக்ஷ்மி

கண்கண்ட தெய்வம் அவள்

கைகண்ட செல்வம் அவள்

களைப்பாற்ற வருகின்றாள் - நம்மை

கடைத்தேற்ற வருகின்றாள்

தானிய லட்சுமியே - நமைக் காப்பாற்றும் உத்தமியே

(வாழை)

வானம் மழை பொழிய

வற்றா வளம் நிறைய

கானம் பாடுகிறாள்

தானம் தவம் பெருக

தன்மானம் நிலை நாட்ட

நான் உள்ளேன் என்கின்றாள்

பாணம் தொடுத்திடுவாள்

பசியைத் தடுத்திடுவாள்

யானைமேல் அமர்ந்திடுவாள்

காம தேனு அவள்

காலடி பட்ட இடம்

பால் பொங்கி வழிந்திடுதே

பரவச மாகிடுதே

தானியலட்சுமியே - எங்கள்

தானியலட்சுமியே.....



# வாணி - வா நீ





# 123. உலகம் உன் காவியம்

நீ புனைந்த காவியம் இந்த உலகம் - இதில் தான்
எத்தனை கற்பனைகள் இழையும் சுகம் குழையும் - அம்மா
(நீ புனைந்த)

ஆயிரம் கதை மாந்தர் மேடைக்கு வருவார்கள்
ஆடும்வரை ஆடிவிட்டு ஓடித்தான் போவார்கள்
தாய் மீட்டும் வீணைமட்டும் ஓய்வதில்லை எந்நாளும்
ஏழிசையை வடிப்பவளே வாணி சரஸ்வதியே
(நீ புனைந்த)

கை உருட்டும் ஜபமாலை கோளங்கள் சுழல்கிறது
கால் தட்டும் சலங்கை ஒலி காலங்கள் உருள்கிறது
கண்சிமிட்டி நீ சிரித்தால் கலை மழை பொழிகிறது
மண்ணெல்லாம் மணக்கிறது மனம் ஒன்றி லயிக்கிறது
(நீ புனைந்த)





# 124. வாணி - வா - நீ

வாணி - வா நீ
வாக்கினிலே என் வாக்கினிலே
தேனினை வார்த்திடு பாட்டினிலே - என்
பாட்டினிலே - கலை (வாணி - வா நீ)

கள்ளம் இல்லா உள்ளம் வெள்ளை என்பார் - அதை
சொல்லவோ வெள்ளை உடை உடுத்தாய்
சொல்லினில் உறுதி வேண்டுமென்றோ - நீ
கல்லின்மேல் அமர்ந்தே காட்சிதந்தாய்
சந்தங்கள் எல்லாம் மந்திர மாகவோ
ஜபமாலை அதை உருட்டுகிறாய்
என்றென்றும் நிலைப்பது இலக்கியம் என்றோ
ஏடுகள் கையினில் ஏந்து கின்றாய் (வாணி - வா நீ)

வாழ்வினில் இனிமை வேண்டுமென்றோ - நீ
வீணையில் இன்னிசை மீட்டுகின்றாய்
காலங்கள் மாறினும் கலை இருக்கும் - எனக்
கால்மேல் காலிட்டு வீற்றிருப்பாய்
சரஸ்வதித் தாயே சாஸ்வதம் நீயே
புகழெனும் மாலை சூட்டிடுவாய்
அரசரும் போற்றும் அருகதை தருவாய்
நாளும்என் கானம் கேட்டிடுவாய் (வாணி - வா நீ)



# 125. உறவுகள்

எனக்கென நீயும்
உனக்கென நானும்
ஒருவருக் கொருவர்
உறவுகள் ஆனோம்
மனத்தினில் நின்றாய்
வாக்கினில் வந்தாய்
இனித்திடும் பாடல்
இசைத்திடச் செய்தாய்
வாணி கலை வாணி (எனக்கென)

இலக்கணம் அறியேன்
இலக்கியம் புரியேன்
விளக்கினும் தெளியேன்
விந்தை வந்தாய்
கலக்கம் தீர்த்தாய்
கருத்துக்கள் கோத்தாய்
நிலைக்கும் கவிதைகள்
நித்தமும் சேர்த்தாய்
வாணி கலை வாணி (எனக்கென)

உறக்கம் நீக்கி உணர்வினைத் தொடுவாய்
உடனே எழுதென ஆணை இடுவாய்
கலைமகள் கட்டளை சிரமேற் கொண்டேன்
காலம் முழுதும் உன் பாதம் பணிந்தேன்
வாணி கலை வாணி (எனக்கென)



# 126. சொந்தமும் பந்தமும்

படைப்பவன் நாவினில்
இருப்பவள் என்பதால்
எனக்கும் அவள் சொந்தம்
பலப்பல யுகங்கள்
எனக்கும் அவளுக்கும்
இடையறாத பந்தம்
அவளின்றி என்றா அசைந்திடுமோ
இசையின் முழக்கம் தொடர்ந்திடுமோ (படைப்பவன்)

சரஸ்வதி தேவியின் மகத்துவம் கவித்துவம்
சரித்திரம் என்னை மறக்காது
இருப்பவன் இல்லான் எல்லோரும் சமத்துவம்
விருப்புடன் போற்ற மறுக்காது
சபைகளின் நடுவில் எனை முன் நிறுத்தி
புகழுன் சால்வை போர்த்துகிறாள்
சாகாமல் வாழும் தத்துவம் உணர்த்தி
நாளும் நாளும் வாழ்த்துகிறாள் (படைப்பவன்)

ஞானக் கிண்ணம் ஏந்திய வண்ணம்
வாணி என்னிடம் வருகின்றாள்
வாய்திற என்றே பாலை ஊட்டி
வற்றாக் கவிதை தருகின்றாள்
பாடெனச் சொன்னால் பாடுகிறேன் அவள்
ஆடெனச் சொன்னால் ஆடுகிறேன்
நேருக்கு நேரே பேசிடும் தாயின்
கூடவே தானும் ஓடுகிறேன் (படைப்பவன்)



# 127. நாற்கவி நல்குபவள்

வெள்ளைத் தா..... மரையில் வீற்றிருக்கும் தேவிஎன்
உள்ளத் தாமரைக்கும் வாராய் - அதில்
கள்ளம் இருந்தாலும் உன் காலடி பட்டவுடன்
பிள்ளைக் குணமாக மாறிடும் பாராய் (வெள்ளை)

எல்லையில்லா இயற்கை அழகுகள் அத்தனையும்
சொல்லில் வடிக்கும் திறம் தாராய்
அல்லும் பகலும் உந்தன் அருள்விழி மலர்காட்டி
அஞ்சேல் என்றே வந்து கூறாய் (வெள்ளை)

வில்லை வளைத்தவுடன் அம்பு புறப்படல் போல்
வேகக் கவிதை பல வேண்டும்
முல்லை மணம் அதனை தென்றல் சுமப்பதுபோல்
மோகக் கவிதைகளும் வேண்டும்
சொல்ல நினைத்தவுடன் துள்ளும் அருவியைப் போல்
தொடரும் ஆசுகவி வேண்டும்
நல்ல விளக்கம் தரும் வித்தாரம் சித்திரம்
மதுரகவி யாக வேண்டும்

**முடுகு**

தெளிந்த சொற்களை
தேர்ந்தெடுக்க உன்
அன்னம் அதனை அனுப்பு
தித்திக் கும்இசை
பண்கள் தொடுக்க
தேன்குரல் குயிலை அனுப்பு
மயிலின் நடனம்

கவிதைச் சந்தம்
தரவே இங்கு வரட்டும்
இயலிசை நாடகம்
மூன்றும் சேர்ந்து
இன்பக் காவியம் தரட்டும்

சரஸ்வதி - தாயே - சரஸ்வதி





# 128. கவிகளின் தாய்

ராக வேந்த்ர ஞானியின் கையில் யாழைத் தந்தவள் நீ
கம்பன் என்னும் கவி மன்னனுக்கு சந்தம் தந்தவள் நீ
மாடுகள் மேய்த்தவனை காளி தாசனாக்கி
மாளிகை அமைத்தவள் நீ
மூகனை கவியாக்கி காமாட்சி அழகினை
பாடச் செய்தவள் நீ
வாணி கலை வாணி - என்
வாக்கில் வரு வாய்நீ (ராகவேந்த்ர)

அபிராமி பட்டரின் நாவினிலே நின்றே
அந்தாதி அளித்தவள் நீ
அமாவாசை இருள் அதனை நிலவாய் மாற்றி
அற்புதம் படைத்தவள் நீ
குமர குருபரரை சபையினிலே அமர்த்தி
அமரகவி ஆக்கினவள் நீ
திருவள் ளுவனுக்கு பொற்றாமரை மலர்த்தி
மரியாதை செய்தவள் நீ
வாணி கலை வாணி - என்
வாக்கில் வரு வாய்நீ (ராகவேந்த்ர)

ஆடித் திரிந்த அருணகிரி சொல்லில்
தாளமாய்த் தவழ்ந்தாய் நீ
அழகு முருகனுக்கு திருப்புகழ்ப் பாக்களை
அள்ளித் தெளித்தாய் நீ
கோடிக் கவிஞர்கள் வாழ்வில் விளையாடும்
கோமளப் பூங்கொடி நீ
ஞான விடுதந்து நற்கதி காட்டிடும்
கானாமிர்தக் கடல் நீ

வாணி கலை வாணி - என்
வாக்கில் வரு வாய் நீ (ராகவேந்த்ர)



# 129. வாழ்வு யாழை மீட்டு

சுந்தர மேனி எழில் பாட ஒரு
சொல்லெடுத்து தருவாய் கலைமகளே - உன்
தூய வெள்ளை ஆடைதுள்ளிடும் நீரோடை
தோற்றத்தைக் காட்டுதம்மா கவிமகளே
(சுந்தரமேனி)

சிந்துரத் திலகம் எந்தனின் உலகம்
சிரிப்பெனும் முத்து தனிப்பெரும் சொத்து
பந்தமும் பாசமும் பாவையே நீயே
பவள வாய் திறந்து பேசிடு தாயே
(சுந்தரமேனி)

ஏடுகள் உந்தன் தோடுகள் தாமோ
இலக்கியம் படைப்பதுன் வளைக்கரம் தானோ
வேல் விழிப் பார்வை ஆயிரம் கவிகள்
ஓவியமேஉன் தாள்சரணங்கள்
(சுந்தரமேனி)

கால காலம் கனிந்ததுன் பாட்டு
நீல மாமயில் ஆடிடும் கேட்டு
வாழ்வெனும் வீணையை வாணிநீ மீட்டு
ஞானஸ்வ ரூபிணி நல்வழி காட்டு
(சுந்தரமேனி)



# 130. நாளும் என் நாவினில்

நா... ளும் என் நா... வினில்
வா... ணி நீ வருவதால்
தே.... னிசை பா.... டுகின்றேன்
பா... டுநீ பா... டென
பக்கத்தில் நிற்பதால்
நானிங்கு வாழ்கின்றேன்
தா யே (நாளும் என்)

தாமரை அமர்ந்து நீ ஏடுகள் ஏந்தியே
தன்னந் தனியவளாய் ....
வீணையை மீட்டியே ஏழிசை கூட்டியே
காவியம் எழுதுகிறாய்
ராகங்கள் தாளங்கள் எத்தனை பாவங்கள்
கானம் பொழிந்திடுதே
பூமழை போலுந்தன் பாமழை பெய்யுதே
என்மனம் மகிழ்ந்திடுதே
தா யே (நாளும் என்)

வேதம் உன் கையினில் மாலையாய் உருளுது
சத்தியம் உரைத்திடுதே
நாதத்தின் நாட்டியம் மயில் அதைக்காட்டிடும்
நர்த்தனம் நடந்திடுதே
பாலையும் நீரையும் வேறுவே றாகவே
அன்னம் பிரித்திடுதே
தேவிநின் விழிகளே தெளிவையும் அறிவையும்
வாரிக் கொடுத்திடுதே
தா யே (நாளும் என்)



# 131. மேன்குரல்

நீதான் எனக்கு தேன்குரல் தந்தவள்
நாவினில் இன்னிசை பாடிட வந்தவள் (நீதான்)

தாயே சற்றே தலைஅசை போதும்
நாதப் பிரம்மமே நாட்டியம் ஆடும் (நீதான்)

ஏடுகள் உந்தன் தோடுகள் தாமோ
இலக்கியம் படைப்பதுன் வளைக்கரம் தானோ
வேல்விழிப் பார்வைகள் ஆயிரம் கவிகள்
ஓவியமே உன் தாள்சர ணங்கள் (நீதான்)

அன்னம் உன்னிடம் அசைவுகள் பழக
அழகு மயில்கள் ஆடல்கள் பயில
வெண்மை வண்ணம் நின்னொடு நிலவ
வீணைஉன் கைகளில் நாணியே குலவ (நீதான்)

காலைப் பொழுதினில் நின்பெயர் காயத்ரி
கடும்பகல் முழுவதும் கலைமகள் சாவித்ரி
மாலை வேளையில் வாணி சரஸ்வதி
சாரதா தேவி பாரதி ஆதரி (நீதான்)



# 132. பாமழை பொழிபவள்

நீதான் எந்தன் நாவினில் தேனாய்
பாமழை பொழிகின்றாய் - நின்
வீணையின் நாதம் ஏழிசை கீதம்
ஒலித்திட வருகின்றாய்

கலைமகள் நீதரும் சுவை அமுதம் - எங்கள்
கவலைகள் தீர்த்திடும் கங்கைஜலம் (நீதான்)

தாயே உந்தன் தயவால் எங்கள்
தாகம் தீருதம்மா
நாளும் இன்னிசை பாடுகின்றோம் அருள்
ஞானம் கூடுதம்மா

கலைமகள் நின்விழி கனி மதுரம் - எங்கள்
இதழினில் ஊறிடும் கவிதைலயம் (நீதான்)

பூரண நிலவே புன்னகை ஒன்றே
போதும் போதும் அம்மா
தூயஉன் வெண்மைக் கோலம் அதுவே
ஆனந்த போகம் அம்மா
கோளங்கள் ஆடும் நாட்டியம் உனது
பாதத்தின் தாளம் அம்மா
சாறாய் இருக்கும் சத்திய வடிவம்
சரஸ்வதி நீ அம்மா - சரஸ்வதி அம்மா

கலைமகள் நின்முகம் சுகராகம் - இந்த
ப்ரபஞ்சம் நீ பாடும் சங்கீதம் (நீதான்)



# 133. செந்தமிழ் தருபவள்

எந்தன் நாவில் இசையாய் மலர்ந்து
செந்தமிழ் தருபவளே
இன்ப யாழில் ஏழு ஸ்வரங்களில்
விந்தை புரிபவளே - அம்மா
சிந்தை நிறைபவளே (எந்தன் நாவில்)

வெண் தாமரையில் வீற்றிருந்தே பல
சந்தம் தொடுப்பவளே - எந்தன்
துன்பம் துடைப்பவளே
வித்தகக் கவிதை முத்துக்க ளாலே
அமுதம் படைப்பவளே - அம்மா
அழகில் நிலைப்பவளே (எந்தன் நாவில்)

பண்ணும் பாட்டும் கூத்தும் சேர்த்து
பாடம் சொல்பவளே - என்னை
நாடச் செய்பவளே
பச்சைக் குழந்தை மழலைப் பேச்சில்
பற்றிக் கொள்பவளே - அம்மா
வெற்றியைத் தருபவளே
விண்ணும் மண்ணும் கலையின் வண்ணம்
மின்னச் செய்பவளே - என்னை
எண்ணச் செய்பவளே
கண்ணில் வளரும் அன்னப் பேடே
கலாப மாமயிலே - சோலை
உலாவும் பூங்குயிலே
வாணி சரஸ்வதியே - எந்தன்
வாழ்வின் பெருநிதியே



# 134. ஞானஸ்வரூபிணி

ஞானஸ்வ ரூபிணி சரஸ்வதி - என்
நாவினில் நடம்புரி நாயகி (ஞானஸ்வரூபிணி)

சாரதா தேவி சாவித்ரி
சூரிய ஒளியே காயத்ரி (ஞானஸ்வரூபிணி)

வீணை மீட்டும் பாரதி
வித்யா என்னை ஆதரி
ஆனந்த மயமே மாதுரி
அமிர்த வர்ஷிணி மனோகரி (ஞானஸ்வரூபிணி)

ஹம்ஸ நந்தினி கலைவாணி
அறிவின் தெளிவே மனோன்மணி
பண்ணின் சுகமே பவானி
பதமலர் சரணம் அருள்வாய்நீ (ஞானஸ்வரூபிணி)





# 135. கவிமாரி பொழிவாள்

எண்ணும் முன்னாலே எழுதிக்கொள் என்பாள்
பண்கூட்டிப் பாடென்பாள்
இதுஒரு கவிதை இன்னுமோர் கவிதை
எத்தனை ஆயிரம் வேண்டும் என்பாள் (எண்ணும்)

கண்ணிமைப் பதற்குள்ளே கருத்துக்களைக் குவிப்பாள்
களிநடம் புரிந்திடுவாள்
பெண்ணவள் பேச்சுக்கு எதிர்ப்பேச்சு ஏது
பேதையை மேதை என்பாள் (எண்ணும்)

சின்னக் குடிசையையும் சித்ரக் கூடமாக்கி
சிந்தையைக் கவர்ந்திடுவாள்
மன்னனையும் அங்கே வரவழைத்துக் காட்டி
மாலை போடச் சொல்வாள்
கண்ணுக்குள் உறக்கம் வரும் போது எழுப்பிடுவாள்
காலத்தைக் கேலி செய்வாள்
என்னில் இவள் ஆடும் ஆட்டத்தை என்ன சொல்வேன்
புண்ணியம் செய்து வந்தேன் (எண்ணும்)

## முடுகு

கலைமகள் அருளினில் நனைவதில் ஒரு சுகம்
காவியம் ஓவியம் சிற்பங்கள்
இலையெனில் உலகினில் எங்கணும் போரெனில்
அமைதியும் மகிழ்ச்சியும் அரும்பிடுமோ

பட்ட மரங்கள் துளிர்த்திடும்


பாலையில் சோலை மலர்ந்திடும்

புயலில் தென்றலை இணைக்கிறாள்

புதுப்புது ராகம் இசைக்கிறாள்

கலைமகள் அவளின் கான மழை

கவலையை மாற்றும் கருணை அலை (எண்ணும்)





# 136. எல்லாம் அவள்

**விருத்தம் :**

ஆயகலைகள் அறுபத்து நான்கினுக்கும்
அவள்தான் அடிப்படையே
அறம், பொருள், இன்பம், வீடும் நல்கும்
அன்னை சரஸ்வதியே

**பாடல் :**

ஏடும் மாலையும் ஏந்திய கரத்தாள்
பாடுக என அழைத்தாள் - இசை
பாடுக என அழைத்தாள்
ஏழை என் நாவினில் எழுதிட வருபவள்
வீணையை கையில் எடுத்தாள் - அதை
மீட்டியே சுரங்கள் தொடுத்தாள் (ஏடும்)

ஆடிடும் மயிலும் அன்னப் பறவையும்
நாடியே வந்தனவே - சுவை
நடனம் பயின்றனவே
ஆகம வேதமே நாதசங் கீதமாய்
அருவியாய்ப் பொழிந்ததுவே - என்
அகெமல்லாம் குளிர்ந்ததுவே (ஏடும்)

தாயின் கருவில் எனக்கோர் உடம்பு
தந்தவளும் அவளே
சாமுண்டேஸ் வரியாய் சும்ப நிசும்பர்களை
த்வம்ஸம் செய்தவளே (ஏடும்)

பார்வதிகௌரி மேனியில் பிரிந்து

கௌசிகி யானவளே

கௌசிகி தேவி காளியாய் வெளிவந்து

களம் பல கண்டவளே

பிராம்மணி மஹேஸ்வரி, வைஷ்ணவி, கௌமாரி
ஐந்தரி வந்தனரே

நரசிம்ஹி, வராஹி எனும் சப்த மாதருடன்
கலைமகள் வென்றனளே (ஏடும்)





# 137. தமிழாய்த் திகழ் கலைமாமணி

கலைக ளெல்லாம் அள்ளித் தருபவளே - இளங்
கன்னித் தமிழாய்த் திகழ்பவளே - நல்ல

(கலைகளெல்லாம்)

புலவ ரெலாம் புகழ் கலைமகளே - அறிவு
பொங்கித் ததும் பும் திருவுருவே - நல்ல

(கலைகளெல்லாம்)

வீணையைக் கையினில் நீ எடுத்தாய் - தூய
வெள்ளைக் கலையினையே உடுத்தாய்
வாணி அமுதத் தேன் வடித்தாய் - சுவை
வளரும் காவியம் பலகொடுத்தாய் - நல்ல

(கலைகளெல்லாம்)





# 138. வான்வழி தேன்மழை!

வீணையில் எழும்ஒலி வான்வழி வழிந்தது
தேன்மழை பொழிந்ததம்மா .... .... .... ....

ஓம்எனும் பிரணவம் தான்அது என்பதை
உள்ளம் மொழிந்ததம்மா .... .... அம்மா! (வீணையில்)

மாமலர்ச் சோலையில் நீல எழில்மயில்
பாடலைக் கேட்குதம்மா .... .... .... ....
தாளம் அதிர்ந்திட தோகை அசைந்திட
நாட்டியம் காட்டுதம்மா .... .... அம்மா! (வீணையில்)

வேதம் மலர்ந்திடும் மாலை உருண்டிடும்
வாணியின் ஒருகையில் .... .... .... ....
பாடி மகிழ்ந்திட பக்குவம் வந்திட
ஏடுகள் மறுகையில் .... .... .... அம்மா! (வீணையில்)

தூய்மையைச் சொல்லிடும் ஆடை உடுத்தியே
தாமரை அமர்ந்திடுவாள் .... .... .... ....
தேவி கலைமகள் தாள்கள் பணிந்தவர்
நாளில் நடந்திடுவாள் .... .... .... .... (வீணையில்)



# 139. பரம் பொருள்

இவள்தான் பரம்பொருள்
இலக்கணம் அறிக
அறிவின் கதிர்கள்
ஒளி வீசிடுதே
சரஸ்வதி எனும்பெயர்
சத்திய வடிவம்
சாந்தம் தவழும்
முழுநிலா வதனம் (இவள் தான்)

தூய வெள்ளையே தொடக்கம் என்பதை
சொல்லாமல் சொல்லும் தோற்றம் கொண்டாள்
ஆய கலைகள் அத்தனையும் இவள்
பாதச் சலங்கை ஒலியில் தந்தாள் (இவள் தான்)

வெண்தா மரையில் அமர்ந்த கோலம்
விழிகள் குவிந்த ஆழ்ந்த த்யானம்
பண்கள் மீட்ட யாழினை எடுப்பாள்
பாடல்கள் பாட வாஎன அழைப்பாள் (இவள் தான்)



# 140. சத்திய தேவதை

சத்ய ஸ்வரூபமே சரஸ்வதித் திருமேனி
வெள்ளைக் கலையுடுத்தாள் செந்தமிழ்க் கலைவாணி
(சத்ய)

ரத்ன யாழெடுத்தாள் இன்னிசையை வடித்தாள்
பச்சை மயில்நடனம் பார்த்துக் கவிதொடுத்தாள் (சத்ய)

அள்ளக் குறையாத ஆனந்தச் சொல்லழகி
அன்புவைத்தார் நெஞ்சில் வந்து நிற்பாள் பழகி
கள்ளமில்லாள் கடைக்கண் கருணை மழைபொழியும்
முல்லை நல்லாள் முகத்தில் முறுவல் தேன் வழியும்
(சத்ய)





# 141. கிளி கேட்கும்மொழி

சுவடியில் உள்ளதை சொல்லித் தருவதை
தோளில் அமர்ந்துமே கேட்கும் கிளி
அன்னை மொழி அது என்ன மொழி - அதை
நானும் கேட்டிட என்ன வழி

சரஸ்வதி - அன்பு
தயாநிதி (சுவடியில்)

மனது நிலைகொள்ள மந்திரம் உச்சரிக்க
உனது ஜபமாலை உருள்கிறது
எனக்கும் அதைச்சொல்லி உணர்த்து கலைவாணி
ஏற்றிடு வாயா அருள் தோணி

சரஸ்வதி - அன்பு
தயாநிதி (சுவடியில்)

ப்ரம்மத்தை அடைந்த பின் பேரானந்தம் எனும்
மர்மத்தைக் காட்டவோ ஒருகலசம்
அம்ருதத் துளிகளை அள்ளித் தெளித்திடு
பதம் பெறும் பாக்கியம் கொடுத்திடு

சரஸ்வதி - அன்பு
தயாநிதி (சுவடியில்)



# 142. அருட்பார்வை

எந்த நேரத்திலும் கண் பார்த்திருக்கும் - ஒரு
தே...வி உண்டு அருள் பார்வை உண்டு - மனக்
கோயிலிலே அவள் தீ.... பஒளி - இன்ப
நா.....த மெல்லாம் அவள் பாடும் ஒலி (எந்த நேரத்திலும்)

வான்...வெளியில் வரும் ஓம் .... ஒலியில்
வீ...ணையம் சங் கீ - தமயம்
வா ணியெனும் கலை ராணி யவள்
வாய் மொழியோ தேன் மதுரம்

மா மறையில் தாமரையில்
பூங்கொடியாள் திரு நடனம் (எந்த நேரத்திலும்)

சித்திரத்தில் இனிய செந்தமிழில்
சிறு குழந்தை இள மழலையினில்
கற்பனையில் ஒரு சிற்பம் தனில்
கவிஞனவன் காவியத்தில்
நிற்பது யார் கலைமகளே
நெஞ்ச மெலாம் சரஸ்வதியே (எந்த நேரத்திலும்)

ஆடிவரும் கடல் அலைகளிலே
ஐந்தருவி குளிர் சாரலிலே
தென்றலிலே மண மன்றலிலே
மங்கையர்கள் பே ரழகினிலே
எங்கெல்லாம் கலை எழிலே
அங்கெல்லாம் இருப்பவளே (எந்த நேரத்திலும்)



# 143. என்றும் நின்சாம்ராஜ்யம்

முதலும் முடிவும் இல்லா சாம்ராஜ்யம் - ஒரு
மோகன சௌந்தர்யம்
கலைமகள் அங்கே கொலு இருந்தாள்
கால் மேல் கால் போட்டு அமர்ந்திருந்தாள் (முதலும்)

நிலவின் ஒளியோ அவள் மேனி
நித்திலக் குவியலோ கலை வாணி
புலரும் விடியலோ அவள் ஆடை
பொங்கி வருகின்ற நீ ரோடை (முதலும்)

சத்தியத் தின்உரு வெள்ளை என்பார்
சரஸ்வதி தோற்றம் அதுதானோ
கைத்தலத்தில் ‘வல்லகி’ எனும் வீணை
கலைகளின் சங்ககம் அங்குதானோ (முதலும்)

முடுகு: நான்கு கரங்கள்
ஏந்தும் பொருள்கள்
தாமரைப் பூ ஸ்படிக மாலை, நூலேடு
மழலைப் பைங்கிளி

எண்ணுவாள் - ஜபமாலை / எழுதுவாள் - நூலேடு
சொல்லுவாள் - பைங்கிளியிடம் - அவள்
உள்ளம் ஓர் வெள்ளைத் தாமரை
உள்ளே கோடி உணர்வலைகள்

ஒவியம், காவியம், சிற்பம்
சங்கீதம் / எனும் கலைகள்
எண்ணிலாக் கலைகள் (முதலும்)



# 144. சத்திய வெள்ளம்

இமய பர்வத பனியின் வெண்மை
இவளின் மேனி நிறம்
என்றும் பொங்கும் சத்திய வெள்ளம்
கண்களிலே பரவும்
முழுமதி வதனம் அமுதம் பொழியும்
பவள இதழ்மலரும்
அழகெலாம் இவளிடம் அடைக்கல மாகும்
ஆனந்த நடம் புரியும்

கலைமகள் என்னும் பெயர்கொண்ட இவளை
கண்டுகொண்டேன் நானே
காவியம் ஓவியம் நாட்டியம் சிற்பம்
அனைத்திலும் இவள் தானே (இமயபர்வத)

காலையில் இவள் பெயர் காயத்ரி என்பார்
மா மறையோர் தெய்வம்
நண்பகல் சாவித்ரி என்றே போற்றிடும்
அன்பர்களின் செல்வம்
மாலையில் கலைகளின் சோலையாய் மணக்கும்
'சரஸ்வதி' சரஸ்வதி
நான்முகன் பத்தினி சீர்பெறும் உத்தமி
நலந்தரும் புனிதவதி

கலைமகள் என்னும் பெயர்கொண்ட இவளை
கண்டுகொண்டேன் நானே
நிலைபெறும் புகழ்தரும் விலையிலா மாணிக்கம்
அறிவின் சுடர்தானே (இமயபர்வத)

ஜீவனின் சிந்தனை நாதத்தின் மூலமாய்
வாழ்வை வகுத்திடுவாள்
தயானத்தில் லயிப்பவர் மேல்நிலை எய்திட
ஞானத்தைக் கொடுத்திடுவாள்
வீணையை மீட்டியே ஏழிசை கூட்டியே
ஆனந்தம் படைத்திடுவாள்
வேந்தரும் வந்தே தாங்கிடச் செய்வாள்
சாந்தி அளித்திடுவாள்

கலைமகள் என்னும் பெயர் கொண்ட இவளை
கண்டுகொண்டேன் நானே
கலையா நிதிஇவள் கருணை நதிஇவள்
உயிரே இவள் தானே (இமயபர்வத)





# 145. மஹா சரஸ்வதி

இமய பர்வத சிகரம் தவழ்ந்திடும் அழகு வெண பனியோ
புனித கங்கையின் அலை அளாவிடும் நுரைகள் என்பதுவோ
அமரர் வாக்கினில் தவழும் கவிகளோ ஆனந்த வடிவோ
'சரஸ வதி' எனும் சரஸ்வதி இவள் புதிய நில வொளியோ
(இமய பர்வத)

விழிகள் மருண்டிடும் ஸ்படிக வெண்மையில்
கௌரி நடந்து வந்தாள்
உடலில் வேறோர் உருவம் வெளிப்பட
கௌசிகி என்றாள்
உலக்கை கலப்பை வில்..... அம்புடன்
சங்கும் சக்கரமும்
மணியும் சூலமும் ஏந்தும் எண்கரம்
சிங்கத்தில் அமர்ந்தாள் (இமய பர்வத)
ஹூம் எனும் ஒலி தூம்ர லோசனை
உதறித் தள்ளியதே
காளி வந்தனள் சண்ட முண்டரை
கீறி விழுங்கினளே
சாமுண் டீஸ்வரி ரக்த பீஜனின்
உதிரம் குடித்தனளே
போர் முடிந்தது சும்ப நிசும்பரை
சண்டி சாய்த்தனளே

சரஸ்வதி வாழ்க! சாமுண்டி வாழ்க!
சண்டிகா வாழ்க! சத்தியம் வாழ்க!



# 146. சாவித்ரி - காயத்ரி

காஷ்மீர தேசத்தின் கலைமாமணி
கன்னியா குமரியின் பாலாவும் நீ
வேத வேதாந்த ஸ்வரூபினி
யோகியர் போற்றுகின்ற மனோன்மணி
சரஸ்வதி சாவித்ரி காயத்ரி - நீ (காஷ்மீர)

சங்கீத ஸ்வர வாணி சரிகம பதநி
எங்கும் இசை முழங்கும் இன்பக் கோகிலம் நீ
வெண்தா மரை அமர்ந்த வித்யா மோஹினி
வீணையினால் ஞானப் பாதை அமைப்பவள் நீ
சரஸ்வதி சாவித்ரி காயத்ரி - நீ (காஷ்மீர)

பரம் அபரம் காட்டும் பூர்ண கும்பம்
நவமணி யாவும் அங்கு அசைந்தாடும்
இதம் தரும் மோஹனம் முகவதனம்
இதழ்க்கடை ஓரம் ஒரு சுகராகம்

முடுகு :

எண்ணும் எழுத்தும்
கண்ணெனத் தகும்
சின்முத் திரையால்
மனம் அங்கு லயம்
பண்ணும் பாட்டும்
அமிர்த கலசம்
அன்னையின் அன்பே
வரத ஹஸ்தம்
சரஸ்வதி சாவித்ரி காயத்ரி நீ (காஷ்மீர)



## 147. சத்தியம் நித்தியம்

நீதான் சத்தியம் நீதான் நித்தியம்
நீதான் வேத புத்தகம்
நீதான் ஜபதபம் யாகம் யோகம்
நெஞ்சகம் கொஞ்சிடும் அஞ்சுகம் (நீதான்)

மனமெனும் மத யானையை ஒடுக்கி - சன்
மார்க்கத்திலே எனை நல்வழிப் படுத்தி
உபதேச மந்திரம் செவியில் உணர்த்தி
ஓங்கார ரீங்காரம் இதயத்தில் நிறுத்தி

த்யானத்தில் உந்தன்
தரிசனம் தந்தனை
ஞானமும் கல்வியும்
நலந்தரச் செய்தனை
வாணி சரஸ் வதியே - என்
வாக்கில் வளர் மதியே (நீதான்)

செல்லும் இடமெலாம் தேவி நின் தரிசனம் - என்
சிந்தைக்கு மட்டுமே தெரிகின்ற ரகசியம்
அல்லும் பகலும் உன் ஆனந்த பரவசம்
அம்மா என் செயல் எல்லாம் உன்வசம்

நெஞ்சக் குகையில்
கனலும் நெருப்பு
உந்தன் பொறுப்பில்
எந்தன் விருப்பு
வாணி சரஸ்வதியே - என்
வாக்கில் வரும் நதியே (நீதான்)



# 148. ஆனந்த நாட்டியம்

மோனமும் ஞானமும் கூடும் போதே
முற்றும் நீ தெரிவாய்
ஆனந்த நாட்டியம் ஆடும் மயில்மேல்
அன்னை நீ வருவாய்

(மோனமும்)

விண்ணென் றொலிக்கும் வீணை நின் வரவை
பண்கொண்டு மீட்டிடுமே
மென்மையைத் தாங்கிடும் நுண்மையைக் காட்டிடும்
அன்னம் தோன்றிடுமே

(மோனமும்)

மந்திரம் சொல்லும் தந்திரம் உணர்த்தும்
மாலை சுழன்றிடுமே
மனத்தின் ஒளியில் பிறக்கும் கவிகள்
ஏடு சுமந்திடுமே
இந்திர பதவி வந்தும் என்ன பயன்
உன்திறம் இல்லை யென்றால்
வந்ததைக் காத்திட கொண்டாடி மகிழ்ந்திட
வாணி நின் அருள் வேண்டும்

(மோனமும்)



# 149. நாதஸ்வரூபிணி

ஒலிகளுக் கெல்லாம் உயிர் கொடுத்தாய்
உயிர்களுக் கெல்லாம் அருள் கொடுத்தாய்
பொருள்களுக் கெல்லாம் உருக் கொடுத்தாய்
புதுப்புது அழகுகள் நீ படைத்தாய்

காலத்தின் மாற்றங்கள் கண்ணாலே
கலைகளின் தோற்றங்கள் உன்னாலே
ஞாலத்தின் சுழற்சிகள் தன்னாலே
நடத்திக் காட்டிடும் பெண்ணாளே

வாணி.... கலை.... வாணி.... என்
வாக்கினில் சுவைத்திடும் தேன் நீ (ஒலிகளுக்கெல்லாம்)

எண்ணம் தானே மொழியாகும்
எழுத்தாகும் பின் செயலாகும்
இயக்கம் எதற்கும் நீ ஆதாரம்
இசைவிப்பது நின் பாதாரம்

பாதம் அதனைப் பற்றிக் கொண்டேன்
படிப் படி யாகக் கற்றுக்கொண்டேன்
ஓசையை அடக்கி வாசித்தேன்
உண்மை உன்னை நேசித்தேன்

வாணி.... கலை.... வாணி.... என்
வாக்கினில் சுவைத்திடும் தேன் நீ (ஒலிகளுக்கெல்லாம்)

என்றும் இருப்பது ஓங்காரம்
அதனை மறைப்பது அகங்காரம்
நன்று தெரிந்தபின் ஹ்ரீங்காரம்
நாயகி வண்ண அலங்காரம்

கண்ணில் தெரியும் காட்சி எல்லாம்

உன்னை அறியும் சாட்சியன்றோ

சண்பக மணமே சந்தனமே

சரஸ்வதித் தாயே வந்தனமே

வாணி.... கலை.... வாணி.... என்

வாக்கினில் சுவைத்திடும் தேன் நீ






# 150. வேதம் வெண்தாமரை

வேத வெண்தாமரையில் வீற்றிருக்கும் தேவிநின்
பாத பங்கயம் பணிகின்றேன்
அருள்புரி க்ருபாகரி சரஸ்வதி (வேத)

நாதம் ஒலிக்கும் இடமெலாம் தரிசனம் - நல்ல
கீதம் இசைக்கும் இடமெலாம் உன் நாட்டியம்
வீணையை மீட்டிடும் வாணியே - கலை
வித்தைகள் காட்டிடும் ஞானியே
அருள்புரி க்ருபாகரி சரஸ்வதி (வேத)

கல்லும் கரைகின்ற கவிசொல்லும் மலர்வாய் - நெஞ்சை
அள்ளும் வெள்ளைப் பட்டுடை மேனியளே
செல்வக் கருவிழிப் பார்வையில் ஜெகமெலாம் - மகிழ்ச்சி
துள்ளச் செய்திடும் சுந்தரி மனோஹரி
அருள்புரி க்ருபாகரி சரஸ்வதி (வேத)





# 151. ஸ்ரீ சிருங்கேரி சாரதா

**விருத்தம் :**

ம்ந்த்ராணாம் மாத்ருகா தேவி ஸ்ரீ சிருங்கேரி சாரதா
வந்தாள் வரம் தந்தாள் என் வாக்கினிலே நின்றாள்
நிலைத்தாள் நித்த நித்தம் கவிபாட
அழைத்தாள் அருகே வரச் சொல்லிக்
களித்தாள் அளித்தாள் திருத்தாள்
சிலிர்த்தேன் ஜன்மம் கடைத்தேறினேனே.

**பாடல் :**

அம்பிகை பாதம் சரணாகதி - அவள்
அருள் ஞான போதம் மனநிம்மதி
முன்ஜன்ம ப்ராரப்தம் திருச்சந்நிதி
முன்வந்து நிற்கின்ற புண்யகதி
(அம்பிகை)

துங்கா எனும் மங்கை தூயநதி
வந்து பூஜை செய்யும் மலர்த்திருவடி
சிருங்கேரி ஸ்வாமிகள் போற்றும் நிதி
ஸ்ரீ சக்ரம் வீற்றிருக்கும் சிந்தாமணி
(அம்பிகை)

மாங்கலங்கள் நல்கும் ஸ்ரீசரஸ்வதி
சந்திர காந்த ஒளி முகவதனி
வந்தாரை வாழ்விக்கும் கற்பகக்கொடி
வாக் வாதினி சாரதா வடிவழகி
(அம்பிகை)



# 152. ஸ்ரீ சாரதாம்பிகை

ஞான ரூபிணி கான மாமணி
வீணை மீட்டுவாள் வாணி சரஸ்வதி
மோன முத்திரை அக்ஷமாலையும்
அமிர்த கலசமும் அநுக்ரஹம் தரும்

(ஞானரூபிணி)

மேகம் சூழ்ந்திடும் சாரல் தூவிடும்
சோலை யாவிலும் தளிர் துளிர்த்திடும்
தீப ராத்திரி நாட்கள் ஒன்பதும்
பூஜை ஏற்பவள் சார தாம் பிஹே
காளி யாகவும் லக்ஷ்மி யாகவும்
கலை வளர்த்திடும் வித்யா வாகவும்
வாக்கு தேவதை வாழ்வு வழங்குவாள்
ஆதி சங்கரர் நாவில் விளங்குவாள்

(ஞானரூபிணி)

ஸ்ரீ சக்கரம் அமரும் ஆஸனம்
தோகை மாமயில் அன்னை வாஹனம்
ஏழு சுரங்களில் தேனை வார்க்கிறாள்
பாடுவார் புகழ் பரவப் பார்க்கிறாள்
தூய வெள்ளுடை அன்ன மென்னடை
துள்ளும் அருவியும் வெள்ளைக் கமலமும்
தாயின் பின்னணி அவளின் கண்மணி
ஞாலம் காத்திடும் நன்மை சேர்த்திடும்

(ஞான்ரூபிணி)



# 153. அமுதமயம்

சந்திர மண்டலம் பொழிகின்ற அமுதம்
சாரதா தேவியின் திருமுக வதனம்
துங்க பத்திரை நதிக்கரை யோரம்
சங்கரர் பீடம் அவள் சந்நி தானம்
(சந்திர மண்டலம்)

கண்களால் இதயம் கவர்கின்ற கோலம்
மங்க ளங்கள் மலர்கின்ற நேரம்
கலைகளுக் கெல்லாம் அவளே மூலம்
கையினில் ஜபமாலை கனிவது ஞானம்
(சந்திர மண்டலம்)

மலர்வாய் திறந்தால் வித்யா தானம்
விரல்கள் அசைந்தால் வீணையின் நாதம்
மறைகள் யாவும் அவள்புகழ் பாடும்
மயிலும் அன்னமும் நாட்டியம் ஆடும்
(சந்திர மண்டலம்)

மனமெனும் வெள்ளைத் தாமரைப் புஷ்பம்
சரஸ்வதித் தாய் அதில் நித்தம்பரத் யக்ஷம்
நாவில் என்றும் அவள்திரு நடனம்
நாளும் பொழுதும் ப்ரம்மா னந்தம்
(சந்திர மண்டலம்)



# 154. ஸ்ரீ சாரதாம்பிகை

துங்க பத்ரை நதிஓரம்
ஸ்ருங்கேரி சந்நிதானம்
வெண்தா.... மறைபீடம்
வீற்றிருக்கும் அலங்காரம்

சாரதாம் பிஹே - அம்மா சரஸ்வதியே
சரஸ்வதி தேவியே (துங்கபத்ரை)

கார்கூந்தல் வகிடெடுத்து
கண்ணுக்கு மைவைத்து
தாடங்கம் செவி அணிந்து
சாய்ந்தாடும் கழுத்தினளே
வாயினிக்கும் பூச்சிரிப்பு
வைரமணிப் பொன்மார்பு
தீக் கொழுந்தோ உன்மேனி
சிற்றிடை அசைபவளே

சாரதாம் பிஹே - அம்மா ஸரஸ்வதியே
சரஸ்வதி தேவியே (துங்கபத்ரை)

இடதுகரம் ஏடேந்தும்
வலது கரம் வாழ்வு தரும்
கிளி ஒன்று தோளின் மேல்
மழலை மொழி பயின்றிருக்கும்
இரு காலும் மடித்தமர்ந்த
எழிற் கோலம் மறந்திடுமோ
கலைப் பிறை அணிந்தவளே
கருணை மழை பொழிபவளே

சாரதாம் பிஹே - அம்மா சரஸ்வதியே
சரஸ்வதி தேவியே (துங்கபத்ரை)



# 155. சிருங்கேரி ஞானபீடம்

சாந்தியில் தவழ்கின்ற துங்கபத்ரைக் கரையோரம்
ஆதி சங்கரர் அமைத்த ஸ்ருங்கேரி ஞானபீடம்
சாரதா தேவி எனும் சரஸ்வதி சந்நிதானம்
ஆனந்தத் திருக்கோலம் அன்னையின் அலங்காரம்
(சாந்தியில்)

கார்குழல் சுருள்முடியில் பால் நிலா ஒளி வீசும்
கலைமகள் கண்களிலே கருணை அலைவீசும்
தேவி அவள்வதனம் செந்தாமரை மலரும்
செம்பவள இதழ் திறந்தால் முத்துக்கள் சிதறிவிழும்
(சாந்தியில்)

சரத்நவ ராத்திரியில் சதகண்டி ஹோமம்
பவானி பவனிஅது அழகின் ஊர்கோலம்
அவளே நால்வேதம் ஏழிசை சங்கீதம்
திருப்பாதம் ஸ்ரீசக்ரம் சகல செளபாக்யம்
(சாந்தியில்)



# 156. சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பிகை

துங்கபத்ரைக் கரையோரம் சிருங்கேரி ஞானபீடம்
ஆதிசங்கரர் அமைத்த சரஸ்வதி சந்நிதானம்
சாரதா தேவிஎனும் சத்தியத்தின் மணிமாடம்
சாந்தி ததும்புகின்ற தாயின் திருக்கோலம்
(துங்கபத்ரை)

நாகம் குடைபிடிக்கும் நவமணிச் சரம் தவழும்
கார்கூந்தல் சுருள்முடியில் சந்திரப் பிறை வளரும்
தாயின் ஒருகையில் ஜபமாலை சுழன்றுவரும்
ஏடுகள் மறுகரத்தில் இலக்கியம் படைத்திருக்கும்
(துங்கபத்ரை)

ஸ்ரீசக்ர நாயகியாள் சிரிப்பு மனம்பறிக்கும்
தெய்வீக அலைவீசும் விழிகள் அருகழைக்கும்
சரத்நவ ராத்திரியில் சப்தசதி இசைமுழக்கம்
சதசண்டி ஹோமங்கள் சௌபாக்யம் கொடுக்கும்
(துங்கபத்ரை)

நாளும் கன்யாபூஜை சுமங்கலி பூஜை
ஆயுத புஜையொடு வாஹன பூஜை
கஜபூஜை யாகங்கள் நாதசுர மேளங்கள்
அம்மாவின் அழகதனை கண்ணாரக் காணுங்கள்
(துங்கபத்ரை)



# 157. கூத்தனூர் சரஸ்வதி

நஞ்சை கொழித்திடும் தஞ்சையி லேநீ
நாட்டியம் காட்டுகிறாய்
நன்னிலம் அருகில் பூந்தோட் டத்தில்
ஏழிசை மீட்டுகிறாய்
அரிநா தேஸ்வரம் கூத்தனூர் ஆனது
அன்னை உன்னாலே
அரசவைக் கவிஞன் ஒட்டக் கூத்தன்
குலதெய்வம் நீதானே (நஞ்சை)

தக்ஷிண் வாஹினி நதிக்கரை ஓரம்
தாய்நின் திருக்கோலம்
இச்சை வைத்தவரை வரகவி ஆக்கும் உன்
வாயின் தாம்பூலம்
முத்தமிழ் நேர்த்தியும் எத்திசைக் கீர்த்தியும்
வைத்தகண் பார்வையிலே
சித்தம் லயித்தது சித்தி கிடைத்தது
உன் ஜெய மாலையிலே (நஞ்சை)

நான்முகன் நாயகி ஞான சரஸ்வதி
ஊஞ்சலில் ஆடுகிறாய்
பாலை மட்டும் உண்ணும் அன்ன வா ஹனத்தில்
ஊர்வலம் வருகின்றாய்
யாவரே ஆயினும் பாதத்தில் அர்ச்சனை
ஓதிட வைக்கின்றாய்
ஆய கலைகள் அறுபத்து நான்கினை
அளித்து நீ களிக்கின்றாய் (நஞ்சை)

## கலைமாமணி
## டாக்டர் உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்
## அவர்களின் கவிதை படைப்புகள்

1. விநாயகனே வினை தீர்ப்பவனே!
2. நீ அல்லால் தெய்வம் இல்லை - முருகா! (பாகம் - 1)
3. முருகா! முத்துக்குமரா! (பாகம் - 2)
3. அன்பே சிவம்!
4. திருப்பதி மலை வாழும் வெங்கடேசா!
5. சாமி திந்தக்கத்தோம் தோம்!
   ஐயப்பன் பாடல்கள் (பாகம் - 1 & 2)
6. ஸ்ரீ ராம்! ஜெயராம்!
7. கண்ணா! கார்மேக வண்ணா!
8. நவகோள் நாயகர்
9. நவராத்ரி நாயகியர்
10. ஸ்ரீ சக்ர நாயகி
11. என் தாயே ஈஸ்வரியே!
12. ஓம் சக்தியே! பராசக்தியே!
13. மாரி மகமாயி, காளி கருநீலி
14. அம்மன் பாமாலைகள்
15. செல்வமே! திருமகளே
16. ஜெய ஜெய சங்கர!
17. ஷீரடி செல்வம்

18. அருள் ஒளி
(ஸ்ரீ யோகிராம் சுரத்குமார் பாடல்கள்)
19. ஞாலம் போற்றிய ஞானியர்
20. மாதாவே! மரியே...!
21. மாசிலா ஏசு
22. மழலை செல்வங்கள் (குழந்தை பாடல்கள்)
23. நிலா நிலா ஓடிவா....! (1) (குழந்தை பாடல்கள்)
24. நிலா நிலா ஓடிவா....! (2) (குழந்தை பாடல்கள்)
25. தம்பி உன்னை நம்பி! (குழந்தை பாடல்கள்)
26. புகழோடு தோன்றுக (சான்றோர் பாடல்கள்)
27. காதல்! காதல்!
28. என் இரு விழிகள்
29. எண்ணிப் பார்க்கிறேன்
30. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 1)
31. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 2)
32. தமிழ் மொழிபெயர்ப்புகள் - (பாகம் - 3)
33. பாத மலர்கள்
34. இசை மாலை
35. சாரல்
36. பொங்க புனல்
37. கங்குள் வெள்ளம்
38. இன்பத் தீ
39. செக்கர் வானம்
40. அன்னையடா அன்னை
41. வளரும் பயிர்
42. பொன்மாரி மொழிகள்
43. மலேசிய திருத்தலங்கள்



இருபதாம் நூற்றாண்டின் பக்தி இலக்கியப் படைப்பாளிகளில் குறிப்பிடத் தக்கவர். இவர் தனது பக்திப் பாடல்களால் தமிழிசைக்கு ஒரு புதிய எழுச்சியினை தோற்றுவித்தவர்......!

இருபதாம் நூற்றாண்டின் துவக்க ஆண்டுகளில், வேற்று மொழி கீர்த்தனைகளுக்கு, பாடலின் பொருள் விளங்காமல், வெறும் இராகத்திற்காகவும், இசைக்காகவும் தலையாட்டி வந்த தமிழ் மக்களுக்கு, எளிய மொழியில், இனிய தமிழில், தமிழிசையை அறிமுகம் செய்து வைத்தவர்......!

இவர்...

தமிழிசைக்கும், இறையுணர்விற்கும் இடையே பாலமாய் இருந்தவர்......!

**உளுந்தூர்ப்பேட்டை சண்முகம்** என்று அனைவராலும் அன்போடு அழைக்கப் பெறும் இவர் விருந்தோம்பலில் நிகரற்றவர்......!

ஏறக்குறைய நான்காயிரம் பக்தி இசைப் பாடல் களுக்கு மேல் இயற்றி சாதனை படைத்தவர்......!

இவர், திரை இசைப் பாடல்கள், மொழிமாற்றப் பாடல்கள், கவிதைகள், கவியரங்குகள், சிறப்புச் சொற் பொழிவுகள், பட்டிமன்றங்கள், பக்திப் பாடல்கள், தனிப் பாடல்கள் இயற்றுதல் போன்ற பல சிறப்புத் திறன்களைக் கொண்ட பன்முக ஆளுமை படைத்தவர்.

**நெய்தல்**
பதிப்பகம்